ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருவது)

"நன்மை கடைப்பிடி"  "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு"  "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னுமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—கூ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: யுவஹ மாசிமீ சஉ (16-2-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—ருக.

## தோத்திரம்

வளம்பெறு ஞான வாரிவாய் மடுத்து மண்ணையும் விண்ணையுந் தெரியா
தளம்பெறுந் திரும்பொத் தாவியோ டாக்கை ஆனந்த மாகவே யலந்தேன்
களம்பெறு வஞ்ச நெஞ்சினர் காணுக் காட்சியே சாக்ஷியே அறிஞர்
உளம்பெறுந் துணையே பொதுவினில் நடிக்கும் உண்மையே உள்ளவா றிதுவே.

—தாயுமான சுவாமிகள்.

விளம்பரம்

பருத்தித்துறை, கரைச்சி, பூநகரி வாக்காளர்களுக்கு!

**பருத்தித்துறைப் பகுதிக்கு உங்கள் பிரதிநிதியாக**

இலங்கைத் தமிழருள் முதன்மை பெற்றவரும் பல ஆண்டுகளாக இலங்கைச் சட்டசபையிலும், சட்ட நிருபண சபையிலும் அங்கத்தவராயிருந்தவரும், இலங்கை ஆயுள்வேத வைத்திய சபையின் தலைவரும், அரசினர் ஈட்டுவங்கி ஸ்தாபகரும், அதிகார சபை அங்கத்தவரும், சட்டநூல் வல்லுநரும்,



பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் விஞ்சிய ஞானம் படைத்தவரும், கல்வி அறிவாற்றல் முதலியவற்றில் தலைசிறந்தவரும், அரசினராலும் மற்றைய எல்லாச் சாகியத்தாராலும் நன்கு மதிக்கப்படுபவரும், சிறந்த தேசாபிமானியும், ஒப்பற்ற தலைவருமாகிய

**திரு. க. பாலசிங்கமவர்களையே**

(73) 19-1-36.

அன்புடன் தெரிவுசெய்யுங்கள்!

சித்த நிலைவுஞ் செயுஞ்செயலும் நீயெனவாழ், உத்தமர்கட் கான வுறவே பராபரமே.

## கடிதம்

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

அன்பார்ந்த ஐயா!

தற்பொழுது தங்கள் பத்திரிகையில் சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தைப்பற்றியும் அதன் மனேச்சராகிய திரு. இராசரத்தினத்தைப்பற்றியும் அநேக கடிதங்கள் எழுதப்படுகின்றன. நான் சிலவருஷங்களுக்குமுன் அவரின் பாடசாலை ஆசிரியராயிருந்து அநேக ஆசிரியர்களுடன் சமபாஷித்து அவர்களின் நிலைமையை முற்றறிந்திருக்கின்றேன். சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தினிடம் மூற்பணம் இல்லாததினால், மாதம் மாதம் சம்பளம் கொடுப்பதில்லை என்பது உண்மையே. ஆயின் அரசினரின் உதவிப்பணம் பெற்றவுடன் ஆசிரியர்களின் சம்பளம் கடைசிச் சதமவரையும் கணக்கிடப்பட்டுக் கொடுக்கப்படுகின்றது. பாதிரிமார்களின் பள்ளிக்கூடங்களுக்கு நிதிப்பணம் அதிகம் உண்டு. ஆயின் சைவசமயத்தவர்களின் சமயாபிமானக் குறைவினால் இச் சங்கத்திற்குப் பணவிஷயமாக அதிகம் முடையுண்டு. இத்தருணத்தில ஆசிரியர்மார்கள் புதிய பாடசாலைகள் ஸ்தாபித்தற்பொருட்டும் சைவ சமய வளர்ச்சியின்பொருட்டும், சைவப்பிள்ளைகள் நன்மையினபொருட்டும் தமது சம்பளத்தில் ஒருமாதச் சம்பளத்தைத் தியாகஞ்செய்தாலும் அதனால் குறையில்லை என்பதே எனது அபிப்பிராயம். கிறிஸ்தவ பாடசாலைகளில் சம்பளமமுற்றாகக்கொடுக்கின்றார்கள் என்று பகிரங்கமாகப் புகழுகின்றார்கள். நான் ஒரு கிறிஸ்தவ பாடசாலையில் படிப்பிக்கலாமென நிச்சயித்தபொழுது ஒரு கிறிஸ்தவர் சொன்னதாவது:– "தம்பி சம்பளம் முற்றாகக் கொடுப்பார்கள்; ஆனால் அவர்கள் கோயிலுக்கு ஒருபாகங் கொடுக்கவேண்டும். கொடுக்காவிட்டால் உத்தியோகத்திற்கு இரண்டுமாதத்திற் பங்கம்வரும்" அக்காசு நரகத்தில் விழும் எங்கள் ஆத்மாவிற்கு இரட்சிப்பு வேண்டப்போலும். நாங்கள் எங்கள் சமயாபி விருத்தியின்பொருட்டு ஒருமாதச் சம்பளத்தை விட்டுவிட்டால உடனே "அங்கே கொள்ளை அடிக்கின்றார்கள், சம்பளம் கொடுப்பதில்லை" என்று இப் போலிப்புடவை போர்த்த சுயநலப் புலிகள் கூக்குரலிடுகின்றார்கள். இவர்களின் கையாள் ஒருவர் அரசாங்க சபையிலும் கூக்குரலிட்டுத் தமது குணம் தன்மைகளைக் காட்டிவிட்டார்.

நான் ஒருவருடமாகச் சைவ வித்தியாவிருத்திச் சங்கப் பாடசாலையில படிப்பித்தபின் சர்வகலாசாலைக்குப் போகநேர்ந்தது. அப்பொழுது மிஞ்சிநின்ற எனது சம்பளத்தைப் பெறும்பொருட்டுக் கந்தோருக்குச் சென்றேன். எனக்குப் புத்திமதிகள் கூறியபின் தமது கிளாக்கைக்கூப்பிட்டு "உபாத்தியாயரின் சம்பளத்தை முற்றாகக்கொடுக்கவும்" என்று கூறினார். இவர் உபாத்தியாயருக்குச் சம்பளங்கொடாவிடின அவர்கள் இவர்கள்மேல் பகைமைபூண்டு இப்பதவியினின்று இவரை விலக்கிவிட எத்தனியாரகளே? ஆசிரியர்மார்களுக்கும இராசரத்தினமவர்களுக்குமிடையில மிகுந்த நட்பும ஐக்கியமும இருந்துவருகின்றது. சுயநலம்கருதும சில லோக்கல மனேச்சர்மாரும, இவரினமேல் அழுக்காறுகொண்ட சில போலித்தலைவர்களும, அரசாங்க காரியத்தில இவருடன வேறுபட்டிருக்கும கட்சியினரும, நரகத்தில நம்மை விழவிடாது இரட்சிக்கவந்த பாதிரிமாரகளும, கனவிலும் இவரைமறவாக் கதம்பாலிக்கரும இவரை எதிர்த்துச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை அழிவிற்குக் கொண்டுவர ஆலோசிக்கின்றனர். சைவசமயாபிமானிகள யாவரும் இவர்களின் சூழ்ச்சிகளை எதிர்த்து, சைவ வித்தியாவிருத்திச் சங்கத்திற்குத் தம்மாலியன்ற ஆதரவு அளிப்பார்களாக.

கொழும்பு 12-2-36 } யாழ்ப்பாணவாசி.

## சுப்பிறீம்கோட்டு விசாரணை

நான்காவது வழக்கு

# துப்பறியும் பொலிசைக் கற்பாறையிற் தள்ளிய வல்லிபுரம்.

## ஒரு வருடச் சிறை.

ஐந்தாவதுவழக்கு

# கட்டுவன் செல்லி கொலை.

## என் உயிரும் அவள் உயிரும் ஒன்று

## இருபது வருடச் சிறை

(நமது நிருபர்)

யாழ்ப்பாணம் 10.

யாழ்ப்பாணம் சுப்பிறீம்கோட்டில் நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்களதும் ஆங்கிலம்பேசும் ஜூரிக் கனவான்களதும் முன்பாக, ஸ்ரீமதி சிதம்பரம் அவர்களைக் கொலைசெய்ததாக வுள்ளதோர் வழக்கில் புலன் விசாரிக்கவந்த துப்பறியும் பொலிஸ் சார்ஜண்ட் மெனேன் என்பவரை ஏமாற்றி அழைத்துக்கொண்டுபோய்க் கடற்கரையிலுள்ள கற்பாறையின்மீது தள்ளிவீழ்த்தி அபாயகரமான காயங்களை யுண்டாக்கியதாக அவ்வூர் வாசியாகிய சங்கரப்பிள்ளை வல்லிபுரம் என்பவர்மீது தொடரப்பட்டவழக்கு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்காளிசார்பாக முடிக்குரிய நியாயவாதி திரு. A. H. R. வீரசூரியாவும், எதிரிசார்பாக நியாயதுரந்தரர் திரு. T. C. இராசரத்தினத்தின் அனுசரணையின்பேரில் நியாயவாதி திரு. S. துரைசுவாமி தம்புவும் விவாதித்தார்கள்.

விசாரணையின்போது காயமடைந்த சார்ஜண்ட் மெனேன் கூறியவற்றின் சாராம்சம் வருமாறு:–

"என்னை அல்வாயில்வசித்த மூதாட்டியாகிய சிதம்பரத்தின் கொலையைப்பற்றிய மர்மத்தை அறிவதற்கு இவ்விடமனுப்ப, நான் எதிரி பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கவும், உளவறியுங் காரணமாக இவனை வேளியே கூட்டிச்சென்றிருக்கிறேன். ஓர்முறை நீதிபதிக்கு வேறோ ஓர் விஷயத்தைப்பற்றி முறையிடவேண்டுமென்றும், தன்னை அவர் முன்னர்க் கூட்டிச் செல்லும்படியும கேட்டுக்கொண்டமையால் எதிரியைக் கூட்டிச்சென்றேன். அப்போது அவன் கிழ மூதாட்டியின் நகைகளடங்கிய பெட்டியொன்றைத் தான் மறைத்து வைத்திருப்பதாகவும் வரின் அதனை எனக்குக் காண்பிப்பதாகவும் சொல்லவே நான் நம்பி எதிரியைக் கூட்டிச்சென்றபோது நான் விலங்கிடவில்லை. கடற்கரையை அடைந்ததின்மேல் தேடிப்பார்த்துவிட்டு வருப்போது எதிரி ஓட்டமெடுத்தான். நானும் துரத்திப் பிடித்தபோது அவன் என்னைத் தள்ளிவீழ்த்தினான். நான் கற்பாறைமீது வீழ்ந்தமையால் காயமடைந்தேன். அனேகரை உதவிக்குக் கூப்பிட்டும் யாதொரு பயனுமில்லை."

அதன்பின் டாக்டர் சோமசுந்தரம், சந்தியா முதலியோர்கள் சாட்சியங் கூறினார்கள்.

நீண்ட ஆலோசனையின்பின் ஜூரிமார்கள் ஏகமனதாக எதிரியைக் குற்றவாளியெனத் தெரிவித்ததின்பேரில் நீதியரசர் எதிரிக்கு ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

5

யாழ்ப்பாணம் சுப்ரீம்கோட்டில் நீதியரசர் M. T. அக்பார் அவர்களதும் ஆங்கிலம்பேசும் ஜூரிக்கனவான்களதும் முன்பாக தெல்லிப்பழையைச்சேர்ந்த கட்டுவன் வாசியாகிய நாகன்-கதிரன் தனது மனைவி செல்லியைக் கத்தியால் வெட்டிக் கொலைசெய்தான் என்பதாகக் கொண்டுவரப்பட்ட வழக்கு கடந்த புதன்கிழமை விசாரணைசெய்யப்பட்டது.

எதிரி கூண்டில் ஏற்றப்பட்டபின்னர் நீதியரசர் அவனைக் "குற்றவாளியா? குற்றவாளியன்றா?" எனக் கேட்டபோது அவன் "ஆண்டவனே, நான் கொலைசெய்தவன்தான். ஆனால் என் உயிரும், அவள் உயிரும் ஒன்று மேலும் என்னைக் கேட்பதில் பிரயோசனமில்லை" என்று கூறினான்.

"அப்பனே, நாம் பொறுப்புள்ளதும், பிரதானமானதுமான கடமையை நிறைவேற்ற இங்கு இருக்கிறோம். நாம் பச்சாத்தாபமற்றவர் என்று நினைத்துக்கொள்ளாதே: எமக்கு உன்மீது பச்சாத்தாபமுண்டு: உனக்கு உதவிசெய்வதற்காகவே நாம் இருக்கிறோம்: இந்த வழக்கில் உனக்கு அநுசரணையானவற்றையும் ஆராய்ந்து செய்வோம்: நீ தீங்கு புரிந்திருந்தால் அதனபொருட்டு (நீ நெடுநாள் இருப்பாயானால்) பச்சாத்தாபமடைவாய். ஆகையால் மனம்சோர்வடையாது கெம்பீரமாய் நின்று நடந்தவற்றைக் கூறு" என்பதாக திரு. அக்பார் அவர்கள் அவனைநோக்கிக் கூறினார்.

விசாரணையின்போது கொலைசெய்யப்பட்ட செல்லி என்பவள் தனது பூமியை விற்றுத் தன் மைத்துனன் ஒருவனுக்குப் பொருள்கொடுத்தமையே சதிபதிகளின் பிணக்கிற்குக் காரணமென்றும், அப்பிணக்கின் பயனாகவே செல்லி கொலைசெய்யப்பட்டாள் என்றும் தெரியவந்தது.

முடிவில், கைபிழைபாட்டின் பொருட்டு எதிரி குற்றவாளி என ஜூரிகள் அபிப்பிராயங் கூறினர்.

பின் நீதியரசர் எதிரியை விழித்து "இது வேண்டுமென்றே செய்த குற்றமோ, கைபிழைபாடான குற்றமோ என்கிற சந்தேகம் தோன்றியபடியால் ஜூரிகள் சந்தேகத்தின்பலனை உனக்குவிட்டு, கைபிழைபாட்டுக் குற்றத்தைமட்டும் எடுத்துக் காட்டுகிறார்கள். அவர்கள் அபிப்பிராயத்தை நான் சரியெனக்கொண்டாலும், இது ஒரு கொடிய குரூரமான கொலையென்று விசாரணையிலிருந்தும் எனக்குத் தெரிந்தது. எனவே, உனக்கு 20 வருடங்களுக்குக்குறைந்த தண்டனை விதிக்கமுடியாது." என்றுகூறி எதிரிக்கு 20 வருடக் கடூழியச்சிறையென்று தீர்ப்பளித்தார்.

## 94 வயதில் குழந்தைபெற்ற தந்தை.

வடக்குக் கலிபோர்னியா நியூபெர்னைச் சேர்ந்த மிஸ்டர் ஜார்ஜ் ஹியூஸ் என்பவருக்கு வயது 94. அவருக்கு முதல் மனைவியின்மூலம் 16 குழந்தைகள் பிறந்திருக்கின்றன. அம்முதல்மனைவி இறந்தபின் 27 வயதான ஒரு ஸ்திரியை இரண்டாவது தாரமாகக் கலியாணஞ் செய்துகொண்டார். இப்போது அவருக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்திருக்கிறது. 94-ம் வயதில் அவருக்குக் குழந்தை பிறந்த விஷயம் ஆச்சரியமானது என்று கூறப்பட்டபோது, அமெரிக்க வைத்திய சங்கத்தைச்சேர்ந்த நிபுணர்கள் அதில் ஒன்றும் ஆச்சரியமில்லையென்று கூறிவிட்டனர். நியூயாக் மருந்து ஆராய்ச்சிக் கழகத்தலைவர் டாக்டர் இயாகோ கிளாஸ்டன் என்பவர் பின்வரும் விஷயத்தைக்கூறி 94-வது வயதில் குழந்தைக்குத் தந்தையாவதில் ஆச்சரியமில்லையென மறுத்துவிட்டார். "ஐயலார்ந்தைச்சேர்ந்த ஜான் இல்லெ என்பவர் 1913 இல் அகஸ்டா என்றவிடத்தில் மரணமடைந்தார். அவர் 12[illegible] வயதுவரை பூரண ஆண்மை உள்ளவராகவே இருந்து குழந்தைகள் பெற்றுவந்தார். அதனுடன் 104-வது வயதில் குழந்தைகளுக்குத் தந்தையானவர்கள் இருவர் இருந்திருக்கின்றனர்.

## மக்டொனல்டிற்கு வெற்றி

பிரிட்டிஷ் சுயேச்சைநாடுகளின் மந்திரியாயுள்ள மிஸ்ரர் மல்க்கோம் மக்டொனல்டு (பழைய மந்திரியின் மகன்) சென்ற பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் தமது தந்தையுடன் தோல்வியுற்றார். எனினும் இன்னோர் உபதேர்தலில் நின்று இப்போது வெற்றிபெற்றிருக்கிறார். அப்படியே அவர் தந்தையும் ஓர் உபதேர்தலினால் வெற்றிபெற்றிருக்கிறார்.


# வெளிவந்துவிட்டது!

திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள் இயற்றிய
**புதிய தமிழ் ஏழாந்தரக் கணிதம்**

ஜே. எஸ். ஸி., எஸ். எஸ். ஸி. வகுப்புகளுக்கும் உபயோகிக்கத்தக்கது.

**கண்ணைக் கவரும் அழகிய பதிப்பு!**
**கருத்தைக் கவரும் உயரிய விளக்கம்!!**

இதுபோன்ற ஒரு கணிதநூல் தமிழில் இதுவரையில் வெளிவந்ததேயில்லை.

**பிரதி விலை ரூபா ஒன்று.**

பிரபல புத்தக வியாபாரிகளிடம் பெறலாகும்.

Publishers :- வட இலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை. (Point Pedro)

(64) 5-1-36.

பத்திரக்கிரயம்
இலங்கை, இந்தியா,
பர்மா ரூபா 4.
மலாய்நாட்டுக்கு வெள்ளி 4.
சீவியசந்தா ரூபா 40.
தனிப்பிரதி சதம் 5.
இந்தியாவுக்கு ,, அணா 1.
மலாய்நாட்டுக்கு ,, காசு 7.

# ஈழகேசரி

விளம்பரவிகிதம்
முதன்முறைக்கு
ஒருகலம் ரூபா 7-00
,, அரைக்கலம் ,, 4-00
,, கால்கலம் ,, 2-50
அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு.

தொகுதி - கூ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: யுவவரு மாசிமீ˚ சஉ (16-2-36) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—நுக

## நாகர்.

[“விவேகானந்தசபை” இயற்றமிழாசிரியர் சிவங். கருணலயபாண்டியப் புலவர் அவர்கள்.]

(பதிப்புரிமை ஆக்கியோர்க்கேயுரித்து.)

(24-ம் இலக்கத் தொடர்.)

நாகன் என்னும் நாகர்குடிமுதலி ஆன்வயிற் றேன்றியாக்கு அவிமன்செய் பரிட்சித்துமன்னன், தட்சக எனப்பெயரிய அரவிறையால் ஏழிரவினுட் கடியுண்டு துஞ்சுக எனச் சினக்காவாது வைத சிருங்கியெனப்படும் அந்தணன் இளைஞன் சேதகக்கொட்டின்மாட் டுறைதருப்ப பசும்பால் பருகும் ஆன் கன்றுகளின் வாய்நுரையுண்டு பெறுது அருந்தவமாற்றிய சமிகி என்பானொரு சீதரான் இணை விழைச்சினுன் ஆண்டோராண்மாவின் (பசு: புருகிய மாவென விரிக்க) கட்டோன்றினன் என மாபாரதம் ஆதிபருவம் ஐம்பதா மத்தியாயம் உரைக்குமென்ப. “ஆன்மகனசலன் மான்மகன் சிருங்கி” யெனச் சிருங்கி முனிவனை மான்மகன் என மணிமேகலை நுவலுகூறும். இச்சிருங்கி முன்னைச் சிருங்கியின் வேருவன போலும். எனவே ஆன்மா (பசு) வின்கண் மகன்றேற்றமும் முதனிலை (பிரகிருதிமாயை)த் திறத்தான் (சதுரப்பாட்டால்) ஒரோவழியுளதாதலியல்பென்பது பழையரது கோட்பாடாகும். அதனுன் நாகனும் நாகினகட் (பசுவின்கட்) டோன்றினுன் என்றல் பாவைவழக்கு (உலகவழக்கு)க் கதைகளுள் இறும்பூதன்றுபோலும். இப்பிசேமுறைக்கே ஞாலத்தின்கண்ணே பிறப்பியலாற் றொடர்புற்று ஓரிமையப் புகழொடு பொலிந்து வாழ்தக்க பலப்பல தனித்தனி மக்கட்குழாமின் பெயரெல்லாம் முதலிகளிற்பெற்ற குடிப்பெயராகவே காணப்படாநிற்ப, நாகர் என்னும் ஒருசார் மக்கட்குழுவின் பெயரொன்றும் மரபின்பெயராகாது பிறிதுபெயராதல் காலம்பற்றிவருஉம் வழக்காற்றேடு மாறுகோடலானும் வாய்மையாமாறில்லை. ஆங்ஙன் அவ்வக்குழாமின் பெயர்கள் குடிப்பெயர்களாகமாறும் நாகரது பழைய பாவை வரலாற்றேடொத்த கடவுண்மை வாய்ந்த வரலாறும் சில வருமாறு :- மறநிலையறஞ்சான்ற துரோணன் எனப் பெயர்பெறும் பாரத்துவாசனுக்குக் கிருமியென்னும் பைத்தொடி கௌதமியின்பாற் றேன்றிக் குதிரைபோலக் கனைத்ததனால் அச்சுவத்தாமவெனப் பெயர்சிறந்தாற்கு வேள்விச் செந்தீக்கட் பல்லவன் என்பானொரு போர்மறமன் பிறந்தனன். அவன் மரபினர் பல்லவர் எனப்படுவர். அவரான் ஆளப்படுவது பல்லவநாடு எனப்படும். இவ்வரலாறு பல்லவர்கள் தாம் வெட்டுவித்த கல்வெட்டு செப்பேடு முதலியவற்றிற் கூறிக்கொள்வதல்லாது ஆரிய மன்னரைப் புகழ்புனைந்து கூறும் இதிகாச புராணங்களுட் காணப்படவில்லையென்ப. பல்லவநாடு பின்னர்ப் பாரசீகம் என வழங்கப்பட்டது. அஃதிற்றைப்பொழுது பெர்சியா (Persia) எனமரீஇ வழங்கப்படும். ஆண்டு வாழுமக்கள் பார்சிகள் (Parsees) எனப்படுகின்றனர் என்ப. பெர்சியாவென்பது காராச்சி மூதுரை (Karachchi) யண்மைப் பார்சிவளைக் கடலோடு (Persian Gulf) புணருஞ் சிந்தியாற்றை (Indus)க் கீழெல்லையாகவுடைய பலுச்சித்தானத்திற்கு (Baluchistan) மேலைப் புறவெல்லையாய்த் துருக்கித்தானத்திற்கும் (Turkestan) அஃகானித்தானத்திற்கும் (Afghanistan) இராக்கிற்கும் (Iraq) காக்கேசியமலைப் பரப்பிற்கு (Caucasia Mountain) நடுவட்பொலியும் பெருவளநாடு பல்லவர்தங் குடிமுதல்வனாகிய பல்லவன் வேள்வி நெருப்பின்கட் பிறந்தமை காரணத்தாற்போலும் பார்சிகள் நெருப்பினை முழுமுதற் கடவுளாக வழிபடுவர். அதனான் மக்கட் பிணத்தினைத் தீக்கொளுவி வெண்பொடியாக்காது கல்லறையின் இட்டுப் புதைத்துப் போகிவர் என்ப. எனவே வேள்விக்கட் கடவுளரை மறைமொழி யியலாக (வடிவமாக) வழிபட்டுப் போற்றும் ஆரிய மரபினரென்பதும் பெறப்படும். இவ்வாரியர்காந்தாரநாடேறிப் (Kandahar-Afghanistan) பனிமலையினுடைய வடமற்பூழை (Kyber Pass) வழியா கலைத்துறையும் அரசியற்றுறையும் குறும்புசெய்தலும் ஆட்டுமாட்டுப் பண்ணைகளை மேய்த்தலும் நாட்டியற்கை வளப்புக் காண்டலும் பற்றுத்துறந்து பார்வலம்வந்து அறிவு பெறுதலும் கலைத்தொழில் பெறுதலும் கலைத்தொழிலைக் காண்பித்துப் பிழைத்தலும் வஞ்சிமேற்சென்ற புரவலர்களாற் சிறைப்படுக்கப்பட்டுப்போதலும் வாயிலாக பனிமலைகாறும் பரந்து கலைத்துறையிற் கைபோய்ச்சிறந்த தமிழகம் புக்குக் குடியேறியபின்னர்ப் பாரசீகம் தனக்கு மேற்கணுள்ள அரபியநாட்டினர் (Arabians) சீரியா நாட்டினர் (Syrians) ஆபுரிக்க (Africa) நாட்டினர், எகித்து (Egypt) நாட்டினர் துருக்கி (Turkey) நாட்டினர் கிரேக்க (Greece) நாட்டினர் உரம (Rome) நாட்டினர் முதலியவர்களான் அகப்படுக்கப்பட்டு ஆண்டு வாழ்வாரெல்லாம் தம் ஆரியக்கோளை (மதம்)யொழித்து முஃகமதமும் (Mohammedanism) கிறைத்தமும் (Christianity) புக்கு வேறுயவழிக் கிரேக்கருடைய பெயராகிய எவனர் (Ionis) என்னும் பெயரால் உரமர் முதலியோரை வழங்குமாறுபோல தமிழராலும் ஆரியத் தமிழராலும் (Ariyo-Tamils) வழங்கப்பட்டனர். பார்சிகளுடைய மெய்க்கோள் (தத்துவசமயம்) சோர்த்துரியம் (Zoroastrianism) எனப்படும். இப்பெயர் சௌராட்டிரம் என்னும் ஒரு பான்மொழிப் பெயரோடும் (Language) ஒப்புநோக்கற்பாலது பல்லவன் நெருப்பின்கட் பிறந்தமையாற் பல்லவர் வன்னியர் எனப்படுகின்றனர். (வன்னி—நெருப்பு) பல்லவர் துரோணர் வழியினராதலிற் றம்மைப் பாரத்துவாச கோத்திரமுடையாரெனவும் பார்ப்பு மன்னர் (பிராமணக்ஷத்திரியர்)எனவும் கூறிக்கொள்ப. பல்லவருடைய மொழி பல்லவியென்பது. பல்லவி மொழி ஆரியமொழியின் றிரிபாமென்க. இத்திரிந்ததன் றிரிபேயாம் பாரசீகமொழியென்பது. பல்லவி ஆரியச்சார்பு மொழியாதலானும் பல்லவர் ஆரியராவர். இவர் ஆரியர்களுள் ஒருபாலராதலின் “ஆரிய மன்னர் பறையி னெழூஉந்தியம்பும், பாரி பறம்பின் மேற்றண்ணுமை” யென்னுழி ஆரியரென்றதூஉம் இவரையேயாம். “ஆரியர் தோதுவன்றிய பேரிசை யிமயம் தென்னங் குமரியொ டாயிடை மன்மீக் கூறுநர் மறந்தபக் கடந்தே” என்னும் பதிற்றுப்பத்து கூறிற்று ஆரிய முனிவரை. “ஆரியர் கயிறுடு பறையிற் கால்பொரக் கலங்கி வாகை வெண் ணெற்றொலிப்ப வேய்பயிலழுக முன்னிலையோரே” என்புழி ‘ஆசிரியர்’ ஆரியக் கூத்தரென்க. வடவாரியர் படைகடந்து தென்றமிழ்நாடொருங்குகாணப் புரைதீர் கற்பிற் றேவிதன்னுடன் அரசு கட்டிலிற் றுஞ்சிய பாண்டியன் நெடுஞ்செழியன் என்புழி ஆரியர் பல்லவர் போலும். இனி, புலவர், கபிலரால் குறிஞ்சிப்பாட்டுப் பாடித் தமிழறிவுறுத்தப்பெற்ற ஆரியவரசன் பிரகத்தனும் பல்லவனேயாதல் வேண்டும். அப்பொழுது பெரும்பாலும் பல்லவர் மகதநாடா (Patna) ண்டுகொண்டிருந்தனர். இவர் முறையே வேங்கி நாட்டுக்கீழைச் சாளுக்கரை வென்று தமிழகம்புக்கு தொண்டை நாடேறி ஆண்டை நாகத்திரையர் துணையிழந்து மெலிந்தமையின் அதனைத்தம்வரைப்படுத்துத்தங்கொற்றத்தினை நட்டபின்னர் தொண்டைமானுடுபல்லவநாடெனவும்பெயர்த்தாயிற்று. பல்லவர் கடல்நெறியினும் மரக்கலம் நடாய்வந்து வீற்றிருந்தமையிற் பல்லவத்திரையர் எனவும்படுவர். மரக்கலம் செலீஇ வந்தேறினூர்க்குப் பெயர்திரையரென்பது. பங்காளத்திரையர் சீனத்திரையர், இலங்கைத்திரையர் என வழங்கியவாறுங் காணக. இம் மெய்ம்மை புலனாகாது தொண்டைமான் இளந்திரையன் என்னுமிடத்து இச் சொற்பொருள் கதைப் படைப்பாகத் திரிந்து மரீஇயது. நாகர்வந்தேறிய யாழ்ப்பாணம் நாகநாடெனப் பெயரெய்தினாற் போல பல்லவர்வந்தேறிய தொண்டைமானாடு பல்லவநாடெனப்பட்டது. சீவகசிந்தாமணிச் செய்யுளிற் சொல்லிய பல்லவநாடு பாரசீகமெனக் கொள்க. பாரசீகம் ஓவியம் முதலிய கலைத் துறையிற் கி. மு. யாண்டு மூவ்வாயிரத்தின் முன்னரேயே கைபோய தென்றநெடுஞ் சொற்கொப்பப் பல்லவமன்னர்கட்டிய காஞ்சிபுரக்கோயில் மாவலிக்கோயில் முதலிய வற்றினுடைய கண்ணுள் வினைஞர் கைத்திற மெய்ப்பாட்டுச் சுவைகள் காணவல்ல அறிஞர் கண்ணினை மனத்தினை உண்ணுவன போல்வன வாகா நின்றன எனப்புகழ்ப. இவர் பெரும்பாலும் தாம்பிறந்த நெருப்பின் கிழாராகிய செந்தீவண்ணமைச் சிவபெருமான் திருவடியை வழிபடும் கடப்பாட்டினர். இவர் ஆட்சிக்காலத்தேதான் நம்மனோர் உய்வான் நாயன்மார் பலர் இறங்கித் திருவருள் வயத்தினராய் வன்றொண்டு மென்றொண்டுமாய அரும்பெரும் செயல்கள் செய்து சிவமலைக்கண்ணின்றும் ஊற்றெடுத்து வழிந்த திருவருள்வெள்ளம் பெருகியோடும் பேரியாறுகளாய் விளங்கிச் சிவன்மைப் பயிர் செழிப்பித்தனர். அதனாலன்றே,

“கருமையார் தமர்நம்மைக் கட்டிய
கட் டறுப்பிப்பானை, அருமையாந் தன்னு
லகத் தருவானை மண்ணுலகம் காவல்பூண்ட,
உரிமையாற் பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ்செய்யும், பெருமை
யார் புலியூர்ச்சிற் றம்பலத்தெம் பெருமா
னைப் பெற்றாமன்றே”

என்றாற்போலப் பொய்யடிமையில்லாத புலர்களாகிய தேவாரமுதலிகளானும் விதந்தெடுத்துச் சிறப்பித்தோதுமாறு கருவிலே திருவுடையராயினர். பல்லவர் ஆட்சிக்கண்ணேதான் திருநீலகண்ட சிவாசாரியார் வேதாந்தச் சூத்திரத்திற்குப் பேருரைவரைந்து சிவாத்துவ சைவத்தை கிரீஇயனர் என்பர். பல்லவர் துணைவலிகொடு ஆரியப்பார்ப்பனர் பலர் தமிழகம் குடிசெய்தனர் என்பர். ஒருசாரார் தமிழகத்தே சிவன்மை பரவிற்றும் ஓவியம் முதலிய கலைத்துறை பரவிற்றும் இவரையடிச்சுவடு தழீஇச்சேர சோழபாண்டியரும் சில வழிபாட்டின்கண் ஊற்றமுடையராயினமையும் ஓவியம் முதலிய கலைத்துறை வளர்த்ததூஉம் இப்பல்லவரானேயாமெனக் கூறுப. அது பொருந்தாது. முதற்றமிழகத்தே கண்ணுதற்கடவுள் இறையனாராய் வீற்றிருந்தாரென்றலானும் தமிழ்மொழிக்குச்சிறந்த பொருளியல் நூல்களும் அக்கடவுளது திருவருட்செயலைப் புறப்பொருட் பாடாண் திணை முதலியவற்றிற்றுறைகோவா நின்றமையானும் பல்லவராட்சித் தொடக்கத்தின்முன் நிகழ்ந்த நாயன்மார் பலர் வரலாறு திருத்தொண்டர் புராணம் கூறலானும் பல்லவருடைய கட்டிடவமைப்புக்களினின்றும் திருச்சிற்றம்பலம் வாலவாய் நெல்வேலி முதலியவற்றுற் கட்டிடவமைப்புகள் வேறுபடலானும் மணிமேகலையில், “மகதவினைஞர் மாராட்டக் கம்மரும் அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும் தண்டமிழ்வினைஞர் தம்மொடு கூடிக்கொண் டினிதியற்றிய குச்சரக் குடிகை” எனச் சிறந்தாரொடு தண்டமிழ் வினைஞரையொப்ப எண்ணுதலானுமாம். பல்லவர்கொற்றமேற்கொடு தொண்டைநாட்டை அடிப்படுத்துப் பாலாற்றுத் துறைமுகத்து விட்டிருந்து பாசறை யமைத்தது கி. பி. யாண்டு மூன்றாவது நூறென்ப. சென்னபட்டணத்தை யடுப்ப பல்லவபுரவம் என்பதோரூர் பல்ல

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.)

**உதவி செய்தலாற் கேடு வருமெனி லக்கேட்டைத் தன்னை விற்றுகினுங் கொள்ளக் கடவன்.**

# யாழ்ப்பாணத்தில் தேர்தல் ஆரவாரம்.

## எங்குமில்லாத நூதன வேடிக்கைகள்

## பருத்தித்துறைப்பகுதியில் இருபகுதியினரும் வெள்நுரை தள்ளுகின்றனர்

### யாழ்ப்பாணப்பகுதியில் சமயத்துவேஷமும் கிளப்பப்படுகிறது

### அரசியல் விஷயமும் ஒரு யோகியும்

("டெயிலி நியூஸ்" விசேஷ நிருபர் கூறுவது)

**1**

யாழ்ப்பாணப்பிரிவு

அபேட்சகர்கள்:

திரு. நெவின்ஸ் செல்வத்துரை
திரு. அ. மகாதேவா

சென்ற தேரிவு

திரு. A. மகாதேவா 10627
திரு. S- இராசரத்தினம் 6110

இம்முறை இப்பிரிவுக்கு அபேட்சகராக நிற்பவர்கள் திரு. A. மகாதேவா அவர்களும், திரு. நெவின்ஸ் செல்வத்துரைப்பிள்ளையுமே. தேர்தல் நடத்துங்கால் இப்பிரிவில் சமயத்துவேஷமும் வகுப்புவாதமும் அதிகம விவாதத்துக்கு வருகின்றது. தற்போது இப்பிரிவில் 59915 வாக்காளர் இருக்கின்றனர். பெரும்பான்மையோர் இந்துக்கள். கிறீஸ்தவர்களுள் கத்தோலிக்கரே அதிகம். அவர்களில் 10000 வாக்காளர் இருக்கின்றனர். சென்ற உபதெரிவில் திரு. நெவின்ஸ் செல்வத்துரையவர்கள் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியாகத் தெரியப்பட்டவர். 40 வருடம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் தலைமை ஆசிரியராகவிருந்து யாவரது மதிப்பையும் பெற்றவர். மூன்று சந்ததியினர் இவருக்குக் கீழிருந்து கல்வி கற்றுள்ளார். அவர்கள இவர்க்கு உதவிபுரிவாரெனச் சொல்லப்படுகிறது. வயதில்முதிர்ந்தவராயினும் இளைஞராகக காணப்படுகின்றார். உற்சாகமும் சக்தியுமுடையராய் யாவர் மதிப்பையும் பெற்றுள்ளார்.

அரசியல் விஷயங்களில் இவ்விரு அபேட்சகர்க்கிடையில் வித்தியாசம் கிடையாது. ஆனால், மகாதேவா அவர்கள் ,தமிழரின் உரிமைகளைப் பாதுகாப்பதில் மிகத் தீரரென மற்றவர்களை நம்பும்படி காட்டுகின்றனர். திரு. மகாதேவா அவர்கட்கு இருவழியில் உதவிவந்து சேருகின்றது. முதலாவது கத்தோலிக்க குருமார். இரண்டாவது யோகர்சாமி. சென்ற உபதெரிவில் கத்தோலிக்கர் மகாதேவனவர்களுக்கு அரசாங்கசபைத்தெரிவில் உதவிபுரிவதாக உடன்படிக்கை செய்துகொண்டனர். இவ்வுடன்படிக்கைக்குக்காரணம் திரு. S. இராசரத்தினமவர்களே. கத்தோலிக்க வித்தியாசாலைகட்கு மாறாக இராசரத்தினம் நடந்துகொண்டாரென், அவர்க்கு மாறாகக் கத்தோலிக்கர் எழுந்தனர். கத்தோலிக்கரின் உரிமைகளைப் பாதுகாக்க மகாதேவன் முன்வந்தனர். யாழ்ப்பாணப்பிரிவில் கத்தோலிக்கர் தொகையில் குறைவாயிருப்பினும் ஒருமித்துநின்று தங்கள் உரிமையை வழங்குவாராதலின் அது பெரும் நன்மையாகவிருக்குமாம்.

ஆரம்பத்தில் கொழும்பிலுள்ள கத்தோலிக்க குருவானவர் ஆலயங்களில் அரசியல் விஷயங்களைக்குறித்துப் பேசி எந்த அபேட்சகர்க்குச் சனங்கள் வாக்குக் கொடுக்கவேண்டுமென்பதைச் சொல்லாதிருக்கும்படி கேட்டுக்கொண்டனர். திரு. நெவின்ஸ் செல்வத்துரையவர்கள் மகாதேவனுடன் போட்டிசெய்வதைக் "கத்தோலிக்க பாதுகாவலன்" பத்திரிகை விரும்பவில்லை. செல்வத்துரையவர்கள் குத்துக்கறணம் போடவேண்டிய அவசியமின்றெனவும், மகாதேவா அவர்களைக் கைவிடவியலாதென்றும், கத்தோலிக்கர் பிரிவடையாது ஒருங்கு திரண்டு நிற்பாரென்றும், இதனால் என்ன அபவாதம்வரினும் காரியமில்லையென்றும் மேற்படி பத்திரிகை கூறுகிறது.

எப்படியாயினும் எத்தனையோ கத்தோலிக்கர் நெவின்ஸ் செல்வத்துரையவர்கட்குத் துணைபுரிய முன்வந்துள்ளார்.

கத்தோலிக்கரால் விரும்பி ஆதரிக்கப்பட்ட மகாதேவா அவர்கட்கு உதவிபுரிய முன்வந்த யோகர்சாமியாரைப்பற்றிக்கூறுவாம். நெவின்ஸ் செல்வத்துரை கிறீஸ்தவராயிருந்தும் இந்துக்கள் அதிகமாகவுள்ள ஒருபிரிவுக்குத் துணிவுடன் அபேட்சகராக வந்துள்ளாரே. யோகர்சாமி மகாதேவர்க்குப் பேருதவிபுரிகின்றனர். கல்வி கல்லாதவர்கள் மாத்திரமன்று எத்தனையோ கல்விமான்களும் இவரால் பயமுறுத்தப்படுகின்றனர். சமய விஷயமாகப் பார்ப்பின் யோகர்சாமியவர்கள் கத்தோலிக்கர் கொள்கைகளை ஏற்பவரல்லர். எப்படியாயினும் கத்தோலிக்க குருமாரும், யோகர்சாமியும் இவரே ஏற்றவரென ஒருங்கு எண்ணுகின்றனர்.

இந்துக்கள் கத்தோலிக்கர்மீது அதிகம் துவேஷமுடையராகக் காணப்படுகின்றனர். யோகர்சாமியின் சரித்திரத்தை எவரும் நன்கறியார். ஆனால் இவரைப்பற்றிக்கூறப்படும் சில விஷயங்கள் உண்மையாகும். இவர் இளமையில் அரசினரின்கீழ் நீர்ப்பாசனப் பகுதியில் ஒரு உத்தியோகஸ்தரா யிருந்தவர். கடைசியாகக் கிளிநொச்சியில் தமது கடமையை ஆற்றினர். அங்கிருக்குங்காலத்தில் தாம் வகித்த உத்தியோகத்தைப் பரித்தியாகஞ்செய்துவிட்டுப் புதியவழியைக் கைக்கொண்டனர். சனங்கள் இவர்க்கு உணவு முதலியன அளிப்பர். மற்றையோர்க்கில்லாத அபாரசக்தி இவர்க்குண்டு. இதுவரையும் இவர் அரசியல் விஷயங்களில் தலையிடாது வாழ்ந்துவந்தனர். ஆனால் பிரேரணைத்தினத்தின்பின் மிக உக்கிரமாகத் தேர்தல்விஷயத்தில் தலையிட ஆரம்பித்தனர். இப்போது மோட்டாரில் இவர்ந்துசென்று மகாதேவனவர்கட்காக வேலைசெய்கின்றனர். நெவின்ஸ் அவர்கட்கு உதவிபுரிவோர் நட்டமடைவரெனச் சொல்கின்றார். சிலர் இவர் செயலைக் கண்டு பயப்படுகின்றாரில்லை. வேறு சிலர் இவர்க்கு மாறாகச் செல்லத் துணிகின்றாரில்லை. திரு. நெவின்ஸ் செல்வத்துரைக்கு உதவி செய்ய வாக்களித்த நியாயதுரந்தரர்கள் சிலர் இப்போது முன்வர அஞ்சுகின்றனர். சிலர் இவர்சொல்வதைக் கவனியாது வேலை செய்கின்றனர்.

**2**

பருத்தித்துறைப்பகுதி

அபேட்சகர்கள்

திரு. K. பாலசிங்கம்
திரு. G.G.பொன்னம்பலம்

சென்ற உபதேரிவு

திரு. G. G. பொன்னம்பலம் 10627
திரு. R. ஸ்ரீபத்மநாதன் 2032

இலங்கையின் வடபாகத்தில், எப்பகுதியிலேனும் இப்பகுதியில்காணப்படும்ஆரவாரம் காணப்படவில்லையெனலாம். இலங்கையின்மற்றெப்பாகங்களிலும் இப்பகுதியில்எழுந்த குரோதம் உண்டோவெனில், இல்லையென்றே கூறவேண்டும். இப்பகுதியில்எங்குசென்றாலும் சனங்கள்வசிக்குமிடங்களெங்கணும் கொடிகளே காணப்படும். பருத்தித்துறை நகரோவெனில் கொடிகளால் முற்றாக நிரம்பியிருக்கிறது. இப்பகுதிக்கு அபேட்சகராக நிற்பவர்கள் மிக அனுபவமும் ஆழ்ந்த அரசியல் ஞானமுமுடைய திரு. K. பாலசிங்கமவர்களும், திரு G. G. பொன்னம்பலமவர்களுமே. பொன்னம்பலமவர்கள் சென்ற உபதெரிவில் திரு. R ஸ்ரீபத்மநாதனைத் தோற்கடித்துத் தெரிவில் சித்தியடைந்தவர். பொன்னம்பலத்துக்கு விடப்பட்டிருக்கும் நிறம் சிவப்பு. பாலசிங்கத்துக்கு விடப்பட்டிருக்கும் நிறம் பச்சையாகும். தொங்கும் கொடிகளின் நிறங்களை நோக்கி நிச்சயிக்கின் பொன்னம்பலத்துக்கே வெற்றியேற்படுமெனச் சொல்லவேண்டும். பொன்னம்பலத்துடன் கூடித்திரியும் இளைஞர்கள் அதிகம் ஆரவாரத்தை விரும்புவர். அதனாலேயே அவரது கொடிகள் எங்கும் காணப்படுகிறது. இரு அபேட்சகரது தகுதிகட்கும் கொள்கைகட்கும் சிறிதும் தொடர்புகிடையாது. பாலசிங்கமவர்கள் மிக ஆழ்ந்த சிந்தையுடையவர். பின்வரும் விஷயங்களை முன்னறிபவர். ஒருகாரியத்தைச் செய்யுமுன் ஆராய்ந்துசெய்பவர். பழைய சட்டசபையில் மிக அரிய வேலைசெய்திருக்கின்றார். நியாயதுரந்தரராகவும் மிக மதிப்புடன் கடமை ஆற்றியுள்ளார். பொருளாதார விஷயங்களைக்குறித்து அவர் எழுதி வெளியிட்ட விஷயங்கட் களவின்று. தொழிலபிவிருத்திநாடி அவர்செய்யும் முயற்சி இம்மாத்திரமன்று.

அரசாங்கசபையை முன்னர் பகிஷ்கரித்து விட்டமையால், உபதெரிவுக்குப் பாலசிங்கமவர்கள் அபேட்சகராக முன் வரவில்லை. உப தெரிவு கொண்டு வருதற்கு இடைவிடாது வேலை செய்த பொன்னம்பலமவர்கள் தேர்தலில் வெற்றியடைந்தனர். ஆனால் ஒருமுறைக்கிருமுறை பருத்தித்துறைப்பகுதியினர்பாலசிங்கமவர்களைப் பழைய சட்டசபைக்குப்போட்டியின்றி அனுப்பினதும் உண்மை.

திரு. பாலசிங்கத்தைப் போலன்றி, பொன்னம்பலமவர்கள் எவ்விஷயத்திலும் முன்பின் பாராது நுழைந்து விடுவர். உற்சாகமாகவும் சத்தப்பிரீதியாகவும் பேசுவர். பேசும் சொற்களுக்குச் செட்டைகளைக் கட்டி ஆகாயத்தில் பறக்க விடுவர். தமிழகம் சிங்களரால் கொள்ளையடிக்கப்படாது பண்டாரநாயக்கர் போன்ற இராக்கதரைப் பொன்னம்பலந் தான் கொல்லக்கூடுமெனப் பருத்தித்துறைப்பகுதி வாசிகள் சிலர் எண்ணுகின்றனர். இவ்வித எண்ணங்கள் வடபகுதிகளில் குடி கொண்டிருக்கின்றன.

பொன்னம்பலத்துக்கு உதவி புரிய சேர். H. L மெல் என்பவர் பருத்தித்துறைப் பகுதிக்கு ஏன் வந்தாரெனச் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. பாலசிங்கம் அரசாங்க சபையங்கத்தவராகத் தெரியப்பெறின் தாம் மந்திரியாக வரவிடமில்லையென மெல் அவர்கள் எண்ணுவதாகப் பலர் பேசிக்கொள்கின்றனர். பொன்னம்பலத்துக்கு மந்திரிப் பதவி கிடைப்பதென்பது கனவிலும் இல்லையாம். ஆகையால், அப்பதவிக்குப் போதிய தகுதி வாய்ந்த பாலசிங்கமவர்களையும் தோற்கடித்துவிடப் பார்க்கின்றனர். மெஸ். பண்டாரநாயக்காவினைக் கூட்டிக் கொண்டுவந்து தமது சார்பில் பேசச் செய்யக் கூடுமென பொன்னம்பலமவர்கள் கூறுகின்றார். ஆனால் புதிதாக ஒருவர்சென்றால் வெளித்தோற்றத்திலிருந்து பொன்னம்பலத்துக்கே சித்தியுண்டாகுமென்று எண்ணுவர்.

பொன்னம்பலத்தின் தேர்தல் தந்திரம் பலவுள அவைகளும் பல்வேறுதன்மையன. திரு. பொன்னம்பலமவர்கள் ஐரோப்பிய உடையை மெஸ். பண்டாரநாயக்காபோல் புறக்கணித்துவிட்டனர். கதர் வேட்டியும் ஓர் சால்வையும் இறுக்கமாக அணிந்த சட்டையுமே இப்போது அவர் உடம்பில் காணப்படும்.

"பாருங்கள் ! நான் உங்களைப் போன்ற ஒருவன். தலைப்பாவுடன் நீண்ட சட்டைமாட்டிய உயர்ந்தவகுப்பினர்போன்றவனல்லன்."

ஏழைக் கமக்காரன் வீட்டுக்குப் பொன்னம்பலம் செல்வார். "ஐயா பசிக்கின்றது; நானும் உங்கள்போலொருவன். ஏதாவது ஆகாரங் கொடுங்கள்" என்பார். ஏழைக் கமக்காரன் என் செய்வான். தன்னிடத்துள்ள மன்னிப்புடன் தன்னிடமுள்ள உணவைக் கொடுக்கின்றான். பறிஸ்டர் பொன்னம்பலம் தம்மிடம் ஆகாரங் கொள்ளவந்தாரேயென்றும் கமக்காரன் ஆனந்தமடைகின்றான். இஃதெல்லாம் இருக்கட்டும் சாப்பிடுவது பெரியகாரியமோ. உங்கள் "வோட்" யாருக்கோ! "இது ஒருபெரியகாரியமா தம்பி" என்கின்றார் ஏழைக்கமக்காரன். அத்துடன் திருப்தியடைவாரா பொன்னம்பலம்? அன்று "என்தலையில் கையைவைத்துச் சொல்வது உண்மையென வாக்குப்பண்ணினால் தான் சாப்பிடுவேன்" என்பார். இதற்குத் தடை யாதென ஏழைக்கமக்காரன் உடனே அப்படிச் செய்வான். பின் நிமிர்ந்திருந்து வெற்றியைத் தாமடைவது நிச்சயமென எண்ணும் திரு. பொன்னம்பலம் உணவருந்த ஆரம்பிப்பார். இவ்வாறே வாக்காளர் நிலைமையாகிறது. தேர்தலின்கெடுதியிவைகளாக ,அவைகட்குப் பொறுப்பாளர் டொனமூர்க்குழுவினரே. தமிழரின் நிலை இவ்வளவு கேவலமடைந்தாய்விட்டது.

**3**

காங்கேசன்துறைப் பகுதி

அபேட்சகர்கள்:

திரு. அ. பொன்னையா
திரு. சு. நடேசன்

இப் பகுதியில் 47991 வாக்காளர் உளர்.

சென்ற தேரிவு

திரு. சு. நடேசன் 8940
திரு. S. சரவணமுத்து 5260

இப்போது தேர்தலுக்கு இப்பகுதியில் முன் வந்தோர் திரு. சு. நடேசபிள்ளை அவர்களும் திரு. அ. பொன்னையா அவர்களுமே. உள்நாட்டவரே தெரியப்பட வேண்டுமென அநேகர் மிகவும் முயற்சி செய்கின்றனர். ஊரவரேபிரதிநிதியாகத்தெரியப்படின், அவர் நாட்டின் குறைகளை

# "எனது கல்விக்கழகம்."

(இஃது, கவியரசர் தாகூர் அவர்கள் அமெரிக்கநாடு நண்ணியஞான்று அங்கு நடாத்திய (My School) என்னும் ஆங்கிலச் சொற்பெருக்கின் மொழிபெயர்ப்பு.)

[மேலைவேலணை, ஆசிரியர், திரு. சே. க. சண்முகம்பிள்ளைஅவர்கள்]

(முற்றொடர்.)

**யா**ன் கழகத்தை ஆரம்பித்த முதற்றொடக்கத்திலே எனது மாணவர்கள் சங்கீதத்தில் வெளிப்படையான விருப்பமுடையவர்களாக இருக்கவில்லை. ஆகவே, தொடக்கத்தில் மாணவர்களைச் சங்கீதம் பயிலும்படி தூண்டி அவர்கட்குப் பயிற்றற்குரிய பண்புவாய்ந்த ஆசிரியனை, யான் வரவழைக்கவில்லை. ஆனால் இயற்கையாகச் சங்கீதஞானம் ஒரு சிறிதமையப்பெற்ற எம்மனோருட் சிலர் அவ்வல்லபத்தைத் தொழிற்படுத்துவதற்கேற்ற சந்தர்ப்பங்களை இடைக்கிடை அமைத்திருந்தேன். இப்படியான சந்தர்ப்பங்கள் நாங்கள் எண்ணுதவகையின் மாணவர் தம் செவிப்புலன்களை சங்கீதவழியிற் செலுத்தின. படிப்படியாக மாணவர்கள் யாவரும் சங்கீதத்தில் மிக்க விருப்பினை வெளிக்காட்டினர்.

இவற்றினைக் கண்ட யான், அவர்கள் சங்கீதப்பயிற்சிக்குத் தக்கவர்களென வெண்ணி, தகுந்த இசையாசிரியனை அவர்சட்கழைத்துக்கொடுத்தேன்.

என்னுடைய கழக மாணவர்கள் வைகறைப்பொழுதில் நித்திரைவிட்டெழுந்துவிடும் வழக்கமுடையவர்கள். எழுந்ததும் தாமாகவே காலைக்கடன்களைமுடித்து நீர்மொண்டு குளிப்பாடுவார்கள். மேலும் தாமாகவே தமக்கேற்ற படுக்கையறைகளைப் பண்புசெய்வார்கள். இவைகளெல்லாம் அவர்கட்குச் சுயபாதுகாப்புணர்ச்சியைக் காட்டுகின்றன. எனக்குத் தியானத் (Meditation) தின்பொருட்டுச் செலவிடும் நேரத்தில் அதிக நம்பிக்கையுண்டு. காலையிற் பதினைந்து நிமிடங்களையும் மாலையிற் பதினைந்து நிமிடங்களையும் தியானத்தின் பொருட்டுச் செலவிடும்படி மாணவர்கட்குச் செப்பியிருக்கின்றேன். இக்காலத்தை மிசமிகச் சிறப்பாக உபயோகிக்கும்படி அவர்களைத் தூண்டியிருக்கின்றேன். ஆனால் கபடர்கள்போன்று தாங்கள் தியானம்செய்கிறார்களென மற்றவர் நம்பும்படி மாணவர் நடப்பதை நான் விரும்பவில்லை. (I do not expect the boys to be hypocrites and to make believe they are meditating) அம்மாணவர்கள் கடவுளைப்பற்றிச் சிந்தனைசெய்யாது, மரக்கொம்பர்களிடையே தத்தித்திரியும் அணிற்கூட்டங்களைப் பார்த்துக்கொண்டிருப்பினும் சாந்தமுடையவர்களாகவும் தன்னடக்கமுடையவர்களாகவும் இருப்பதை யான் விரும்புகின்றேன்.

நிற்க, என்னுடைய கழகத்தைப் பற்றிக்கூறும் எந்த உரைகளும் உண்மையாகவே போதியனவாக இருக்க மாட்டாதென்பதைக் கூறுகின்றேன். அந்தக் கழகமானது ஏனைய கழகங்களைப்போன்று மாணவர்கட்குத் தம்மிஷ்டப்படி நடக்கும் அதிகாரிகளால் அமைக்கப்பெற்ற தொன்றன்று. அந்தக் கழகமானது மாணவர்களுடைய சொந்த உலகு என்றும் அங்கு அவர்கள் தமது வாழ்க்கையைப் பூரணமாகவும் சுதந்தரமாகவும் நடாத்தவேண்டும் என்றும் அவர்கட்குப் பன்முறை பன்னியிருக்கின்றேன். கழகத்தை நடாத்தும் முறைகளை ஆக்குவதில் மாணவர்களும் பங்குபற்றிக்கொள்வார்கள். தண்டனை விஷயங்களை நாங்கள், மாணவரின் மனச்சாட்சியிலேயே தங்கச்செய்தல் வழக்கம். ஆனால் கடைசியாக யான், இப்பொழுது செவிசாய்த்துக்கேட்டின்புறுமன்பர்களை வேண்டிக்கொள்வதென்னையென்றால், என்னுடைய ஆச்சிரமத்தைப்பற்றி ஒரு பொய்யான அல்லது புகழ்ச்சியான பெருமைப்பாட்டினை உடன்கொண்டு செல்லவேண்டாமென்பதே. இந்த விடயங்கள் யாவும் வெளியீடுகளில் வெளிப்படும்பொழுது மிகவும் சுலபமானவைகளாகத் தோன்றும். ஆனால் நான் அந்த விடயங்களை எடுத்துக்கூறிய தன்மை, தெளிவாகவும் பூரணமாகவும் உங்கள் மனதிற்பதியும்படியான சிறப்பற்றதாக இருக்கலாம். மனித சுபாவத்தில், பலப்பல சந்தர்ப்பங்களில் தடைகள் ஏற்படுதல் சகசம்.

மாணவர்களுடைய மனங்கள், உயிர்ப்பொருள்கள் என்பதில், எம்மனோருட் சிலர் நம்பிக்கைக் குறைவுடையவர்களாகஇருக்கின்றனர். (Some of us have a feeble faith in boys' minds as living organisms) ஆனால், மாணவர்கள் மற்றவருரைப்பதைக் கேட்டுக்கொள்கின்ற வகையிற் பல திறப்பட்டவராகின்றனர். அப்படியாக, அங்கு தடுக்கக்கூடாத வகைகளில் மற்றவருடைய மொழிகளினாற் பலனில்லாமற் போகின்றது. மாணவர்கள் தமது தொழிலிற்காட்டும் குறைவுகளானவை, அவர்கள் தமது குறிக்கோட்களை (Ideals) பெறுவார்களோ என்னும் சந்தேகத்தை உண்டு பண்ணுகின்றன. இந்த நிலைமையில் நாங்கள் சந்தேகம் என்னும் பேரிருட் காலத்தைக் கழித்துச் செல்லவேண்டியவர்களாகின்றோம். ஆனால் இப்படியான தடைகளும் தடுமாற்றங்களும் உண்மையின் இயற்கைத் தன்மைகளென்றே கொள்ளவேண்டும். ஒரு மணிக்கூட்டினமைப்பைப்போல நாங்களும் குறிக்கோட்களை அமைத்து அவைகளைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளல் முடியாது. ஆனால் எவராவது தம்முடைய எண்ணத்தில் உண்மையாக நம்பிக்கை வைத்திருந்தால் கட்டாயமாகவே வந்து சம்பவித்துததீரும்வாழ்க்கைத்தடைகளில்பரீட்சித்துப் பார்க்கவேண்டும். போலிவாழ்க்கை முறைகளைப்பார்க்கிலும் மனிதனுடைய ஆத்மாவின் வாழ்க்கைச்சூக்குமத்தில எனக்கு அதிக நம்பிக்கையுண்டு.

கல்வியின் நோக்கம் மனத்தின் சுதந்தரத்தைப் பெறுதலேயென யான் நம்புகின்றேன். (I believe that the object of education is the freedom of mind) இச்சுசுதந்தரம் இயற்கையான சுதந்தர வழிகளாலேயே பெறவேண்டும். வளர்ந்து சாகிய முறைகளைத் தழுவிக்கொண்ட வயதுமுதிர்ந்தவரிலும் மாணவர்களை உணர்ச்சிமிக்கவர் என முன்னர்க்கூறி யாங்கு மீட்டுங் கூறுகின்றேன். ஆகவே, அவர்களுக்கு உணர்ச்சி முறைகளில் கல்வியூட்டுங் கழகங்களே மிகமிகப் பிரதானமானவைகளாகஇருக்கவேண்டும். அத்தன்மைவாய்ந்த கழகங்களே அவர்களின் சொந்தஉலகாகும். "அந்த இடம் வாழ்க்கையின் உயரிய பேற்றை அடைவதற்காகப் பெரியார்கள் கூடிய ஆச்சிரமமாகும். அங்கு வாழ்க்கையானது தியானத்தோடமையாது உண்மைத் தொழிற்பாட்டினை உடையதாக விளங்கும். அங்கு "தேசீயமே" உண்மையாகக் கைக்கொள்ளப்படவேண்டியதென மாணவர்க் கிடித்திடித்துரைப்பதில்லை. அங்கு அவர்கள், மனிதனுடைய உலோகமானது இறைவனுடைய இராச்சியம் என்றும அந்த இடத்தில் தாம் ஒருவராக வாழவேண்டும் என்றும் உணர்கின்றார்கள். அங்கு தினமும் நடக்கும் இயறகைக் கிருத்தியங்களாகிய சூரியோதயம், அஸ்தமனம், என்பனவற்றையும் வானத்தின்கண் விளங்கும மதியினதும் உடுக்களதும் தோற்றங்களைக் கண்டு களிப்பெய்தாமல் விடுவதில்லை. அங்கு இயற்கையன்னையானவள் ஆர்வமிக்க மக்களுக்கு நறுமணமிக்க மலர்களையும் கனிகளையும் உதவிக் களிகூருகின்றாள். அங்கு முதியோரும் இளையோரும் ஆசிரியர்களும் மாணவர்களும் தம்முடைய நாளுணவினை அருந்தும்பொருட்டும், நலமிக்க என்றுமழியா இயல்பிற்றுய உயிர்வாழ்க்கையின் உணவை உட்கொள்ளும போருட்டும் ஓரேமேசையில் உட்கார்ந்திருப்பார்கள். (where the young and old, the teacher and the student, sit at the same table to partake of their daily food and the food of their eternal life)

---

நன்கு எடுத்துக் காட்டுவாரெனச் சொல்லப்படுகிறது. 'நாட்டவருக்கே வாக்கினைக் கொடுங்கள்' என விளம்பரங்கள் எங்கும் ஒட்டப்பட்டிருக்கின்றன. இதன்கருதது யாதெனில், பரமேஸ்வரக்கல்லூரியின் பிரதம ஆசிரியரும் சேர். P. இராமநாதனவர்களின் மருகருமாகிய நடேசபிள்ளை யாழ்ப்பாணத்தவ ரல்ல வென்பதே. சேர் P. இராமநாதனவர்கள் தமது வித்தியாசாலைகளைப் பரிபாலிக்க இவரை மருகராகக் கொண்டாரேயன்றி, வேறு விஷயங்கட்கல்லவென்பதுபலர்கருத்து. இவருடன் போட்டிசெய்யும் திரு. பொன்னையா அவர்களும்ஓர் ஆசிரியராகவிருந்துள்ளார். இவ்விதமாகத்துவேஷம்ஏற்படுவது அதிட்டக் குறைவே. என்செய்வது யாழ்ப்பாணத்தவர் ஓரளவுக்குப் பழையகொள்கைகளை விரும்புபவர். இவைகளால் திரு. நடேசபிள்ளை யாழ்ப்பாணத்தவர்க்குச் செய்த ஊழியங்கள் கவனிக்கப் படாதிருப்பதல்ல. பரமேஸ்வரக்கலாசாலைத்தலைமைஆசிரியராகவிருப்பது பற்றி, மாணவரும் அவர்வள் பெற்றோரும் இவரை ஆதரிக்கக்கூடும். மரவரியை இவர் தான் கொண்டுவந்தார் என, கள்ளுச் சேர்ப்பவர் எண்ணுகிறார்கள்.

இரண்டு விஷயங்களில் இருவரும் ஓரே தன்மை யுடையவராவர். இருவரும்ஆடம்பரவேடம்தரியாதவர்கள். இருவரும் தமிழில்பாண்டித்தியம்பெற்றவர்கள். சுயபாஷை நன்கு பேசக்கூடிய சாமர்த்தியமுடையவர்கள்.

திரு. சு. நடேசபிள்ளை சட்டசபையில் அங்கத்துவம் வகித்த சேர். P. இராமநாதனின் மருமகனுயின், திரு. அ. பொன்னையா அவர்களும் சேர். P. இராமநாதனின் பின் ஸ்தானத்தைச் சட்ட சபையில் வகித்த திரு. அ. அப்பாத்துரையின் தமையனாராவர்.

திரு. அ. பொன்னையா பல்லாண்டுகளாக வித்தியா பகுதியில் அரிய தொண்டாற்றி இப்போது உபகாரச் சம்பளம் பெறுகின்றார். கோப்பாய் அரசினர் ஆசிரிய கல்லூரியின் அதிபராக (Superintendent) பத்து வருடம் கடமை பார்த்தவர். மலையாளம் புகையிலை வியாபார ஐக்கியசங்கத்தில் சேர்ந்து நாட்டவரின் நன்மையைநாடி உழைத்தவர். பொதுவாக ஊரவர்க்கிடையில் இவர்க்கு அதிகம் மதிப்புளதாகும்.


விளம்பரம்

## அரசாங்கசபைத்தெரிவு.

**காங்கேசன் துறைப்பகுதி வாக்காளர்களுக்கு:**
**உங்கள் பிரதிநிதியாக**

நமது நாட்டின் அனுபவங்களை நன்குணர்ந்தவரும், பல ஆண்டுகளாக ஆசிரியராகவும், வித்தியாதரிசியாகவும், ஆசிரிய கலாசாலை அதிபராகவும் தொண்டாற்றி இளைப்பாறியிருப்பவரும், 30 ஆண்டுகளாகக் கல்வி உலகத்திலும், கைத்தொழில், கமத்தொழில் முதலிய பல துறைகளிலும் பெற்றுள்ள அரிய அனுபவத்தின் பெறுபேற்றைத் தமது நாட்டுக்குப் பயன்படுத்த வேண்டுமென்னும்பேரவாவுடையவரும், சமய ஆசாரசீலரும், உதாரண வாழ்க்கையைக் கைக்கொண்டு ஒழுகுபவரும், அரசியல், பொருளாதார நிலை, கல்வித்திட்டம் முதலியவற்றில் தேர்ச்சியுடையவரும், யாவராலும் நன்கு மதிக்கப்படுபவருமாகிய



திருவாளர்

**அ. பொன்னையா அவர்களையே**

**அன்புடன் தெரிவுசெய்யுங்கள்.**

(74) 19-1-36—5 நிறம் சிவப்பு

# இந்தியச் செய்திகள்.

## மகாத்துமாவின் தேகாரோக்கியம்

மகாத்துமாவின் தேகநிலை இப்போது குணமடைந்து வருவதாக அறிந்து சந்தோஷமடைகின்றோம். இவரது குடும்ப வைத்தியராகும் Dr. ஜீவராஜ்மேடா என்பவரும் இன்னுமொரு வைத்தியருமாக இவர் உடம்பைப் பரிசோதித்தனர். இவரைப்பிடித்த நோய் சாந்தியடைந்து விட்டதெனவும் மேலும் இவர்இன்னும் சிலநாட்களுக்கு ஆறுதல்பெறவேண்டுமென்றுங் கூறுகின்றனர். இவர் இன்னும் சில வாரங்கட்கு ஆமதபாத் நகரிலேயே வசிப்பரெனச் சொல்லப்படுகிறது.

## தந்தை மீது துவேஷம்

மகாத்துமாவின் சிரேஷ்ட புதல்வரான ஹிரலால் காந்திக்கும் தந்தையார்க்கும் சென்ற 15 வருடங்களாக வேற்றுமை யிருந்துவந்தது. அரசியல் விஷயங்களில் மகாத்துமா கையாளும் முறைகள் இவருக்கு முழுவிரோதமாகும். தாழ்த்தப்பட்டவர்கள் விஷயத்திலும் இவர்களிருவருக்கும் வேற்றுமையுண்டு. இருவம் ஒருவரையொருவர் கண்டு பேசுவதில்லை. ஹிறலால் காந்தி எங்கு சென்றாலும் அவரையாவரும் புறக்கணித்து வந்தனர். காங்கிரஸ் வாதிகளும் இவருக்கு இடங்கொடார். எங்குசென்றாலும் அவமதிக்கப்பட்டார். இப்போது இவர் ஆத்திரமடைந்து தன்சமயத்தை மாற்றப்போவதாகத் தெரிவிக்கின்றனர். ஹிந்துக்கள புறக்கணிப்பின் தான் பின்யாது செய்யககூடுமென்கிறார். தந்தையார் தம்மை ஒதுக்கியதே எல்லாவற்றிற்கும் காரணம்போலும். இவர் தனது எண்ணத்தைநாட்டமுயன்றதாலேயே எல்லாச்சங்கடமும் வந்தது. மற்றைய புத்திரர்கள்போல வாழ்நதால் ஒருசங்கடமும் ஏற்படாதே. மகாத்மா வினை அது செய்யாதே. இது செய்யாதே எனக் கூறின அவர் கேட்பாரா? இவ்விஷயங்கட்காகச் சமயம் மாறுவதாயின் பரிதாபம்.

## புதிய திட்டமும்

### தேசீயக்கட்சியினரும்

புதிய இந்திய அரசியற் திட்டம் அனுசரணைக்கு விரைவில் வருமெனச் சொல்லப்படுகிறது. ஷெ திட்டப்படி தேர்தல் அடுத்தவருடம் நடைபெறும. காங்கிரஸ் சபையைச் சேர்ந்த சிலர் காங்கிரஸ் தேசியக்கட்சியினரெனக் கூறிக்கொண்டு பிரத்தியேகமாகநின்று தேர்தலில்பங்குபற்றுவாராம். இவர்கட்கு தலைவர் பண்டிதர் மாளவியாவே. இவர்கள் காங்கிரஸ் கட்சியினராயினும் வகுப்புவாத விஷயத்தில் காங்கிரஸ் சபைபோல் மௌனஞ் சாதிப்பவரன்று. முதன் மந்திரி வகுப்புவாத விஷயமாகச் செய்த முடிவினையும் கண்டிப்பவர். இக்கட்சியினர் இந்து மகாசபையின் சார்பாக அபேட்சகராக வரக்கூடும. இதுவிஷமாகப் பண்டிதர் விரைவில் ஓர் அறிக்கை வெளியிடுவாராம்.

## பேராசிரியரின் நியமனம்

ஆந்திரச் சர்வகலாசாலையின் அதிபராகவிருக்கும் சேர் S. இராதாகிருஷ்ணனவர்களை இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையினர் தமது சர்வகலாசாலையில் "கீழைத்தேச சமய சன்மார்க்க" போதகாசிரியராகவிருக்கும்படி நியமிக்கப்பட்டிருக்கிறார். சேர் இராதாகிருஷ்ணனவர்கள் உலகமெங்கும் கீர்த்திபடைத்தவர். இந்துக்களின கலைஞானங்களை எடுத்து விளக்கிய ஆசிரியரில் இவரே தலைமைபெற்றவர். இவரது அறிவுப் பெருக்கையும் தாமறிந்தவற்றை மற்றையோர்க்கெடுத்துரைக்கும் வன்மையையும இவரில் பெரிதும் காணலாம். இதை மேனாட்டுக் கல்விப் பேராசிரியர் பன்முறை போற்றியுள்ளார்.

## வீண் அபவாதம்

பிஹார் பிரதேசத்தில் ஏற்பட்ட பூகம்பம காரணமாக உண்டான உயிர் சேதங்களும் நட்டங்களும் யாவருமறிவர். கஷ்டமடைந்தோர்க்கு நிவிர்த்திசெய்ய இருபகுதியினர் முன்வந்தனர். (1) முதலாவது அரசினர். (2) காங்கிரஸ் கட்சியினர். காங்கிரஸ் சபையினர் ஆரம்பித்த மத்திய நிவிர்த்திச்சங்கத்தினர் செய்த அரியவேலை எவர்தான் அறியார். 50 லட்சம் ரூபாவுக்குமேல் இச்சங்கத்தினர் பரிபாலித்துள்ளார். இச்சங்கத்தின் தலைவர் காங்கிரஸ் தலைவர் பாபு இராஜேந்திரப்பிரசாத் என்பவரே. இவரது நேர்மையைப்பற்றிக் கூறவும்வேண்டுமா? அரசினர் மேற்படி நிதி ஒழுங்காகப் பரிபாலிக்கப் படவில்லையென்றும், மேலும் அரசினரிடம் கொடுக்கப்படின் அப்பணம் அழிவுசெலவின்றிக் கொடுக்கப்படலாகுமென்றுங் கூறியுள்ளார். காங்கிரஸ் சபையினர் சார்பாகச்செய்த வேலையைக் கண்டித்து அதனால் அதன்மதிப்பைக் குறைக்கலாமா? அரசினர் வெளியிட்ட ஆட்சேபங்கட்கு பாபு இராசேந்திரப்பிரசாத் தக்க பதில் வெளியிட்டுள்ளார்.

## ஆந்திரா மாகாண மகாநாடு

ஆந்திரதேச மாகாண அரசியற் கூட்டம் சென்றவாரம் காக்கைநாட்டில் ஸ்ரீமான் C. இராமலிங்கரெட்டியின் தலைமையின்கீழ் மிக விமரிசையாக நடந்தெய்தியது. அச்சபையில் புதிய அரசியல்திட்டம் ஏற்கப்படாதென ஓர் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. மேலும் காங்கிரஸ்கட்சியினர் சட்டசபைகளில் ஸ்தானங்களைக் கைப்பற்றுவதோடு நில்லாது மந்திரிப் பதவிகளை வகித்துப் புதிய அரசியற்றிட்டத்தின் உபயோகமின்மையைக் காட்டவேண்டுமென்றும் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## திறந்துவைக்கப்பட்டது

மகாத்மா காந்தியின் உருநாடு ஒன்று காக்கைநாட்டுக் காங்கிரஸ்சபை மண்டபத்தில் ஸ்ரீமதி கஸின்ஸ் அம்மாளால் திறந்து வைக்கப்பட்டது. அவ்வுருநாடு வெண்நிறமான சலவைக்கல்லால் செய்யப்பட்டது. அதன் பெறுமதி 2000 ரூபாவாம். திறந்துவைக்குங்கால் ஸ்ரீமதி கஸின்ஸ் மகாத்மாவின் குணாதிசயங்களை மிக விபரமாக எடுத்து நன்குரைத்தனர். 1923-ம் வருடம் காக்கைநாட்டில் கூடிய காங்கிரஸ் சபையின் உபசரணைச்சங்கத்தாரே இப்பணத்வத உதவினராம்.

## லாகூரில் கலகம்.

மகமதியர் ஷாஹிட்காஞ் என்னும் பள்ளிவாசல் விஷயமாக ஆரம்பித்த கலகம் இன்னும் முடிவடைந்திலது. அப்பள்ளிவாசலை நோக்கி மகமதியர் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். பொலிஸாரும் இவர்களைக் கைதியாக்கியுள்ளார். இதுவரையில் நூற்றுக்கணக்கானோர் சிறைத்தண்டனை பெற்றனர். சென்றவாரம் 16 பேர் கைதிகளாக்கப்பட்டுப் பின் நீதிமன்றத்தில் ஒருவருடச் சிறைத்தண்டனையடைந்தனர். இப்பள்ளி வாசல் மகமதியர் தம்முடையதெனவும் அது தம்மிடம் ஒப்புவிக்கப்படவேண்டுமெனவும் ஒரு வழக்கு லாகூர் நீதிமன்றத்தில் தொடுத்திருக்கின்றனர். அவ்வழக்கு விளங்கி முடியுமட்டும் அரசினர் அப்பள்ளிவாசலைத் தமது பொறுப்பில் வைத்திருப்பின், தாம் கலகம் செய்யாது விடுவதாக மகமதியர் சொல்லுகின்றனர். சீக்கியரோ அப்பள்ளிவாசல் அமைக்கப்பட்டிருந்தவிடம் தம்முடையதென்றும் மகமதியர் கேள்விக்குத்தாம் இணங்கவியலாதென்றும் கூறுகின்றனர்.

# உடல் நூல்.

(சாவைநகர், ஆசிரியகலாசாலைப் பிரசாரகர்
திரு. நி. வ. வீரகத்திப்பிள்ளை அவர்கள் எழுதியது.)

(உரிமை ஆக்கியோனுக்குரியது)

### 4-ம் அதிகாரம்

### இரத்தமண்டலம். (The Circulatory System)

இத்தோட்டத்துடன் தொடர்புடைய உறுப்புக்கள்யாவுஞ் சேர்ந்து இரத்தமண்டலம் எனப்பெயர் பெறும். தொடர்புடைய உறுப்புக்களைப்பற்றி விபரிக்குமுன் இரத்தமின்னதென்று விபரிப்பது அதிகார முறைமையாகும்.

### இரத்தம் Blood.

முன் அத்தியாயத்தில் கூறப்பட்டபடி நாமுண்ட உணவு வாய்க்குள் சென்றதும் பற்களினால் அரைக்கப்பட்டு உமிழ் நீருடன் கலந்து மாறுதலடைந்து இரைக்குழல் வழியாய் இரைப்பைக்குட் செல்கின்றது. இரைப்பையில் அதன் சவ்வுகள் இறுகி நசிப்பதானால் இரைபிதுங்கி உருண்டு திரண்டுவரப் பாசகமென்னும் புளி உள்ள நீர் ஒன்றுசுரந்து கலந்து உணவை அன்னப்பாகு(Chyme) என்னும் மிருதுவான குழம்பாக்குகின்றது. இவ்வன்னப்பாகானது துணைக்குக்கிக்குட்சென்று பித்தநீருடனும் சணைய நீருடனும் கலந்து பேதப்பட்டு பால்போல் நிறம் பெயர்ந்து அன்னரசம் (Chyle) ஆகின்றது. பின் சிறுகுடலுட் சென்று இவ்விடத்து நீருடன் கலந்து பேதித்து தேக போஷணைக்கேற்காதவை மலமாய்க்கழிய போஷணைக்குரியபாகம் இரத்தமாய் பேதமடைகின்றது. இவ்விரத்தம் நம்கண்களுக்கு ஓர் சிவந்த திரவபதார்த்தமாகத் தோன்றுகின்றது. ஆனால் அதனை நாம் ஓர் அணுதரிசிக்கண்ணாடி (Microscope) யின் கீழ் வைத்துப்பார்ப்போமேயாகில் அது ஓர் களங்கமற்ற நிறமற்ற செஞ்சீவ வெண்சீவ அணுக்களும் "பிளாஸ்மா" என்னும் திரவபதார்த்தமுஞ் சேர்ந்த வேர்நீர்த் தொகுதியெனக் காண்கிறோம். மேலும் முன் குறித்துள்ள செஞ்சீவ அணுக்களும் (Red corpucles) வெண்சீவ அணுக்களும் White corqucles தெப்பங்கள்போல மிதப்பதையும் காண்பேம். வெண்சீவ அணுக்களின் தொகையிலும் செஞ்சீவ அணுக்களின் தொகை அதிகமாயிருப்பவும் காண்பேம்

செஞ்சீவ அணுக்கள் ஒருசத நாணயம்போல் வட்டமான தட்டை வடிவமுள்ளவையென்றும் மத்தியில் மெல்லியனவாய் கனதியிற் கூடியனவாயும் குறுக்களவில் $\frac{1}{3200}$ அங்குல அகலமுள்ளனவாயும் குவியல் குவியலாய்ச் சேர்ந்து இருப்பனவாயும் காண்பேம். இவை (பிளாஸ்மா) Plasma என்னும் இரத்த நீருள் ஓடிக்கொண்டு போவதையும் காணலாகும். வெண் சீவ அணுக்கள் செஞ்சீவ அணுக்களிலும் பெரியன. ஒன்றின் விட்டம் சுமார் $\frac{1}{2500}$ அங்குலம். தொகையிற் செஞ்சீவ அணுக்களிற் குறைந்தவை. நீருள் அசைந்துகொண்டிருப்பன.

வெண்சீவ அணுக்களின் பிரதான தொழில்: தொற்றுநோய்க் கிருமிகளுடன் போர்செய்து அவையை நம் தேகத்துட் பிரவேசியாது தடுத்துக் கொல்லுவதே. இவைகள் பெலவீனப்பட்டால் நம் தேகத்தைப்பாதிக்கும் நோய்க்கிருமிகள் நம்மை மேற்கொள்ளும்.

இரத்தத்தின் உபயோகங்கள்: இரத்தத்துள் காணப்படும் செஞ்சீவ அணுக்கள் பிராணாதார வாயுவைச் ச[...]ரீரக்கூறுகள் எங்குங் கொண்டுசெல்கின்றன.

2. இரத்தத்திற் காணப்படு[...] அசுத்தங்கள் தோல், சலகோசம், [...] வாசப்பை முதலான இடங்களுக்[...] இரத்தத்தாற் கொண்டுசெல்லப்பட்[...]க் கழிக்கப்படுகின்றன.

3. ஜீரணித்த ஆகாரம் இரத்[...]த்தாற் பல இடங்களுக்குக் கொண்[...] செல்லப்படுகின்றது.

4. இரத்தம் பலஇடங்களுக்[...]ஞ் செறிவதால் நம் தேக அனல் ம[...]டுப்படுத்தப்படுகின்றது.

5. இரத்தம் தொற்றுநோய் நிவாரணிகளைத் தம்முடன் கொண்டு செல்வதினால் நம் தேகம் தொற்றுநோய்க் கிருமிகளைக் கொன்று நோய் தேகத்தை அணுகாமற் காத்துக்கொள்கின்றது.

### இரத்த உறுப்புகளின் விபரம்.

இரத்தாசயம் (the Heart) கொஞ்சங்குறைய நடுநெஞ்சிலே சற்று இடப்பக்கமாய் சுவாசப்பை இரண்டிற்குமிடையே இருக்கின்றது. இரு பெருங் கூறுகளை உடையது. இரத்தாசயம் சுமார் 9 அவுன்ஸ் நிறையுள்ளது. பரிரிகப். (Pericardiam) என்னுமோர் சவ்வு இதனைச் சூழ்ந்திரு[...]கிறது. மாங்காய் வடிவமுடையது. இதன் இரு பெருங் கூறுகளும் இரு சிறு கூறுகளாக நான்காகப் பகுக்கப்பட்டிருக்கின்றன. அவையாவன.

1. வலச்சிரவம் Right Auricle
2. வலச்சடரம் Right Ventricle
3. இடச்சிரவம் Left Auricle
4. இடச்சடரம் Left Ventricle

### (1) வலச்சிரவம்

இது வலச்சடரத்தோடு தொடர்புடையது. ஓர் அறைபோன்றது. இதற்கும் வலச்சடரத்துக்குமிடையில் திரிகபாடமிருக்கின்றது. இக்கபாடங்கள்மூலம் சிரவத்துக்கு நாளங்களால் கொண்டுவரப்பட்ட இரத்தம் வலச்சடரத்துள் கொண்டுசெல்லப்படுகின்றது.

### (2) வலச்சடரம்

இது முன்னையதிலும் பெலமான அறையாயிருக்கின்றது. முன்னையதுடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. புப்புச நாடி மூலமா[...] இரத்தாசயங்களுக்கு கார் இரத்[...] கொண்டு செல்லப்படுகின்றது. வல[...] சிரவத்தின் அந்தத்தின் புப்புசநாடியின் ஆரம்பத்தில் ஓர் கதவுபோன்[...] மூடியொன்றிருக்கிறது. இது புப்புச நாடிக்குள்சென்ற இரத்தம் மறுபடி சடரத்துள் செல்லாது தடுத்துக்கொள்கின்றது.

### (3) இடச்சிரவம்

இது அமைப்பில் வலச்சிரவத்தை ஒத்தது. இடச் சடரத்துடன் தொடர்புடையது. இரண்டின் மத்தியில் இணைக்கபாடம் அமைந்திருக்கிறது. இக்கபாடம் இடச்சிரவத்திலிருந்து இடச் சடரத்துள் இரத்தத்தைச் செல்லவிடுத்து சடரத்துள் சென்ற இரத்தம் மறுபடி சிரவத்து[...] மீளாது தடுத்து மூடிக்கொள்கின்[...]து. சிரவம் சுருங்கச் சடரம் விரிகி[...]றது. அந்நேரத்தில் இரத்தம் [...] கபாடங்கள்மூலம் சடரத்துள் [...]கின்றது. பின் சடரம் சுருங்கக் கபா[...]

நல்லா றெனினுங் கொளறீது மேலுலக, மில்லெனினு மீதலே நன்று.

# அபிசீனிய மகாயுத்தம்

## அமெரிக்காவும் பெற்ரோல் நடபடிக்கையும்

### மக்கலே திருப்பிப் பிடிக்கப்படவில்லை | ஒக்டன் பிரதேசத்தில் அபிசீனியர்க்கு வெற்றி

### தெம்பியன் போரில் அநேகர் மாண்டனர்

### மழைகாலமும் யுத்த முயற்சியும்

பெற்ரோல் விஷயமாக நடபடிக்கைகள் கையாளப்படின் அதற்கு உறுதுணையாக அமரிக்கரும் சேர்ந்துழைப்பினன்றி விரும்பிய நன்மை வந்தெய்துவது மிகவும் கஷ்டமாம். சர்வதேச சங்கத்தினைச்சேர்ந்த நாடுகள்மாத்திரம் நடபடிக்கையைக் கையாண்டாற்போதாது. இவ்விஷயத்தை ஆலோசித்து முடிவுசெய்யும்படி நியமிக்கப்பட்ட நிர்வாக சபையினரின் அபிப்பிராயம் மேற்கூறியவாறேயாகின்றது. அமரிக்கரும் உடன்படின் நடபடிக்கையை எல்லாநாடுகளும் ஒரேமுறையில் கையாள இன்னும் மூன்றுமாதங்கள்வரையில் செல்லுமாம். இப்போது இத்தாலியர் தமக்குவேண்டிய பெற்ரோலைத் தமது கப்பல்கள்மூலமாகவும் சர்வதேச சங்கத்தைச்சேராத நாட்டினரின் கப்பல்கள்மூலமாகவும் அமரிக்கா முதலிய இடங்களிலிருந்து பெறுகின்றனர். சர்வதேச சங்கத்தின் பணவிஷயமாகக் கையாண்ட நடபடிக்கையால் பெருநன்மை ஏற்பட்டுளதாம். இத்தாலியர் கடன்பெறவியலாது முட்டுப்படுகின்றனர்.

இத்தாலிய விமானங்கள் டெஸி நகரில் குண்டுபோட்டதாகவும் அதிகம் சேதமேற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. பிறிட்டிஷ் செஞ்சிலுவைப்படையின் இருப்பிடம் தேவாதீனமாய் நாசமடையாது தப்பிக்கொண்டதாம். மேற்குறித்த பிறிட்டிஷ் செஞ்சிலுவை வைத்தியசாலையில் காயமடைந்த 2000 பேர் சிகிச்சைபெறுகின்றனர்.

தெற்குப் போர்முனையில் ராஸ் நாஸிபு என்னும் தலைவர் இத்தாலியரைத் துரத்திவிட்டனரெனக் கூறப்படுகிறது. 50 மைல்களுக்கு இத்தாலியர் பின்காட்டியோடினர். இருபகுதியிலும் அநேகர் காயமுற்றனரெனவும் இறந்தனரெனவும் கூறப்படுகிறது. இத்தாலியர் கூறதி என்னுமிடத்தில் அகழியிலிருந்து சண்டைசெய்தனராகவும் அபிசீனியர் சடுதியில் தோன்றிப் பலரைக் கொன்றதாகவும் சொல்லப்படுகிறது.

யுத்தம் ஆரம்பித்தகாலந்தொடக்கம் தமதுபக்கத்தில் 775 இத்தாலிய போர்வீரர்மாத்திரந்தான் கொல்லப்பட்டதாக இத்தாலிய அரசினர் அறிவிக்கின்றனர். ஆனால் அபிசீனியர் மேலேகூறியது முழுப்பொய்யென்றும் தாங்களே 15,000 இத்தாலியரை யுத்தமுனையில் புதைத்திருப்பதாகவும் கூறுகின்றனர்.

அபிசீனிய அரசர் விரைவில் வடக்குப்போர்முனைக்குச்சென்று யுத்த நடபடிக்கைகளை நேரே மேற்பார்வை செய்யக்கூடுமெனச் சொல்லப்படுகின்றது. சமீபத்தில் இத்தாலியரிடமிருந்து அபிசீனியர் ஷையர், தெம்பியன், ஜிறல்ற்று என்னுமிடங்களையே திருப்பிப்பிடித்தனர். அபிசீனியர் போதிய உணவுப்பொருள்கள் வைத்திருக்கின்றனர். ஆனால் குண்டுகள் மருந்துகள்தான் சிறிது குறைவாகவுடையாராம். அபிசீனியப்படைகளில்ஆண்களின் உடைதரித்த அநேக பெண்கள் காணப்படுகின்றனராம். அபிசீனிய போர்த்தலைவர்கள் இன்னும் ஓர்முறை ஒத்தபடி இத்தாலியரை எதிர்க்க எண்ணுகின்றனர். அபிசீனியபடையினர் மிக மனத்திடமுள்ளவராகக் காணப்படுகின்றனராம். ஆயிரக்கணக்கான இத்தாலியர் கொலைக்களத்தில் இறந்துகிடக்கின்றனரென்றும் அவைகளைச் சடுதியில் புதைக்கும்படியும் அபிசீனிய அரசர்கட்டளை அனுப்பியுள்ளார். அன்றேல் தொற்றுவியாதிகள் ஆரம்பிக்குமெனவும் கூறப்பட்டது. புதைக்கும் வேலைக்கும் அநேகர் தேவையாகின்றது.

மக்கலே நகரைத் திருப்பிப் பிடித்துவிடலாமென ராஸ்சேயம் முயற்சி செய்தாராயினும் அது கைகூடவில்லை. அபிசீனியர் கூடியளவு சாமர்த்தியமாகப் போர்செய்தது போற்றப்படவேண்டியதாம். இத்தாலியர் மிகப் பெலமாசச் செய்துள்ள அரண்களைத் தாண்டுவது கஷ்டமாயிருந்ததாம். மூன்றிடத்தில் முட்கம்பி வேலிகள் போடப்பட்டிருப்பதுமன்றி அநேக கோட்டைகளும் மக்கலே நகரைச் சுற்றி இத்தாலியரால் கட்டப்பட்டிருக்கின்றன. முட்கம்பி வேலிகளைத் தாண்டிச்செல்ல அபிசீனியர் முயற்சி செய்யுங்கால் இத்தாலியர் யந்திரப் பீரங்கிகளால் பலரைச் சுட்டுக்கொன்றனராம். இவ்வாறு பின்காட்டிச்சென்றனர்.

---

டங்கள் மூடிக்கொள்கின்றன. இரத்தம் நாடிக்குச் செல்கின்றது, இடச்சிரவத்துடன் புப்புசநாளம் (Pulmorary Veins) இணைக்கப்பட்டிருக்கின்றது. இந்நாளம் சுவாசப்பையிலுள்ள செவ்விரத்தத்தைக்கொணர்ந்து இவ்விடத்திலூற்றுகின்றது. பின் இணைக்கபாடமூலம் சடரத்துள் செல்கின்றது. அங்கிருந்து கண்டரைடிரா (Aorta)க்குள் செல்கின்றது. (இரத்தச்சுற்ரோட்டம் பார்க்கவும்)

(தொடரும்)


## விசேட விளம்பரம்.

### வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க விசேட ஒழுங்கு.

நாம் எமது தேச வாலிபருக்குப் பிழைப்பூட்டும் நோக்கமாயும் வறியாரை இரட்சிக்கும் நோக்கமாயும் ஒருசமுதாயத்தை நிறுவியுள்ளோம். மாதமொன்றுக்குக் குறைந்தது ரூபாய் 100 உழைக்கலாம்.

விரும்புவோர் வேண்டிய விபரங்களைக் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுதியறிக.

29-2-36 வரையுமே விண்ணப்பப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

*Manager*
**LANKA BENEFIT CO.,**
Vannarponnai

(88) 16-2-36


## காங்கேசன் துறைப் பகுதி வாக்காளர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

நடைபெறவிருக்கும் அரசாங்க சபைத் தேர்தலின்பொருட்டு வாக்காளர்கள் தங்கள் தங்கள் கட்சிகளுக்காக வெளியிடப்படும் துண்டுப் பிரசுரங்கள் சிலவற்றை யாம் கண்ணுற்றேம். அவை அவசியமில்லாத வீண் பிதற்றுரைகளாயும், அசப்பியமானவையாயு மிருத்தலைக் கண்டேம். இப்படியான துண்டுப் பிரசுரங்களை வெளியிடுபவர்கள் எமது அனுமதியைப்பெற்று வெளியிடவில்லை. அப்படியே மற்ற அபேட்சகரின் அனுமதியும் பெற்றிருப்பார்களென யான் எண்ணவில்லை. ஆகையால், இனிமேலாவது இவ்வித துண்டுப்பிரசுரங்களை வெளியிடாதிருக்கும்படி வாக்காளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மல்லாகம். 13-2-36. } அ. பொன்னையா,

(87) 16-2-36—1

## இலங்கைமீனுக்குப் பரிசு.

சமீபத்தில் நியூயார்க் உஷ்ண மண்டப மீன்காட்சியில் இலங்கை நல்ல ஜலத்திலுள்ள மீனுக்கு முதல் பரிசு கிடைத்திருக்கிறது. இச்செய்தி தற்பொழுது கொழும்பிற்கு வந்திருக்கும் அமெரிக்கரான திரு. இ. மேத்தியூஸ் என்பவரிடமிருந்து கிடைத்தது. அவர் சென்ற பல மாதங்களாக இங்கு இருந்துவருகிறார். ஏராளமான மீன்களை அவர் ஏற்றுமதிசெய்திருக்கிறார்.

---

ஜனவரி மாதத்தில் மாத்திரம் 30,000 இத்தாலிய போர்வீரர் அபிசீனியாவில் யுத்தஞ்செய்ய வந்திறங்கினர். 7000 இத்தாலியர் நோய்வாய்ப்பட்டும் காயமடைந்தும் இத்தாலிக்குத் திரும்பினர். சூயெஸ்கால்வாய்க்கு இதுவரையில் இத்தாலியர் கொடுத்த வாடகைப்பணமே 80,000 பவுணாகும்.

பெற்ரோல் விஷயமாக நடபடிக்கை ஏற்படுமோவென இத்தாலியர் பெரிதும் அஞ்சுகின்றனர். அவரிடம் போதிய பெற்ரோல் கிடையாது. மழைகாலம் தங்கட்குக் கஷ்டத்தை வருவியாதெனவும் கூறுகின்றனர்.

இப்போது முதன்முதலாக அபிசீனிய விமானங்கள் எறிற்றியாவில் பறந்துசென்று துண்டுப்பத்திரங்கள் போட்டதாகச் சொல்லப்படுகிறது.

## மோட்டோர்ச் சாரதிகளின் திறமையை உயர்த்தமுயற்சி

### பஸ் கொண்டக்றர்கள் பதிவுசெய்யச் சட்டம்

மோட்டோர்ச் சாரதிகளின் திறமையை உயர்த்துதல், பஸ் கொண்டக்ரர்களைப் பதிவுசெய்தல் ஆகிய இரு விஷயங்களும் இவ்வருடம் பூர்த்தியாக்கப்படுமென நம்பப்படுகிறது.

மோட்டோர் எஞ்சின்களைப் பற்றி விஷயமறிந்தவர்களென்றும், சிறிய பிழைகளைப் பழுது பார்க்கக்கூடியவர்களென்றும் அங்கிகரிக்கப்பட்ட கராச்சுகளிலிருந்து அத்தாட்சிப்பத்திரம் பெறுவோருக்கே லைசென்ஸ் கொடுக்கப்படவேண்டுமென்று மோட்டோர்க்கார் பதிவுகாரியஸ்தர் ஓர் யோசனை கூறியிருக்கிறார். இவ்விஷயத்தில் அபிப்பிராயம் கூறும்படி கராச்சுகளை அவர் கேட்டிருக்கிறார்.

மேற்காட்டிய முறையில் பயிற்சியளிக்க முடியுமாவென்றும் கராச் சொந்தக்காரர்கள் கேட்கப்பட்டிருக்கின்றனர். கொழும்பிலுள்ள அரசாங்கக் கைத்தொழிற் கல்லூரியில் அவ்வித பயிற்சி யளிக்கப்படுகிறது. அதனால் உள்நாட்டிலுள்ளோருக்குப் பயிற்சிபெறச் சௌகரியங்கள் இல்லை. அதை முன்னிட்டே பதிவுகாரியஸ்தர் தீவிலுள்ள கராச்சுகளைப் பயிற்சியளிப்பதைப்பற்றி அபிப்பிராயம் கேட்டிருக்கிறார். பதில் வந்தவுடன் ஓர் திட்டம் தயாரிக்கப்படலாம்.

மோட்டோர்ச் சட்டத்தின்படி குற்றம்சாட்டப்பட்டிருக்கும் பல பஸ் கொண்டக்றர்கள் தலைமறைவாக இருப்பதாகப் பொலிசார் கூறுகின்றனர். ஆகவே அவர்களைப் பதிவுசெய்யச் சீக்கிரத்தில் சட்டம் செய்யப்படுமென்று தெரிகிறது. அதன்படி ஏப்பிரல் 1௳ தொடக்கம் பஸ் கொண்டக்றர்கள் 2 ரூபா கட்டணம் கட்டி பதிவு செய்துகொள்ளவேண்டியிருக்கும். லைசென்சை அடுத்த ஜனவரிக்குள் புதுப்பித்துக்கொள்ளவேண்டும். அதற்கு 1 ரூபா கொடுக்கவேண்டும். கொண்டக்றர்கள் மனுச் செய்துகொள்ளும்பொழுது 18 வயதானவர்களாகவும் நல்ல குணமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். லைசென்சில் கொண்டக்றரின் புகைப்படம் இருக்கும். தண்டிக்கப்பட்டால் அது குறிப்பிடப்படும்.

## தந்தையும் மகனும் கொலைசெய்யப்பட்டமை

### எதிரிக்கு 10 வருடக் கடுங்காவல்

ரத்தினபுரியைச் சேர்ந்த கப்பேலைக் கிராமத்தில் சென்றவூ யூலைமீ 2-௳, விரோதம் காரணமாக கே. ஆர். மய்னத்துஹேணியா, அவரது மகன் ஜான் என்ற இருவரையும் கொன்றதாக கே. எம். சைமன்மீது தொடரப்பட்ட வழக்கில் சென்ற 13-௳ கொழும்பு அஸைஸ் கோர்ட்டு நீதிபதி திரு. டபிள்யு. இ. பார்பர் தீர்ப்புகூறினர்.

ஜான் கொலை சம்பந்தமாகக் கருதிச்செய்யாத கொலைக்குற்றத்தை எதிரி செய்திருப்பதாக ஜூரிகள் அபிப்பிராயங் கூறினர். நீதிபதி எதிரிக்கு 10 வருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தனர்.

## கள்ளநாணய உற்பத்தி.

கள்ள நாணயங்களை உற்பத்தி செய்து அதற்குரிய கருவிகளையும் வைத்திருந்ததாக கே. டி. பர்தலோமியஸ் என்பவனுக்குக் கண்டி அடிஷனல் ஜில்லா நீதவான் மூன்றுவருஷக் கடுங்காவல் தண்டனை விதித்தார்.

எதிரி கள்ளநாணயங்களைச் செய்துகொண்டிருக்கும்பொழுது பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்கள் கண்டுபிடித்ததாகக் கூறப்பட்டது.




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும்,
தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம்
படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்
சுண், டொருவோ னில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

—அப்பர்சுவாமிகள்.

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
யுவஹூ மாசிமீ ௪௨

## உலகம் உயர்ந்தோர்மாட்டு.

சில நாடுகளை நாம் நோக்குங்கால், அந்நாட்டின் அரசியல் பொதுசனங்களின் பிரதிநிதிகளால்நடத்தப் படுவதைக் காண்கின்றோம். அதாவது பொதுசனங்கள் எண்ணங்களே பெரிதும் கைக்கொள்ளப்படுவதைக் காணலாம் ஆனல் உண்மையை நுணுகி ஆராய்ந்து பார்த்தால், ஒருவர் இருவரின் அரசியலாகவே அது தோன்றும் அதிவிவேகமும், நுண்ணறிவும் வாய்ந்தவர் எடுத்துரைப்பதை மற்றையோர் அங்கீகரிப்ப, அவை பொதுசன எண்ணமாகின்றதென்பதை யாவர் மறுப்பர்? பின்வரும் விஷயங்களை முன்னர் அறியும் அபாரசக்தியும் அளப்பரும் விவேகமும் வாய்ந்தோர் எதைக் கூறுகின்றாரோ, அதுவே பொதுசன அபிப்பிராயமாகின்றது. ஆகையால், சனநாயக ஆட்சியென்பதும் ஈற்றில் நோக்குமிடத்து ஒருவர் இருவர் ஆட்சியென்றே கூறவேண்டும். ஆனல் சனநாயக அரசியலுக்கும் தன்னிஷ்டமாக அரசு செய்யும் ஓர் அரசரின் பரிபாலனத்துக்கும் அதிக வித்தியாசமுண்டு. பெரியோர் வெளியிடும் அபிப்பிராயத்தைப் பொதுசனங்கள் நன்றென ஏற்று நடத்தும் அரசியல், சனநாயக ஆட்சியாகும். பொதுசனங்களின் அபிப்பிராயத்தை நாடாது நடத்தும் அரசியலே தன்னிஷ்ட அரசியலென்பர்.

இவ்வாறே எந்நாட்டிலும்—ஊரிலும்—உள்ளார், தாம் எதைச்செய்ய முற்படுமுன்னரும், அவ்வூரிலுள்ள பெரியாரின்எண்ணத்தையே அறிவர். அறிந்தே ஏற்றதைச்செய்வார். அறிவுடையோராகவுள்ளோர்சிற்சில காலத்து சுயநலம், பொருமையென்பவைகளால் பீடிக்கப்பட்டு, நிதானந்தவறி வேறு சிலரையும் ஆட்டியலைக்கின்றனர் கல்வியறிவில்லாத பொதுசனங்களை வழிகாட்டிநிற்கும் அறிஞர்மீதே எல்லாப் பொறுப்பும் உளது அவர்கள் தேசநலத்தை நாடி, ஒற்றுமையுடையராய் நல்வழியைநாடிநிற்பின், மற்றையோரும் அவ்வாறு செய்வாரென்பதில் ஐயமின்று ஆனல் மமதை, அகங்காரம், குரோதம் என்பவைகள் எங்கு தலைப்படுகின்றனவோ, அந்நாடு கீழ்நிலைமையை விரைவில் அடையுமென்பதேசித்தாந்தம். குறுகியநோக்கமே எல்லாத் தீமைகட்கும் காரணமாகின்றது. கல்வியறிவுடையராயினும் சிலர் உலகசஞ்சாரஞ் செய்யாமையால் கிணற்றில்வாழும் தவளைகள்போல்எல்லாவற்றையும்தமது சிற்றறிவு கொண்டு நோக்குகின்றனர். தூய சிந்தையுடன் மனவிகாரமின்றி ஒருவிஷயத்தை நோக்கின் அதன் உண்மை தோன்றுகிராது. ஆகையால், பொதுநலவாழ்வேஎன்றும் கைக்கொள்ளப்பட வேண்டியது. இதை மறந்துவிடுவதாலன்றோ நாட்டில் பிணக்குகளும் வித்தியாசங்களும் தோன்றுகின்றன.

நமது நாட்டின் அரசியல் தற்போது சனப்பிரதிநிதிகளின் பொறுப்பில் இருக்கின்றதென்று எவ்வாறு கூறலாம்? உண்மையாகப் பொறுப்பாட்சிஏற்படினன்றி, தேச முன்னேற்றம் உயரிய வழியில் செல்லாது. உயர்ந்தோர் மாட்டே அரசியலாயின் உயர்ந்தோர் வழிநின்று மற்றையோர் ஒழுகுவாரென்றும் கூறலாம். உயர்ந்தோரெனத் தம்மைக் கூறிக்கொண்டு, இழிந்தவழிகளை நாடிநிற்போர் காரணமாக எழும் ஊழல்கள் சிலவன்று. அரசியல் வாழ்வு தூய்மையடையவேண்டின், அதற்கு உறுதுணைபுரியவேண்டியவர் ஒழுக்கமும் அறிவில் விழுப்பமும் வாய்ந்த பெரியாராய் முன்வந்து வழிகாட்டி, யாவரையும் உய்வடையச் செய்ய வேண்டாமா?

அஃதன்றிக்காலத்துக்கேற்கத் தம்முடைய பழக்கவழக்கங்களையும் கொள்கைகளையும் மாற்றி நின்று, பொதுசனங்களை மலையச்செய்வது உயர்ந்தோரென்பார்க்குஅங்கமாகாது. பாமரசனங்களை நாம் குறை கூறுவதால் ஒருநன்மையும் வரப்போவதில்லை. சேற்றில்நாட்டிய கம்பம்போல்காற்றடிக்கும்பக்கத்திற்கே அவர்கள் சார்வர். அவர்கட்கு உண்மையை உணர்த்தி உயரியவழியில் சேரச்செய்வது உயர்ந்தோர் கடனாகும். இனி, கீழ்நிலையில் தமது வாழ்க்கையை நடத்திய ஒருவர் சடுதியில் அதாவது தெரிவுகாலங்களில்உயர்ந்தோராவதும் பெரியார்போல் நடித்து மற்றவரை அணுப்ப எண்ணுவதும் அசம்பாவிதமாகும். ஆகையால், உண்மை வாழ்க்கையை இடைவிடாது இனிதுகைக்கொண்டார்க்கே எப்போதும் கணிசமுண்டாகும். பெரிய அரசியல் விஷயங்களில் நுண்ணிதாய்த் தேர்ந்தோர், பக்கம் சாராது கூறும் அபிப்பிராயத்துக்கே எப்போதும் மதிப்பு ஏற்படும். உலகம் உயர்ந்தோர்மாட்டுளதா? அல்லது கீழ்நிலையிலுள்ளபோலிகள்பாலுளதா வென்பதை நாம் அறியுங்காலம் எட்டத்தில் இல்லை.

## பருத்தித்துறைப் பகுதியாரின் பெருங்கடன்

அடுத்த சனிவாரம் (22-2-36) பருத்துத்துறைப்பகுதி வாக்காளர் தாங்களருமையாகப்பெற்ற உரிமையை உபயோகிக்கும் தினமாகும். சென்ற நான்கு மாதங்களாக இத் தெரிவுப்பகுதி வாக்காளர்கள் படுங் கஷ்டங்களையும் அடைந்தஊழல்களையும் யாவருமறிவர். இலங்கையில் எவ்விடத்திலும் நடவாத விதமாகப் பல சம்பவங்கள் இப்பகுதியில் நிகழ்கின்றனவென்று பேசப்படுகின்றது. முன்வந்த இரு அபேட்சகர்களும் தங்கள் வேலையை எவ்வளவு உக்கிரமாகச் செய்கின்றனரென்பதும் வெளிப்படை. பொதுசனங்கட்குக் கண் குளிர்ச்சியடைவதே வேண்டும். ஆனல் எதைச் செய்தால் இடையரு நன்மைஏற்படுமென்பதைப் பாமரர் அறிவாரா? அன்று. ஆகையால், கல்வியறிவு, ஒழுக்கம், நேர்மை என்பவற்றில் நிதானம் படைத்தபெரியாரே பொதுசனங்கட்கு உண்மையை விளக்கித் தமது உதாரண நடையால் அவர்களையும் நேரியவழியில் சேரச்செய்தல் வேண்டும். அதை விட்டு இராமன் அரசுபுரியினுமென்? இராவணன் அரசுபுரியினுமென்? என்று கூறிப் பாமாசனங்களைத் தடுமாறச் செய்வோரும் அதற்கு வசதிகளை உண்டாக்குவோரும் பெருந்தேசத் துரோகிகளே ஆவர்.

அரசாங்க சபையில் அங்கத்துவம் வகித்தற்கு இப்பகுதியில் முன்வந்த இருவருள் எவர் பல்லாற்றானும் ஏற்றவரென முடிவுசெய்வதும் கஷ்டமான காரியமன்று ஆனல் முடிவுசெய்யும் ஆற்றலுடைய பெரியார் அந்தரங்க சுயநலப்பேறுகளை அல்லது விரோதங்களை அன்றி நட்பினைக் காரணமாகக் கொண்டு அடாதது செய்யமுன்வரின், தடுமாற்றம் எப்படி ஏற்படா தொழியும்? ஸ்ரீமான் ந. பாலசிங்கமவர்களையும் திரு. G. G. பொன்னம்பலமவர்களையும் யாழ்ப்பாணத்திலன்று, இலங்கையிலுள்ள பலரும் பலதுறைகளில் அறிவர். அவற்றை நாம் இப்போது எடுத்துக்காட்ட வேண்டியதில்லை. பொதுநலத்துக்கு உழைக்கக்கூடியவர் யாவரென்பது சொல்லாதே பலரும் இலகுவில் அறிவர். பேச்சுவன்மை மாத்திரம் ஒருவருக்கு ஏற்ற தகுதியாகாது. பேச்சு வன்மையுடன் நேர்மை ஒழுக்கம், அதிகாரம், செல்வாக்கு என்பவைகளும் பெரிதும் நோக்கப்படவேண்டியது அவசியம். அரசாங்கசபையில் உழைக்க முன் வந்தவருள், மற்றையவகுப்பினரது, பிரதானமாகச் சிங்களர்களர்களின் கணிசத்தைப் பெற்றவர் யாவரென்பதை நாம் நன்கு நோக்குதல்வேண்டும். அரசாங்கசபையில் முன்பின் யோசியாது குலைத்து, மற்றையோரில் பாய்ந்து கடித்து ஏதாவது அபகரிக்கலாமென்பதை முற்றாக மறந்துவிடுவதே நல்லது.

பேடித்தனமான செய்கைகளால்—மூட்டாழ்த்தனமான வழிவகைகளால்— வெற்றிபெறலாமென்னும் வீண்எண்ணம் சிலரிடம் உதிப்பதற்கும் முடிவு வரவேண்டும். உண்மைக்கும், நேர்மைக்கும், ஒழுக்கத்துக்கும், இடையறாத் தேசஊழியத்துக்கும் ஒருபோதும் கெடுதியின்றென்பதைப் பருத்தித்துறைப் பகுதியிலுள்ள பெருமக்கள் நாட்டிவைப்பின், அதன் பெருமை அவர்க்கே பெரிதும் உடைத்தாகும். மற்றைய பகுதிகட்கும் அச்செயல் வழிகாட்டியாகும்.

நமது நாடு ஈடேறவேண்டுமாயின், நம் நாட்டவர் அரசியற்றுறையிலும் மற்றைய விஷயங்களிலும் உன்னதநிலையை அடையவேண்டுமாயின், நாம் அப்பெருமையை நமக்கு ஆக்கிவைக்கும் ஆற்றலும் தகுதியும் வாய்ந்த பெரியாரையே நாடிநிற்கவேண்டும் இன்னேர் விஷயம் இச்சமயம் நாம் கூறுவது அவசியமாகின்றது. அடுத்துவரும் சில வருடங்களில் இலங்கையின் முன்னேற்றம் பொருளாதாரநிலையையும், தொழில் விருத்தியையும் நாடியதாகவே யிருக்கின்றது. இவ்விஷயங்களில் இலங்கையில் எவருந் தமக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லா ஒருவரைப் பருத்தித்துறைப் பகுதியினர் அபேட்சகராகக் கொண்டுள்ளார். அவர்க்கே தமது உரிமையை யளித்து கௌரவத்தை அடைவாரென்பது எமது பூரணமான நம்பிக்கை. வாக்குரிமை சாமானிய விஷயமன்று. தேசத்தின் முன்னேற்றம் அதனைப் பொறுத்ததெனலாம் அவ்வுரிமை விளையாட்டிற்கு உபயோகிக்கப்படுவதன்று ஆகையால், வாக்களிக்கச் செல்வோர் தேசநலத்தையே தமது மனத்திற் கொள்ளின் பெருநன்மை வந்தெய்தாது போகுமா?

## பெருங்கடமையாகாதா?

ஒரு சிறு அரசினரை நசிக்கும் நோக்கமாகச் சர்வதேசசங்கத்தினரின் புத்திமதிகளையும்கேளாது யுத்தத்தைக் கிளப்பி அளப்பரும் தீமைகளைச் செய்து நிற்கும் இத்தாலியர்க்கு எப்போது உணர்ச்சி வருமோ தெரியவில்லை. பிறிட்டிஷாரும் பிரான்ஸியரும் சிறிது திடமாக நின்று நடபடிக்கைகளை உறுதியாகவும் முற்றாகவும் கையாளின் இத்தாலியரின் யுத்த வெறி எப்போதோ தீர்ந்திருக்கும். இற்றைக்கு இரண்டுமாதங்கட்குமுன் சர்வதேசசங்கத்தினர் பண விஷயமாகவும், மற்றைய ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் விஷயமாகவும் கையாண்ட நடபடிக்கைகளால் ஓரளவுக்குச் சில நன்மை வருகின்றனவாயினும்,சடுதியில் யுத்தம் முடிவுக்கு வருமெனக் கூறவியலாதாகின்றது. யுத்தத்தை நடத்துதற்கு போதிய பணம் அவர்களிடமின்று. மற்றை நாட்டரசினரும் கடன் கொடுக்க மறுத்துவிட்டனர். உணவுப் பொருட்களும் சர்வதேச சங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் இத்தாலியர்க்கு அனுப்ப மறுத்துவிட்டனர். பொதுவாக இத்தாலியரின் வியாபாரம் நின்றுவிட்டதென்றே கூறவேண்டும். விஷயமிவ்வளவுநெருக்கடியை யடைந்தும் இத்தாலியர் யுத்தத்தை நிற்பாட்டிச் சமாதானத்தை நாடுவதைக் காணேம்.

பெற்ரோல் விஷயமாகச் சடுதியில் நடபடிக்கைகள் கையாளப்படின் இத்தாலியர் தலைப்பாரங்குறைந்து உண்மையை உணர்வாரென்பது நிச்சயமாகிறது. இவ்விஷயமாக நடபடிக்கையைச் சர்வதேசசங்கத்தினர் கையாள ஏன் தாமதிக்கின்றனரென்பது கேள்வியாகிறது. பெற்ரோல் விஷயமாக நடபடிக்கை கையாளமுன் அவ்விஷயத்தைக் குறித்து முற்றாக விசாரணை செய்யவேண்டியதாயிற்றும். அமரிக்க அரசினரும் முன்வந்து தாமும் வேண்டிய உதவிபுரிவாரென வாக்களித்தால் சர்வதேசசங்கத்தினர் இவ்விஷயத்தை அனுட்டானத்தில் கொண்டுவரக்கூடுமெனச் சொல்லப்படுகிறது. மற்றைய அரசினரைப்போல் தாமும் பெற்ரோல் இத்தாலியர்க்குக் கொடுப்பதில்லையென அமரிக்கர் நிச்சயமாகக் கூறிவிடின், நடபடிக்கைகள் வேண்டிய நன்மையை வருவிக்கும். மற்றைய நாடுகள் மறுக்க அமரிக்கா போதிய பெற்ரோலை இத்தாலியர்க்கு வழங்கின் எல்லாம் கெடுதியாகவே முடியும்.

நீதியை நடத்துவதில் பெருங்கியாதிபெற்ற அமரிக்கர் சர்வதேசசங்கத்தில் சேராதவராயினும் உலகநன்மைக்காக, நீதியைநாட்ட, இவ்விஷயத்தில் உதவிபுரிவது பெரிய அவசியம். அடாத செயலைச்செய்து சமாதானவழியைக் கைவிட்டு, தமது பராக்கிரமத்தால் நினைத்ததைச் செய்துமுடிக்கலாமென மனப்பால் குடிக்கும் இத்தாலியர்க்கு உண்மையை உணரச்செய்வது அவசியம். அமரிக்கரும் சேர்ந்துழைத்து நிற்பின் சர்வதேச சங்கத்தினர் பெற்ரோல் விஷயமாக நடபடிக்கைகளைக்கொண்டுவருவரென்பதில் ஐயமின்று. உலக சமாதானத்தை நாட்டுவதில் அமரிக்கர் பின்னில்லாரென்பதே எமது அபிப்பிராயம்.

## மலாய் நாட்டு அன்பர்களுக்கு!

எமது பத்திரிகைக்குப் புதிய சந்தாதாரர்களைச் சேர்க்கவும் பணந் திரட்டவும் மலாய் நாட்டின் பல பாகங்களுக்கும் எமது பிரதிநிதியாய் திரு. நாகலிங்கம் என்பவர் வந்திருப்பதை மலாய் நாட்டில் வதியும் தமிழன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகின்றேம். பத்திரிகாபிமானிகள் தங்கள் தங்களால் வரவேண்டிய பணத்தைத் தாமதப்படுத்தாது கொடுத்துதவியும், புதிய அன்பர்களைச் சந்தாதாரராகும்படி செய்தும் உதவிபுரியுமாறு வேண்டிக் கொள்ளுகின்றேம்.

அதிபர்.

இலனென்று மெவ்வ முரையாமை யீதல், குலனுடையான் கண்ணே யுள.

## அங்கும்-இங்கும்

இம்முறை தேர்தல்கொடி கட்டுவதோடு 'முடியுமா? எனச் சிலர் வினவுகின்றனர். ஒவ்வொரு வீட்டிலும் பல கொடிகள் தொங்குவதைக் காணலாம். முன்வந்த அபேட்சகர்கள் இருவர் கொடியையும் சிலர் தமது வீட்டில் தூக்கிவிடுகின்றனர். இதன் நோக்கம் யாது? அறியாமையா? கேலியா? சமீபத்தில் பெண்கள் சேலைகளும் சந்திகளில் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. தேர்தற்போரிற் பெண்களும் கலந்துகொள்வார்கள் என்பதற்கு அது அத்தாட்சியாகுமாம்.

* * *

அபேட்சகராக வந்துவிட்டோமே. எதாவது சொல்லித்தான் சனங்களை வசியப்படுத்த வேண்டுமாக்கும், சொல்வது உண்மையா? பொய்யா? என்பதைப்பற்றியோசனை கிடையாது. பாமர சனங்கட்கு எதைச்சொன்னாலும் சரியென்பார்போலும்.நெல்லுவரியை நீக்கிவிட்டேன்என்பாரொருவர். மற்றவர் மரவரியைக்கொணர்ந்தாரென்பர். சவாரிமாடுகட்கும் வரிவிதித்தால் நல்லதல்லவோவென்று இன்னொருவரும் கேட்பார்.

* * *

செய்தனவொன்றும் உண்மையிலிலதாகச் செய்யப்போகின்றன யார்பொருட்டாகுமே என்பதும் சந்தேகத்துக்கிடமாகின்றது. ஒருவரேபிரதிநிதியாயின்,அவர்க்கு யாதாவது செய்யினும் ஒருபோது கூடும். வியாபாரிகள் ஒருபக்கம் நெருக்குவர். பாதகண்டத்தவரையும்கைவிடவியலாது, செட்டிப்பிள்ளைகட்கும் மறுமொழி சொல்லவேண்டும். வகுப்புவாதிகளையும் திருப்திப்படுத்தவேண்டும். அத்துடன் சிறிதாவது ஒத்துழைப்பதாகக் காட்டிச் சிங்களப் பிரதிநிதிகளன்பும் வேண்டியதாயிருக்கிறது. என் இதுவரையும் இதைச்செய்தேன் அதைச் செய்தேன் எனத் திடமாகக் கூறவியலாவிடினும் இனியாவது அத்திட்டத்தைப் பெறுவேனென்பர் சிலர்.

* * *

கோழியும் உங்களுடையது அரிசியும் உங்களுடையது. நாடகம் நடக்குது பார்! பார்!! உண்மையில் நட்டமடைவோர் நாட்டவரே. என் செய்வது நன்மைசெய்ய எழுந்தும் அகங்காரம் விடுகின்றிலது. ஒவ்வொருவரும் பெயரை நாட்டுவதென்றால் முடியுமா? ஆருக்கு நல்லகாலமிருக்கிறதோ.

* * *

நான் கொன்றது ஒருகுழந்தை நீ கொன்றது ஒரு மனிதன் என்றாராம் ஒருவர். கொலையும் இருபாற்படும். பாவத்தைச் செய்து கொண்டு பாவத்தைத் தடுப்பது இயலுமா? கண்ணடி வீட்டிலிருந்து கொண்டு ஒருவர் கல்லெறியின் பின்யாதாகும்? பெரியவர் இருந்து இந் நாடகத்தையும் வீண் செலவையும் ஆரவாரத்தையும் பணம் போகும் மார்க்கத்தையும் பார்த்தால் பேஷாயிருக்கும். அதற்கென் செய்வது. நாடக முடிவில் உண்மை வெளியாகும். நாடகத்துக்கு உயிர்த்துணையாக நின்றவர்களே நட்டத்தைப் பொறுக்க வேண்டும். என்? நடிகர் வேஷத்தை மாற்றிவிட்டு வேறு நாடு சென்றால்;

* * *

நாட்டாண்மையும் நா நாவிதமாகின்றது. மற்றையோரைக்கிளப்பிக் காரியத்தை நடத்திவிட்டுத் தாம் செய்தனவாகச் சிலர் பெயர் பெறுகின்றனர். சிலர் அப்பரையும் சிலர் அப்பாவையும் பின்பற்றுகின்றனர். அந்தம்மா தோணியேறி நாளாய் (விட்டதென அறியார் போலும்.

---

### சுப்பிறீங்கோட்டு விசாரணை 6.

### முல்லைத்தீவுக் கதிராசி கொலை

ஆறுவதாக யாழ்ப்பாணம் சுப்றீம்கோட்டில் நீதியரசர் திரு. M. T. அக்பார் அவர்கள் முன்பாகவும் திரு. S. சிவபாதசுந்தரம் அவர்களைத் தலைமையாகக்கொண்ட ஆங்கிலம்பேசும் ஜூரிக்கனவான்கள் முன்பாகவும் முல்லைத்தீவில் (1) S. சின்னத்தம்பி, (2) K. சின்னையா, (3) செபமாலை அல்லது இராமு கணபதிப்பிள்ளை முதலியவர்களுக்கெதிராக சென்ற 1935-ம் வருஷம் ஆனிமீ 25-ந் திகதியளவில் கதிராசியென்னும் பெண்ணைக் கொலைசெய்தார்கள் என்பதாகக் குற்றம் பாரிக்கப்பட்ட வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

---

# "போது" எனுஞ் சொற்பொருள் ஆராய்ச்சி

(வேலணைக்கிழார், திரு. க. வேந்தனார், சைவப்பிரகாச வித்தியாசாலை.)

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்
அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." —குறள்.

ஈழகேசரி தொகுதி-௬, பகுதி-௨௨-ல், பண்டிதர் திரு கா. பொ. இரத்தினம் அவர்கள், "போது என்பதன் பொருள் யாது" எனுந் தலைப்பின்கீழ் ஓர் கட்டுரை வரைந்துள்ளார்கள். அதில், மொழிநூலறிஞர் நல்லூர் திரு. ஞானப்பிரகாசசுவாமிகள் அவர்கள், யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பதின்மூன்றுவது ஆண்டு நிறைவு விழாவில் (30–11–35) "மொழிநூல்" எனும் பொருள்பற்றி ஓர் விரிவுரை நிகழ்த்துகின்றுழிப் **போது** எனுஞ் சொற்குக் கூறிய பொருள் பொருத்தமுடைத்தன்றெனக் கூறி மறுத்திருக்கின்றார்கள். ஆனல், யான், சுவாமிகள் போது எனுஞ் சொற்குக் கூறிய பொருள் மிகவும் பொருத்தமுடைத்தென்பதை ஆய்ந்து நிறுவுவானிக் கட்டுரை வரைகின்றேன். அறிஞர் உலகு ஆய்க.

சுவாமிகள் கூற்றாகப் பண்டிதர் அவர்கள் கூறுவது:—"போது என்பதற்குச் சுவாமிகள், **புள்** என்பது திரிந்து திரிந்து ஒட்டையுடையது—வெளியுடையது எனும் பொருளைக் குறிக்கும் போது என்றாகி அஃது மலரைக் குறித்தது என்னும் பொருள்படக் கூறி யப்பாலத்துடன் போகாது செந்தமிழில் போது என்பதைப் பொழுதோடு சம்பந்தப்படுத்திக் கூறியிருத்தல் பிழையானதென்றுங் கூறினர்" என்பதே. இனி நிறுத்தமுறையான், போது எனுஞ் சொல் சுவாமிகள் கூறிய பொருள்களைத் தருமாற்றை விளக்கிப் பின், பண்டிதர் அவர்களின் மறுப்புரையினை ஆய்வாம்.

என்னை? சுவாமிகள் கூற்றிலிருந்து, போது எனுஞ் சொல் புள் எனும் முதநிலை யடியாகப் பிறந்ததெனப் போதருகின்றது. ஒரு முதனிலை நின்றாங்கு நின்றும், பிறஎழுத்துப்பேறுகளைப் பெற்றும் பல சொற்களுடன் இயைந்து நின்று அச்சொற்களுளெல்லாந் தனது உட்பொருள் பொதியஆளப்பெறின், அம் முதனிலையடியாகப் பிறந்த சொற்களெல்லாவற்றையும் ஓர் குடும்பச் சொல்லெனக் காண்டல் மொழிநூலறிவு கைவந்த முற்றியற்பெரும் புலவர் மரபு. எடுத்துக் காட்டாக, கு எனும் எழுத்தை முதலாகக் கொண்ட சொற்களெல்லாம் வெவ்வேறு எழுத்துப் பேறுகளைப் பெற்றுப் பலவாய்ப் பயின்று வருகின்றன. இங்ஙனம் அவை பலவாய்ப் பயின்றுவரினும் அவற்றினுற் குறிக்கப்படும் பொருள்களெல்லாம் குவிந்த உருவமுள்ளனவாகவே காணப்படுகின்றன.

குடம், குடை, கும்பம், குப்பை, குவியல், குழிகை, குளம் எனவும், அக் குகர உயிர் மெய்யெழுத்தின்மேனின்ற உகரவுயிர் ஏக, ஊகார உயிர்பெற்றுக் (க் ஊ கூ) என்றாகி,

கூடு, கூர், கூட்டம், கூடை, கூர்

கூம்பு, கூவல் எனவும் பெருவரவிற்றாய்ப் பயின்றுவருகின்றன. இச்சொற்களெல்லாம் வெவ்வேறு எழுத்துப் பேறுகளைப் பெற்றிருத்தலையும் அங்ஙனம் பெற்றிருந்தும், அவற்றினாற் குறிக்கப்படும் பொருட்களெல்லாம், குவிதல், கூடுதல் எனும் உட்பொருளிலிகவாது நிற்றலையும் ஓர்க. கு எனும் எழுத்தைக் கூறும்பொழுது இரு இதழ்களுங் குவிந்து முன்னுக்குவரும் இயற்கைச் செவ்வி ஈண்டெண்ணி யிறும்பூதெய்தற்பாற்று. (க்+உ=கு.)

இனி, இங்ஙனமே, புள் எனுஞ் சொல்லும் நின்றாங்கு நின்றும், பிற எழுத்துப் பேறுகளைப் பெற்றும், ஒட்டையுடையது, வெளியுடையது, எனும் பொருட்கள் பொதிந்த பல சொற்களாகப் பயின்று வருதலைத் தெரிக்குதும்.

(ப்+உள்) புள்

புள் எனுஞ்சொல் பறவைகட்குப் பெயராயுமிருக்கின்றது. இங்ஙனம் பறவைகட்குப் புள் எனும் பெயர் தோன்றியதின் ஆக்கமுன் (காரணம்) என்னையெனில், பறவைகள் முட்டையிற் றோன்றுவன வாகலின் அங்ஙனந் தோன்றுகின்றுழி அம்முட்டைகளை ஒட்டை செய்தலாலென்க. இங்ஙனம் புள் எனுஞ்சொல் ஒட்டைப் பொருள் தருமாற்றை

"பூங்கொடியார்கைப் புள் ஒலி சிறப்ப" (மணிமே. பா. 7 அ. 120)

"புட்கை போகிய புன்றலை மகார்" (மலைபடு. 253)

இச்செய்யுள் அடிகளால் புள் என்பது கைவளையலிற்குப் பெயராதல் புலனாகின்றது. வளையல்களில், கையில் அணிதற்கேற்ற ஒட்டையிருத்தல் கண்கூடு. எனவே புள் எனுஞ் சொல் ஓட்டைப்பொருள் தருதல் காண்க.

இனி இப் புள் எனும்சொல் புற எழுத்துப்பேறுகளைப் பெற்றுவந்து ஒட்டையுடையது வெளியுடையது எனும் பொருட்களைத் தருமாற்றை விளக்குதும். என்னை, புள் எனுஞ் சொல்லின்கணுள்ள ளகரவொற்றேக. க். ண். ர். ல். ற். த். ழ் எனும் ஒற்றுக்களைப் பெற்று.

புக், புண், புர், புல். புற், புத், புழ் என்றாகிப் பின் எழுத்துப் பேறுகளையும், இடைநிலைகளையும் இறுதிநிலைகளையும் பெற்றுத் தம் தம் பொருட்களைத் தெரிக்கின்றன.

புகும் இல் (ப்உக்உப்இல்) புக்கில் (ஒட்டைப் பொருள்)

செல்லுயிர்ப்புக்கில் (மணி-மே. பா. 25. அ. 4)

நோக்கார்கொ ளுய்யதோர் புக்கிலை (நாலடி. 41)

புக்கில், உயிர்புகுமிடமாகிய உடலிற்குப் பெயராதல் மேற்காட்டிய செய்யுட் பகுதிகளிலிருந்து தெரிகின்றது. மக்களுடம்பில், ஒன்பது ஒட்டைகள் அமைந்திருத்தல் கண்கூடு. எனவே உயிர் புகுதற்கு இடமாதலின் புக்கில் என்றாயிற்று. இங்ஙனமே புகுதல் எனும் உலக வழக்கில் ஒருவர் ஓர் அடைக்கப்பட்ட இடத்திற்குக் கட்டாயம் போகவேண்டிய வினையுண்மையின், ஆண்டுச் சென்று நோக்குழி செல்லுதற்கேற்ற பெருநெறியொன்றுங் காணமையின், ஓர் சிறுநெறி யுளவாக்கிப் புகுந்து சென்று வந்தவர், பிறர்க்கு யான் புகுந்து போய் வந்தேனெனக் கூறின், ஆங்கு ஒட்டைப் பொருள் புலனாகும். என்னை? அவர்தான் புகுந்து சேறற்கேற்ற சிறுநெறி யொன்றே செய்தாராகலின் இச்சிறு நெறியை சில இடங்களிற் பொட்டென்றுங் கூறுவர்.

(ப் உ க் அ ழ்) புகழ் (வெளியுடையது எனும் பொருள்—வெளிப்பாட்டுப் பொருள்)

புகழ் என்பது, "கல்வி, தறுகண், இசைமை, கொடையெனச் சொல்லப்பட்ட" பெருமிதம் நான்கனுள், ஒன்றினாலாதல் அல்லது நான்கினாலுமாதல ஒருவன் தகுதியடைந்து புறத்தாருளததிலெல்லாம் புகும் பெருந்தகையாகும். இங்ஙனம் ஒருவனின் பண்புகள் புறத்தாற்குப் புலனாதல் பற்றிப் புகழ், வெளிப்பாட்டுப பொருளாயிற்று. வெளியெனுஞ் சொல்லின குடும்பச் சொற்களெலலாம் புறத்தார்க்குப் புலனாகும பொருட்களையே குறிக்கின்றன.

வெள்ளி, வெள்ளை, வெள்ளம், விளக்கம், விளக்கு, வெளிச்சம், வெண்மை, வெட்சி, வெண்ணை என வருதல் காண்க.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" (திருக்குறள்). (ப் உ க் ஐ) புகை, தீயுண்டென்பதைப் புறத்தார்க்குப் புலனாக்குதல் நோக்குக. எனவே, வெளிப்பாட்டுப் பொருள் தருகின்றன. புண் (ப்உண்) புண் வெளிப்பாட்டுப் பொருள், ஒட்டைப்பொருள். புண் என்பது உலகவழக்கில் மக்களுக்கு வரும் நோய்களிலொன்றையுங் குறிக்கின்றது. அதைக் கண்டென்றுங் கூறுவ. இங்ஙனம் புண் தோன்றுவது, உடலிலுள்ள செந்நீர் நலங்குன்றியவாற்றைப் புறத்தேபுலனாக்குமாற்றால் வெளிப்பாட்டுப் பொருளும், உடலின்கண் துளை உண்டாக்கலின ஒட்டைப்பொருளுந் தருகின்றது.

(தொடரும்)

---

### திருமணவாழ்த்து

#### பொன்னம்பலம்-தையல்அம்மாள்

மீசாலைதெற்குவாசரும் திரு. வி. தம்பு அவர்களின் புத்திரனும் கொழும்பு வருமானவரி நிலையத்தில் கடமை வகிப்பவருமான நிறைநாட்செல்வன் த. பொன்னம்பலம் அவர்களுக்கும் திருநெல்வேலிவாசரும் காலஞ்சென்ற திரு. நமசிவாயம் அவர்களின் புதல்வியும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை அதிபர் டக்ரர் வை. த. பசுபதி அவர்களின் பிரிய மருகியுமான நிறைநாட்செல்வி தையல் அம்மாளுக்கும் நிகழும் யுவவருடம் தைத்திங்கள் 28-ம் நாள் திங்கட்கிழமை (10-2-36) நிகழ்ந்த நன்னாளில் சகல வைபவங்களுடன் திருமணம் நடந்தமைகேட்டு மிக இறும்பூதடையலானேம். மணமக்கள் பலவகைச் சிறப்புகளுடன் எல்லா நலன்களுமெய்தி இன்ப நல்வாழ்வில்ஒன்றி பதினாறும் பெற்றுப் பெருவாழ்வுவாழ எல்லாம் வல்லஇறைவன திருவருள் பாலிப்பாராக.

### கலியாணத்தில் கொலை.

நந்தாட்ஜில்லா கொண்டல்வாடிப் பொலிசார் மிகவும் கோரமான ஒரு கொலையின் மர்மத்தைக் கண்டறிந்துவிட்டனர்.

ஒரு பணக்கார மார்வாரி வீட்டில் கலியாணம் நடைபெற்றபோது, அம்மார்வாரியின் வேலைக்காரனான மஹாதேவ் என்பவன், அக்கலியாண வீட்டிலிருந்த 7 வயதுப் பாலகன் ஒருவனை அகற்றிச்சென்று அப்பையனை தலையைவெட்டி, தோலை உரிதது ஒரு இடத்தில் மறைத்து வைத்துவிட்டு, வழக்கம்போல் கலியாணத்துக்கு வந்ததாகச் சொல்லப்பட்டது.

பையனைக் காணோமென்ற தகவலறிந்த பொலீசார் முமமுரமாகத் தேடியதன் பயனாக மாமதனை அறிந்து, மஹாதேவையும் கைதுசெயதனர்.

மஹாதேவ் வீட்டில் அந்தப் பையனின் உடல் பார்சல்செய்யப்பட்டிருந்ததையும் பொலீசார் கண்டுபிடிததார்களாம்.

கொலையுண்ட பையன், கலியாணத்திற்கு வந்திருந்த ஒரு பணக்கார மார்வாரியின் புதலவனென்றும், பெருமதிப்புள்ள நகைகளை அப்பையன் போட்டுக்கொண்டிருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

---

**இல்லை யென்னாது கொடுத்தல் நற்குடியிற் பிறந்தவரிடத்து உண்டு.**

## வசைபாடக் காளமேகம்

[மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர், பண்டிதர் திரு. கா. போ. இரத்தினம் அவர்கள், வட்டுநகர் இந்து வாலிபர் சங்க ஆதரவில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்]

(முற்றொடர்)

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களே!

சங்ககாலத்தில் வாழ்ந்திருந்த சீத்தலைச்சாத்தனார் எனும் புலவருடைய சாத்தனாரெனுமியற்பெயருடன் சீத்தலை எனுமடை சேர்க்கப்பட்ட காரணத்தை உங்களிற் பலர் அறிந்திருப்பீர்கள். அதனை,

"சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குத் தேனளாய், மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—சாந்தி, மலைக்குத்து மால்யானை வள்ளுவர் முப்பாலாற், றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு."

என வள்ளுவமாலை எடுத்துரைக்கின்றது. புலமை நிறையாத புலவர்கள் பாடிவரும் செய்யுள்களிலுள்ள பிழைகள் ஒவ்வொன்றுக்கும் தமது கையிலுள்ள எழுத்தாணியால் தம் தலையில் ஒவ்வொருமுறை குத்திக்கொள்வரென்றும் அதனாலவர் தலையில் சீ நிரம்பியிருந்ததெனறும் கூறுவர். இடைக்காலத்திலும் தமக்கொப்பாரும் மிக்காருமில்லையென்று செருக்கிய புலவர்களை அவர்களினும் புலமையான் மிக்கோர்பலர் அடக்கியவர்களுக்கு நல்லறிவையூட்டியிருக்கின்றனர். அனந்தபட்டரின் செருக்கையடக்கிய வில்லிபுத்தூராழ்வாரின் கல்விச்செருக்கை ஓதுவார் உரைப்பார் கேட்பார் உன்னுவாருளத்தையுருக்கும் திருப்புகழின் ஆசிரியராகிய அருணகிரிநாதர் அடக்கினர். ஒட்டக்கூத்தருடைய பெருமிதத்தைப் புகழேந்தியார் ஔவையார்முதலியோர் அடக்கினர் என்பர். ஒட்டக்கூத்தர் குலோத்துங்கனிடம் பரிசுபெற வரும் புலவர் பலரைப் பலவாறு வருத்திவந்தார்.

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியனிங்கில்லை குறும்பியளவாய்க் காதைக் குடைந்து தோண்டி, எட்டினமட் டறுப்பதற்கோ வியல்பில்லை இரண்டொன்றாய் முடிந்துதலை இறங்கப் போட்டு, வெட்டுதற்கோ தமிழ்ஒட்டக் கூத்தன் இல்லை, விளையாட்டாக் கவிதைதனை விரைந்து பாடித், தெட்டுதற்கோ தமிழறியாத் துரைகள் உண்டு தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே."

இச்செய்யுளில் குறிக்கப்பட்ட புலவர்களைப்போலவே காளமேகப் புலவரும் அதி மதுரகவியின் செருக்கையடக்கவேண்டி அவ்வாறு கூறினர். அதனை அதிமதுரகவி அகதது றுத்திக் கொண்டு, அரசன் ஆஸ்தான மண்டபத்தையடைந்து, தனதாசனத்திலமர்ந்து, தன் மாணவனொருவனை அழைத்துக் கடைவீதியில் நின்று செயயுள் செய்தவன் யாவென அறிந்துவா என விடுததான். அவ்வாறே மாணவன் சென்று, புலவருடைய ஊர்பெயர் வினவிலும், புலவரவர்கள் தெய்வப்புலமையுடையாராகையால் அவன் வந்த காரணத்தையும பிறவற்றையும் அறிந்து கொண்டு, அதிமதுரகவியை யின்னும் பழிககவும், தமது ஆசுகவிப்பெருமையை யவனுக்கறிவுறுத்தவும் அகத்தன்னி,

"தூதைந்து நாழிகையில் ஆறுநாழிகைதனிற் சொற்சந்த மாலை சொல்லத், திகழிலா அந்தாதி ஏழுநாழிகைதனிற் றொகைபட விரித்துரைக்கப், பாதஞ்செய் மடல்கோவை பத்துநாழிகைதனிற் பாணியொரு நாள்முழுதுமே, பாரகாவியமெலாம் ஓரிரு தினத்திலே பகரக் கொடிக் கட்டினேன், சீதஞ் செயுந்திங்கள் மரபினால் நீடுபுகழ் செய்யதிரு மலைராயன்முன், சீறுமாறாகவே தாறுமாறுகள்சொல் திருட்டுக் கவிப்புலவரைக், காதங் கறுத்துச் செருப்பிட் டடித்துக கதுப்பிற் புடைத்து வெற்றிக், கல்லணையி னெடுகொடிய கடிவாளம இட்டேறு கவிகாள மேகம் நானே"

எனுஞ் செய்யுளை, ஓர் சீட்டிலெழுதி மாணவனிடங் கொடுத்தனுப்பினர். மாணவன் அதனைக் கொண்டுபோய், அதிமதுரகவியிடம் கொடுக்க, அவன் அதை வாசித்து, அளவற்ற வெகுளியுற்று, அரையனுக்கும் அதனைக்காட்டி, இப்படி எங்களையெல்லாம் ஏளனம் பண்ணியவனுக்கு ஏற்ற தண்டனை கொடுக்கவேண்டுமென்று வேண்டினன். அரசனும் அதற்கிசைந்து காளமேகப் புலவரைத் தன்னிடம் கொணருமாறு தன் ஒற்றர்களுக்குக் கட்டளையிட்டான். அது கண்ட அதிமதுரகவி அரசனைப் பார்த்து "அரசே! அப்புல்லன் ஈண்டு வந்தால் நீங்கள் அவனை உபசரியாமலும், இருக்கை நல்காமலுமிருக்க வேண்டும்" என்ன, அவனுமதற் கொருப்பட்டனன். "அரசனுக்குக் கிட்டச் செல்ல அவனைவிடலாகாது. ஆகையால் நீங்கள் எல்லோரும் நெருங்கியிருங்கள்" என்று மற்றைய புலவர்கட்கும் புகன்று அதிமதுரகவி தன்னாசனத்திலமர்ந்து, புலவர் வரவை எதிர்பார்த்தான். (தொடரும்)

# சண்டமாருதம்

(புலோலி மேற்கு, திரு. சு. வேதாரணியம் அவர்கள்.)

(குறிப்புரை)

வில்லியம் ஸேக்ஸ்பியர், ஆங்கில நாடகாசிரியர் யாவருள்ளும் முதன்மை பெற்றவர். அவர் காளிதாசர் இளங்கோவடிகள் முதலிய இந்தியக் கவிஞரை ஒத்த தரத்தினராக நுண்ணறிவாளர் பலராலும் போற்றப்படுவர். அன்னாரியற்றிய நவரசந் ததும்பும் நாடகங்கள் பல.

அவற்றுள் "த டெம்பெஸ்ட்" (The Tempest) எனப் பெயரியது ஒன்று. ஆண்டு ஓர் மாருதங் காரணமாகவே காதை இனிது முடிவெய்தலா நிகழ்த்தலின், அந்நூல் அப்பெயர்த்தாயிற்று. இவ்வியைபே நோக்கி ஈண்டுத் தரப்படும் அதன்மொழிபெயர்ப்பும் முதனூல்வழிவந்ததோர் பெயரான் வழங்கப்படுவான் "சண்டமாருதம்" எனப் பெயர்த்தாம்.

இதுநிற்க, முன்னுரையாய்க் காதையின் சுருக்கமும், நூல் (முதநூலாசிரியரின் மாண்பும் சிலவேனுங் கூறுதல் இந்நிலைக்கண் அமைதல் கூடாமைநோக்கி அவைதமை விடுத்தாம். அன்றியும் விரியுமாகலின் அஃதஞ்சியும் விடுத்தாம்.

### நாடகபாத்திரங்கள்

ஆலஞ்சன்: நேப்பிள்தேய அரசன்
சபத்தியன்: அன்னவன் சகோதரன்
புரசுரன்: மயிலைநாட்டிற் குரித்துடைக்கோமன்
அந்தோனி: சூழ்ச்சிகொண்டுமயிலைநாட்டை அபகரித்தோன் (புரசுபரனின் சகோதரன்)
பரிதிநந்தன்: நேப்பிள்தேயஅரசனின் குமாரன்
கஞ்சாலன்: ஆலஞ்சனின் அமைச்சருள் ஒருவன்
ஆதிரையன், பிருஸ்சிஸ்கன் } அரசவைப்பிரபுக்கள்
காலிபன்: ஓர் மிலேச்சன் (புரசுபரனின் அடிமை)
திரிசூலன்: ஓர் விதூஷகன்
ஸ..தபானன்: ஓர் குடிவெறியன்
மாலுமி
சுக்கானி
கப்பலோட்டிகள்
மிராந்ததேவி: புரசுபரனின் புத்திரி
ஆரியன்: ஓர் நரகன்
இரிசன், சிரேஷன், ஜூனன் } ஆரியன் சகாக்கள்
தேவதைகள்
அருவிவெட்டுவோர்
புரசுபரனின் ஏவலாளராம் மற்றும் நரகர்

களம் (1) கடலிடத்து ஓர் கப்பல்
(2) ஓர் தீவு

### அங்கம் I காட்சி 1

[களன்:—கடல் மத்தியில் ஓடுமோர் கப்பல். சூல்கொண்ட மேகம் சூரியனைத் தன்னகத்து மறைத்தலும் காரிருளெய்தி யுகாந்தகாலத்தவை யொப்ப இடி முழக்கமும் மின்னலும் இடைவிடா துண்டாகின்றன. கடல் கொந்தளிப்புறுகின்றது.] (மாலுமியும் சுக்கானியும் வருகின்றனர்.)

மாலுமி:— ஏண்டா! சுக்கானி!

சுக்கானி:— இதோ வந்துட்டேன். யாதோ உத்தரவு?

மாலுமி:— ஏண்டா, உன் சகாக்களை அழையேண்டா. ஜடிதியில் பாய்களை வலியுங்கடா. எங்காவது மோதிடுமே. ஜடிதி, ஜடிதி. (செல்கின்றான்) (கப்பல் கிளாஸ்மார் வருகின்றனர்)

சுக்கானி:— ஏ, ஏ, தம்பிமாரே! ஜடிதியில் வலியுங்கடா. உயரப்பாயை வலியுங்கடா. அதோ மாலுமி அண்ணாச்சி கூச்சலிடுறானே. ஜடிதி, ஜடிதி.

நேப்பிள் அரசன் ஆலஞ்சன், சபத்தியன், அந்தோனி, பரிதிநந்தன், கஞ்சாலன் முதலியோர் மேல்தளத்திற்கு வருகின்றனர்.

ஆலஞ்சன்:— ஏ சுக்கானி, ஜாக்கிரதை ஜாக்கிரதை. மாலுமி எங்கடா? மற்றுமாட்களை உற்சாகப்படுத்துடா.

சுக்கானி:— மஹாராஜ், உங்கேயே நிண்டுகொள்ளுங்க.

அந்தோனி:— எங்கடா மாலுமி? பேசேண்டா.

சுக்கானி:— அவாள் ஊளையுடுறது கேக்கலையா! எங்களை ஏன் மினைக்கெடுத்துறை. உங்க காம்பறாவிலிருங்களேன். சுழிக்காத்திலை மோசம்பண்ணிடத்தான் யோசனையோ?

கஞ்சாலன்:— காரியமில்லை, ஏன் படபடக்கிறாய்? அமைதியாயிரடா.

சுக்கானி:— கடல் அமைதியெண்டாக்க சரி, ஆனா இந்தநிலைமையிலுமா சும்மா ராயர் பேரைச்சொல்லி சிரத்தை அதிகம்பண்றாப்போல ஊளையிடுறியளே. போங்க காமறாவுள்ளே. சோலிபிடியாதேங்க.

கஞ்:— சரி, சரி, இன்னும் ஒரு தரந்தான்சொல்றேன். கப்பலில் யார் மகான் பயணம்பண்றா என்று சதா தியானமாயிரடா.

சுக்:— என்னைப் பார்த்தாப்போல் அருமையானவர் ஒருவர்தான் வாறார். நீ ஒரு ராஜ்ய மந்திரி என்பது உண்மைதான். ஆனா இந்தச் சந்தடியில் என்னபண்ணுவாய். உன் ஆஞ்சா சக்கரத்தைச் சுழத்திட்டு இந்தச் சங்கடத்தைத் தீத்துவை பாப்பம். நாங்கள் ஒண்ணும்செய்யாமலே இருந்துடுறோம். இல்லாட்டாக்க கெட்ட காலத்திற்கு என்னதீங்கு விளையப் போகுதோ ஏற்றுக்கொள்வதற்கு ஆயத்தம்பண்ணிட்டிரு.

ஹே, ஹே, தயைசெய்து எங்களிட முட்டுக்கட்டை இடா தப்பால் செல்லு. (செல்கின்றான்)

கஞ்:— எப்படியானாலும் இவனால் நம்மளுக்கு அதிகம் நன்மையேயுண்டு. தாழ்ந்துடமாட்டோம் என்ற துணிச்சல் அவனுக்கு அவ்வளவுண்டே. யமக்கயிறுபோலே பிடிவாதமாயிருக்கிறானே. காரியமில்லை, தான் தூக்குமரத்துக்குப்போனாலும் கப்பலைத் தாழ்த்துட விடமாட்டேன் என்றா. சரி நமக்குக் கஷ்டமான காலமானாலும் அதனால் நன்மை வரட்டுமே. அவன் கெட்டாலென்ன? தூக்கிற்குப் போனாலென்ன?

(செல்கிறான்)

(சுக்கானி வருகிறான்)

சுக்:— பிடியடா பிடியடா, நுனிமரப்பாயை நடுவிலைபோட்டு வலித்துப்பாரு. [உள்ளிருந்து கூச்சல்] யாரடா ஊளையிடுகிறான். இந்தப் புயலிலும் மோசமாயிருக்கே. ரேவடி சந்தடிபோலிருக்கே.

(சபத்தியன், அந்தோனி, கஞ்சன் திரும்பிவருகின்றனர்.)

இதென்னடா சனியன் தொலையமாட்டுதென்னாப்போல் திரும்பிட்டாங்களே. ஏண்டா வந்திருச்சியள். எல்லாத்தையும் கைவிடச்சொல்றியளடா. எல்லாரும் அமிழ்ந்திப்போடுறதுதான் உங்கட்கு விருப்பம் எண்ணாப்போலிருக்கே.

சப:— நாய்போல் வெள் வெள் என்று குலைக்கிறை, உனக்குத் தொண்டைப்பிளவு வராதாடா.

சுக்:— சரியப்பா சரி, நீங்கள்தான் எல்லாத்தையும் பார்த்துக்கொளுங்க. நான் இதோ போயுடுறேன்.

அந்:— குளறியா, நீ தொலைந்திடடா. தொலை தொலை. நீ தாழ்ந்தாலென்ன விட்டாலென்ன? எங்களுக்கு உன்னைப்போலப் பயமில்லையே.

கஞ்:— கப்பல்தான் ஓடம்போல் சிறுத்திலிருந்தாலென்ன? அல்லது தண்ணீர்தான் கோலிக்கொண்டிருந்தால்தானென்ன? சிரத்தையாயிருந்தால் கரைகொண்டுபோடலாம். ஆனால் இந்தச் சனியன் கைபோடுகிறபடியால் கட்டாயம் அமிழ்த்தியே விட்டுடுவான் பந்தயம் பிடிக்கிறேன்.

சுக்:— அப்பப்பா! என்ன பண்ணுறது காத்தோடே அணைத்துப் பிடிக்கவேண்டியதுதான். இரண்டுபாயையும் வலிச்சிட்டு உயரப்போகட்டுமே, விடுங்கள் பார்ப்பம்.

(கிளாஸ்மார் நனைந்துபோய் வருகின்றனர்.)

கிளாஸ்மார்:— போச்சடா போச்சு, ஆண்டவனை நினையுங்கடா நினையுங்க.

சுக்:— ஏண்டா குளிரிலை, பல்லுக்கிட்டிக்கொண்டுதா? சீச்சீ கேவலம்,

கஞ்:— அரசனும் குமாரனும் செபத்திலேயே யிருக்கிறாங்க, நாங்களும் அவங்கட்காகவே செபம்பண்ணிடுவோம்.

சப:— போச்சப்பா பொறுமை எல்லாம் போச்சு.

அந்:— எங்கடா குடிகாறர்கையிலகப்பட்டு எங்கசீவன்களுக்கு மோசந்தான் விளைக்கப்போறாங்க. இந்த முட்டாள் இதைப்போலை பத்துமடங்கு மோசமான கொந்தளிப்பிலை அகப்பட்டுத் தாண்டுபோனால்தானென்ன.

கஞ்:— இந்தா பிடித்து மிண்டிப்போடுறேனென்னு ஒவ்வொரு திரையுங் கிளம்பிக்கொண்டிருக்கே. அ[illegible] போதுந்தான் தாழமாட்டேன், தூ[illegible]கிட்டுவிடலாம், பந்தயம்பிடி என்னு துணிச்சலாயிருக்கானே.

[உள்ளே சந்தடி. "ஆண்டவனே கிருபைகூர். ஆ! பிரியவும் விதியா! என் பத்தினியே! பிள்ளைகாள்! பிரியாவிடை! சகோதர என் வந்தனம். ஆ! பிரமன் எழுத்துப் பிரியவும் இருந்ததா."]

அந்:— அரசனுடன் அனைவரும் அமிழ்ந்துவோம்.

சப:— அவனிடம்சென்று பிரியாவிடை கூறுவம்.

(அந்தோனியும் சபத்தியனும் செல்கின்றனர்.)

கஞ்:— ஆண்டவனே இவ்வகண்ட கடலுக்குப் பதிலாய் ஒருகுழிமேடைநிலமாயினும் பெற்றாலோ என்செய்குவம்! ஆண்டவன் செய[illegible] நடக்கட்டும்!...........
நிலத்தில் மரித்தாலோ!........ஈசா!

(திரைக்குள் செல்கிறான்)

(தொடரும்)

# கலம்பகம்

ஹாபிக்கஞ்சு நதி என்னுமிடத்தைச் சேர்ந்த பொலிஸ் உபபரிசோதகர் ஒருவர் தனது மனைவியையும் மாமனையும் சுட்டுக் கொன்றுவிட்டு ஓடி மறைந்து விட்டாராம்.

o o o

ஹைதராபாத் நிஜாமின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தினிமித்தம் நடைபெறும் சங்கீதக் கச்சேரிக்கு மாத்திரம் 70,000 ரூபா செலவு செய்யப்படுமாம்.

o o o

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு றக்பி என்னுமிடத்திலுள்ள எல்ஸ்டிரி சினிமாப்படம் பிடிக்கும் தொழிற்சாலையில் தீவிபத்தேற்பட்டதால் 5 லட்சம் பவுணுக்கு மேல் நட்டமேற்பட்டதாம்.

o o o

எல்லூரிலிருந்து 70 மைல் தூரத்துக்கப்பாலுள்ள பீமாவரம் என்னுமிடத்தில் 38 பேருடன் சென்ற வள்ளமொன்று புரண்டதால் அதிலிருந்தோருள் 28 பெண்கள் உயிர்துறந்தனராம்.

o o o

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள லாங்தீவில் சிறுவர்களும் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்யப் பயிற்றப்படுகின்றார்கள். அங்கு ஹேர்மேன் எண்டர்லின் என்னும் 4 வயதுச் சிறுவன் துப்பாக்கிப் பிரயோகத்தில் தேர்ச்சி பெற்றிருக்கிறானும்.

o o o

அமெரிக்காவில் நடிகனாக விருக்கும் பிரட்டீபர்த்தலேகமியூ என்னுஞ் சிறுவனுக்கு ஒருவாரம் 200 பவுண் வீதம் சம்பளங் கொடுக்கப்படுகிறதாம்

o a a

அமெரிக்கக் குடியரசுத் தலைவராகிய திரு. றூஸ்வெல்ட் அவர்களுக்குக் கடிதப் போக்கு வரத்துச் செய்வோர் அவரது பெயரை 182 விதமான வெவ்வேறு மாதிரியாக உச்சரிக்கும்படி விலாசம் எழுதியிருக்கிறார்களாம்

o o o

சென்ற வெள்ளிக்கிழமை வட்டகாமம் என்னுமிடத்தில் ஒரு யானை மதம் பிடித்துத் தனது பாகனைக் கொன்று தின்று விட்டதால் அதைத் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றுவிட்டனர். அதைக் கொல்லுவதற்காக 20 குண்டுகள் வரையில் உபயோகிக்கப்பட்டதாம்.

o o o

வெள்ளவத்தைக் கால்வாயில் வேலை செய்யும் 800 தொழிலாளர் சம்பளம் கூட்டிப் பெறுவதற்காக வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனராம்.

o o o

தென்னிந்தியாவைச் சேர்ந்த பலவிடங்களில் பேதிநோய் காணப்பட்டிருப்பதால், இலங்கையிலிருந்து தனுஷ்கோடிக்குப் பிரயாணஞ் செய்யும் புகைரதச் சீட்டுக்கொடுப்பது நிறுத்தப்பட்டிருக்கிறதாம்.

o o o

பாம்பு கடிக்கு மாற்றாக ஊசியினால் தேகத்திற்குள் செலுத்தக்கூடிய மருந்து கொழும்பில் மிக அரிதாகி விட்டது. பாம்பு கடித்த 15 நிமிஷங்களுள் இந்த மருந்து தேகத்திற் செலுத்தப்பட்டால்தான் பிரயோசனமுண்டாகுமாம்.

o o o

1934-ம் ஆண்டு உத்தரவுபெறாது பல்லபொலை வரஹக்கொட்டா நல்லா முதலிய இடங்களில் காரியாலயங்களை வைத்து நடத்தியதாக மாத்தளை நொத்தாரிசு வாகிய திரு. எச். டி. குணசேகரா என்பவருக்கு 100 ரூபா அபராதம் அல்லது மூன்றுமாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பட்டதாம்.

o o o

நியூயார்க் நகரிலுள்ள ஒரு கட்டிடம் 85 மாடிகளுடையதாயிருக்கிறதாம்.

o o o

ஜெர்மன் தேசத்தில் தயாரிக்கப்படும் ஒருவிதமான காற்றுள்ள உடுப்புகளை அணிந்து கொண்டு தண்ணீரில் நடக்க முடியுமாம். o o o

இலங்கைப் பொருள்களை விற்பனை செய்வதற்குப் 'புதியஇடங்கள் தேடுவதற்காக ஐரோப்பாவுக்கு ஒரு வர்த்தகப்பிரதிநிதியை அனுப்ப இலங்கை அரசினர் உத்தேசித்திருக்கின்றனராம்.

ஜெனேவாநகரில் சீமெந்தினால் ஓர் கப்பல் செய்திருக்கிறார்களாம்.

o o o

சூரியகாந்திப் பூவிலிருந்து றப்பர் உற்பத்தி செய்யும் முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதாம்

o o o

தற்போது துருக்கி தேசத்தில் 6000 யுத்த விமானங்களிருக்கின்றன. இன்னும் 1000 விமானங்கள் வாங்கத் துருக்கி அரசினர் உத்தேசித்திருக்கின்றனராம்.

o o o

இத்தாலியச் சர்வாதிகாரியான முஸோலினியின் யுத்த அநீதியைக் கண்டித்துத் தினசரி 500 கடிதங்கள் அவருக்குச் சென்று கொண்டிருக்கின்றனவாம்.

o o o

சென்ற டிசம்பர்மாதம் 18ந் தேதி லண்டனில் காலஞ்சென்ற சேர் மார்கஸ் பேர்ணண்டோ என்பவரின் பிரேதம் சென்ற திங்கட்கிழமை கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டதாம்.

o o o

சென்ற செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு–நீர்கொழும்பு றோட்டில் தண்டுகாமம் பாலத்துக்குச் சமீபமாக ஏற்பட்ட மோட்டோர்விபத்துக் காரணமாகக் கொழும்பு றெயில்வே ஸ்றேசன் புத்தகக்கடைச் சொந்தக்காரரான யோசேப் என்பவர் மரணமடைந்தாராம்.

o o o

புறக்கோட்டை வாசியான ரெட்டி டி. டி. சி. சில்வா அபயசேகரா என்பவர் குடித்துவிட்டுக் குழப்பஞ்செய்தாரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு ஒருமாதக் கடுங்காவற்றண்டனை விதிக்கப்பெற்றார். இவர் இதற்குமுன் இதேவிதமான குற்றச்சாட்டுகளில் 9 முறை தண்டனைபெற்றவராம்.

o o o

இரத்தினபுரி வாசியான ஆர். ஏ. கீசிங்க என்பவர், தனது மோட்டார் லொறியில் அதிகமாகச் சாமான்களை ஏற்றினரெனக் குற்றஞ்சாட்டப்பட்டு 200 ரூபா அபராதம் விதிக்கப்பெற்றாராம்.

o o o

சிலரசாயனப் பொருட்களைக் கலந்து அவற்றைத் தெளிப்பதன் மூலம் மழையைப் பெய்விக்கலாமெனப் போலந்து தேச விவசாயி ஒருவர் கூறுகிறாராம்.

மாணவர்பகுதி (3)

## செவ்விந்தியக் குழந்தைகள்.

சுன்னாகம் (மயிலணி) சைவவித்தியாசாலை ஆசிரியர்
திரு. இ. சபாரத்தினம் அவர்கள்

பிள்ளைகளே! சுவிற்செலந்துக் குழந்தைகளைப் பற்றிச் சென்றவாரம் இப்பத்திரிகை வாயிலாகச் சம்பாஷித்தேன். இப்பத்திரிகையில் செவ்விந்தியக் குழந்தைகளைப் பற்றிச் சம்பாஷிப்போம். வட அமெரிக்காவின் காடுகளிலே வசிக்கும் பூர்வீக சாதியாரே செவ்விந்தியர். இவர்கள் வேட்டையாடியே தம் சீவியத்தைக் கழிப்பர். இவர்கள் குடும்பத்தில் பிள்ளைகள் பிறந்தால் அதற்குச் சிறகு, கழுகு என்றர்த்தமுள்ள பெயர்களையே வைப்பார்கள்

எங்கள் கோழிக்கூடு போன்ற வடிவமான வீடுகளிலே அவர்கள் வசிப்பார்கள். செவ்விந்தியப் பெண்கள் வட்டமாகச் சில கம்புகளை நட்டு அவற்றின் நுனியைச் சேர்த்துக் கட்டுவார்கள். பின் ஓர் விதமரத்தின் பட்டையினால் நடப்பட்ட மரங்களை மூடி வேய்வார்கள். நுனியில் ஓர் துவாரம் விடப்பட்டிருக்கும். அதுவே புகைபோகும் வெளி, அக்குடிசையின் உள் நிலத்தில் மணல் பரப்பப்பட்டிருக்கும். அதனுட் செவ்விந்தியரின் அம்பு, வில்லு, கைக்கோடரி தொங்க விடப்பட்டிருக்கும். எங்கள் ஊரவர்கள் மரத்தொட்டில்களிலும், பிரப்பந் தொட்டில்களிலும் தங்கள் குழந்தைகளைப் போட்டு ஆட்டுவதுபோல செவ்விந்தியரும் மரத்தினாற் றொட்டிசெய்து மானின்தசை நாரினாற் கட்டி அக்குடிசையிற் றொங்கவிடுவார்கள். அத்தொட்டிலிலே குழந்தைகள் கிடத்தப்படும். தொட்டிலின் அடியில் மெத்தைபோற்பாசி போடப்படும். சுவாத்தியமுள்ள நாட்களில் தொட்டில் குடிசைக்கு வெளியே தொங்க விடப்படும்.

குழந்தைகள் வளர்ந்தவுடன் மான்தோலை ஆடையாக அணிவார்கள். இறகுகளினாற் தங்களைச் சோடித்துக் கொள்வார்கள். மணிகளினாற் செய்யப்பட்ட ஆபரணங்களை அணிவார்கள் பையன்கள் வயசேறக் காடுகளிற் சென்று நாணற்புல் சேகரிப்பார்கள். நம் நாட்டார் பல வேர்கள் சேர்த்துச் சாயங்காய்ச்சிப் பனையோலையில் ஊற்றுவார்கள் பின் சாயமூற்றப்பட்ட பனையோலைகளினால் பாய், கூடை முதலியவற்றை இழைப்பார்கள். அதே போல அந்நாட்டுப் பையன்களும் பலவித வேர்கள் சேகரித்துச் சாயங் காய்ச்சுவர். பின் நாணற்புல்களுக்குச் சாயமிடுவர். இந்நாரினால் பாய், கூடை முதலியன இழைப்பார்கள். பாய் அவர்கள் படுக்க உதவும். கூடைகள் விலையுயர்ந்த ஆபரணங்களும், உடைகளும் வைப்பதற்கு உதவும்.

வளர்ந்தபையன் வேட்டையாடுவதற்காக அதிக தூரம் ஓடிப்பழகுவான். மரங்களையுஞ் செடிகளையும் நுழைந்து செல்வதற்குப்பழகுவதும் அக்காலமே.

செவ்விந்தியப் பையன் தைரியசாலியாகும்விதத்தைக்கேட்க உங்களுக்குச் சிரிப்புண்டாகும். பன்னிரண்டுவயசு வந்தவுடன் பையனைத்தகப்பன் காட்டுக்கு அழைத்துச் செல்வான் தகப்பன் பையனைப்பார்த்து "இங்கு தனிமையாய் பலநாட்களுக்கு உபவாசமிருக்க வேண்டும். அப்பொழுது ஒரு பெரிய தேவதை இங்கு வந்து உன்னைப்பெரிய தைரியசாலியாக்கும்" என்று சொல்லிப் போய்விடுவான். பையன் பலநாட்களுக்கு உண்ணுவிரதம் இருப்பான். பின் ஓர் தேவதை அவன் முன் தோற்றும் அத்தேவதை "நீவிரும்பிய வண்ணம் தைரியசாலியாவாய்" என்று சொல்லிப் போய்விடும்.

செவ்விந்தியப் பையன் பள்ளிக்கூடத்துக்குப் போவதில்லை. ஆனால் அவன் கண்கள் மிகவும் கூர்மையாயும் செவிகள் எவ்வித நுண்ணிய சத்தத்தையுங் கேட்கக்கூடியனவாயு மிருக்கும். பையனுக்குத் தெரியாவிட்டாலும், படங்கீறுவதில் நிபுணனாகவிருப்பான். தங்கள் சாதியின் அடையாளமான கழுகைக்கீறுவதில் அவனுக்கு அதிக விருப்பமிருக்கும். எம்மூர்க்குழந்தை கரிகொண்டும் நிறக்கட்டிகொண்டும் சுவர்களிற் பல உருவங்கள் கீறுவதுபோல, அப்பையனுந் தன்குடிசையிலுள்ள மரங்களிற்பல படங்களைக்கீறுவான். வெளியிலுள்ள மரங்களிற் பல படங்கள் கீறி மற்றவர்களின் பார்வைக்கு விடுவதுமுண்டு. ஒவ்வொரு படமும் ஒவ்வொரு பொருளைக் குறிக்கும். மற்றவர் கீறும் படங்களின் அர்த்தத்தையும் விளக்கு மாற்றல் பையனுக்குண்டு, பெரியவனானதும் அம்பு வில்லுக் கொண்டு வேட்டைக்குச் செல்வான். மான், காடி முதலிய மிருகங்களை வேட்டையாடிக் கொல்வான். கொன்ற மிருகங்களின் மாமிசத்தையுந் தோலையுந் தன் குடிசைக்குக் கொண்டுவருவான். இறைச்சியே அவனின் பிரதான உணவு.

ஆந்திர சர்வகலாசாலை உப அத்தியட்சகரான சோ. ராதாகிருஷ்ணன் அவர்கள் ஒக்ஸ்வோட் சர்வகலாசாலை சமய விஷயங்களைப் போதிக்கும் பேராசிரியராக நியமனம் பெற்றிருக்கிறாராம்.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

"நாட்டுச்சீவன சாஸ்திர பாட புத்தகம்"

A Text Book of Rural Science (Tamil)

ஆக்கியோன்:– சுன்னாகம் மயிலணிச் சைவவித்தியாசாலை ஆசிரியர்,

திரு. இ தர்மலிங்கம் அவர்கள்.

இந்நூல் தமிழ் J. S. C., S. S. C., ஆசிரிய தராதரப் பத்திர வகுப்புகளுக்குரிய பாட அட்டவணையை முற்றாக அநுசரித் தெழுதப்பட்டது.

சமீபத்தில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு அருந்துணையாயுள்ளது.

சிறந்த விஷயங்களைக் கொண்டது.

பல சித்திரங்களைக்கொண்டு மிளிர்வது.

வண. சுவாமி ஞானப்பிரகாசர், யாழ்ப்பாணம், அரசினர் யாதிரித்தோட்ட அதிபர் திரு. M. R. M. ஜெபரத்தினம், வித்தியாதரிசகர் திரு. சே. தியாகராசா, அரசினர் ஆசிரிய கலாசாலை அதிபராயிருந்து இளைப்பாறியிருக்கும் திரு. அ. பொன்னையா, பரமேஸ்வரக்கல்லூரிப் பிரதம ஆசிரியர் திரு. சு. நடேசபிள்ளை ஆதியோரின துமதிப்புரையைக் கொண்டது.

முன்னூறு பக்கங்களுடையது.

குறைந்த விலையில் கிடைக்கக்கூடியது

வட இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தாரால் வெளியிடப்பெற்றது.

விலை ரூபா 2.

கிடைக்குமிடம்:-

தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.

இரந்தவர்க்குக் கொடாமை துன்பம்.

## துண்டு துணுக்கு!

### எலெக்சன் போட்டி

('பத்திரிகைப் பித்தன்' எழுதுவது)

எமது யாழ்ப்பாணத்தின் 3 தொகுதிகளில் —வடமராட்சித்தெரிவு சம்பந்தமான கிளர்ச்சியே மிகநெருக்கடியானது. "எமது பாலசிங்கத்தையே தெரிவுசெய்யுங்கள்" என்ற விளம்பரங் காணுமிடத்து— இருகட்சியாரும் சந்தோஷமெய்துகின்றனர். இங்கு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் சைவசமய நாற்பாத வழிகள் தெரிவு சம்பந்தமாக நிகழுகின்றதெனலாம்.

1. சிலர் கூட்டங்கூட்டுதல், அவர்புகழ் கூறுதல், பந்தரிடுதல், மாலையிடுதல், நோட்டீஸ்பரப்புதல், கொடி தொங்கவிடுதல் முதலிய சரியை மார்க்கத்தை அனுட்டிக்கின்றனர்.

2. சிலர் கந்தோர்களிலிருந்து கந்தவர்க்கமாதிய சந்தனம் பன்னீர் வழங்குதல், தாம்பூலமாதிய நறும் பொருள்கள் உதவல், சிகரெட், பீடி ஆகிய கிளர்மணப் புகைப்பொருள்கள் கொடுத்தல், மதுபானமாகிய அபிஷேக திரவியம் ஈய்தல், காணுபவர்களைக் கைகூப்பி இறைஞ்சுதல் ஆதியாம் கிரியை வழியைக் கொண்டொழுகுவர்.

3. சிலர் "இருவருந் தேவை அவர் அதுசெய்தார்; இவர் இவை செய்வார்" எனக்கருதி மௌனமாய் யோகநெறி மேற்கொண் டொழுகுபவர்.

4. சிலர் யார் போனுலென்ன! எமக்குச் செய்வதொன்றுமில்லை. எல்லாம் இலங்கை ஈசனுகிய கவுணருடைய எண்ணத்தின்படியே நடக்கும். ஆனபடியால் நாம் ஒருவருக்கும் "வோட்" கொடுக்கமாட்டோம் என ஞானநெறிபூண்டிருக்கின்றனர். நிற்க,

பொதுவாகத் தேர்தலினுல் இதுவரை அடைந்த பயனுள் தலையாயது உள்ளொன்றுவைத்துப் புறம்பொன்றுகூறுதலாகிய பொய்யே என்பது வெளிப்படை. சில அதிகாரிகள்—யோக்கியர்கள் என்றிருப்போர்—ஊர்தோறும்போய் இந்தவிதமான பொய்களைச் சனங்கள் சொல்லத்தக்கவிதமாய்க் கேள்வி கேட்கின்றனர். வந்தவர்களின் முகத்தை மறுக்கமுடியாமல் அப்படியும் இப்படியும் சொல்லி அனுப்பிவிட்டுத் தம்மனத்துள் இருப்பவருக்கே துண்டு போடுவது என்றும் பலர் கருதுகின்றனர்.

இனி, நீலனுக்கடிக்கச் சூத்திரனுக்குப் பிட்டங் துடித்ததென்ற கதைபோல் இங்கே சிவப்புநிறத்தைக் குறைவாகப்பேச, அல்லது பச்சை நிறத்தைத் தாழ்த்திப்பேச வடமராட்சியைவிட்ட ஏனைய தொகுதிகளில் அவ்வந் நிறமுடையவர்களும் மகிழ்ந்தும் இகழ்ந்தும் வாழுகின்றனர்.

சுவர்கள் படும்பாடு சொல்லமுடியாது. திரு. பொன்னம்பலத்தைத் தெரிவுசெய்யுங்கள் என்ற நோட்டீஸ் ஒருபுறம். அதற்கப்புறம் நீக்கல்மண்டபத்தில் ராதா கலியாணம். அவற்றிற்குமேல் திரு. பாலசிங்கத்தைத் தெரிவுசெய்வோம் என்ற விளம்பரம். இவற்றையடுத்து சர்க்காமாக்பற்பொடியை உபயோகியுங்கள் என்ற விளம்பரம். இதற்கண்டையில் இப்பீரியல் ஸ்ரியூறிங் ரோக்கி பருத்தித்துறை என்ற பிரகடனம் ஒருபுறம். இவற்றினிடையிலே மின்மினிபோல் கொட்டகப்புல வைத்தியரொருவர் காவெட்டியில் இருப்பதான பத்திரமும் விளங்குகின்றது.

---

### ஊர்காவற்றுறைப் பிரதிநிதி அவர்களுக்கு உபசரணை

அராலி வாணிவிலாசசபை ஆதரவில் (26-1-36) ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணியளவில் வட்டுக்கோட்டைக் கிராமச்சங்கத்தலைவர் ஸ்ரீமான் சி. வேலுப்பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் அராலி அம்மன்கோவில் மண்டபத்தில் திரு. வை. துரைசுவாமி B. A. அவர்களைப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பெற்றமைக்கு உபசரிக்கும் நோக்கத்துடன் ஒரு வரவேற்பு மகாநாடு கூடியது. முதலாவது அம்மாளுக்குப் பூசை நடைபெற்றதும் மகாநாட்டுத்தலைவர் அவர்களால் பிரதிநிதியவர்களுக்கு மாலை சூட்டப்பெற்றது. பின்பு மேளவாத்திய சகிதத்துடனும் வாணவேடிக்கையுடனும் பிரதிநிதியவர்கள் மோட்டார்ரதத்தில் அராலி கரைப்பிட்டி விநாயகராலயத்திற்கு அழைக்கப்பெற்றுர் அங்கு அப்பெருமானுக்குப் பூசை முடிந்ததும் பிரதிநிதியவர்களுக்கு மாலைகள் சூட்டப்பெற்றன. பிற்பாடு உபசாணைக் கூட்டத்திற்காக அலங்கரிக்கப் பெற்றிருந்த அராலி சரஸ்வதிவித்தியாசாலை மண்டபத்திற்கழைத்துப் பெற்றுர். பிரதிநிதியவர்கள் ஷெ மண்டபத்திற்கு வந்ததும் சபை உபஅக்கிராசனர் திரு. மு. சின்னத்துரை அவர்களால் மாலை சூட்டப்பெற்று வரவேற்கப்பெற்றுர். அடுத்தபடியாக தாசில்தார் திரு. ச. கதிரவேற்பிள்ளை அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் தேவாரபாராயணத்துடன் ஷெ வித்தியாசாலையில் உபசரணைக்கூட்டம் ஆரம்பமாயது பின் திரு. அ தில்லையம்பலம் அவர்களால் பிரதிநிதியவர்களுக்கும் திரு. ச. அருணசலம் அவர்களால் அக்கிராசனருக்கும் மாலைகள் சூட்டப்பெற்றன. முதலில் அக்கிராசனரின் கேழ்விப்படி 5-ம் ஜார்ஜ் மன்னரின் மரணத்தைக் குறித்து 5-நிமிஷங்கள் அனுதாபம் கொண்டனர். பின் புதிரு. வி, நாகலிங்கம் ஆசிரியர் சில வந்தனப்பாக்களைப் பாடிச் சபையோரை மகிழ்வித்தனர். அடுத்ததாக அக்கிராசனரின் முன்னுரை முடிந்ததும் சபைத்தனுதிகாரி திரு. வி. நாகலிங்கம் அவர்களால் பிரதிநிதியவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பெற்றமைக்காகக உபசாரப் பாக்கள்பாடி வழங்கப்பெற்றன பின்பு சபைஅக்கிராசனர் திரு. சு மூத்தையா ஆசிரியர்கள் திரு. மு. சதாசிவம் திரு. சு. இரத்தினம் திரு நா. பாலசந்திர விநாயகர் பாலபண்டிதர் திரு. இ. சின்னையா வழக்கறிஞர்கள் திரு. ச. நாகலிங்கம் திரு. மு. கதிரவேலு முதலியோரால் திருவாளர் துரைசுவாமி அவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பெற்றமைக்குக் காரணமாய் அவரிடத் தமைந்துள்ள குணதிசயங்களும் அவர் ஆற்றிய ஆற்றவிருக்கும் தொண்டுகளும் இச்சபையோரே அவரை முதல்முறை 30-12-35 திங்கட்கிழமை சாயந்தரம் 6 மணியளவில் பிள்ளையார் பெருங்கதைத் தினத்தன்றும் திருவெம்பாவைத் தினமுமுள்ள சுபமுகூர்த்த தினத்தன்றே பிரதிநிதியாக முன்வருமாறுகேட்டு பிரேகரித்து அங்கீகரித்தனர். அவர்களின் வேண்டுகோளின்படியே அவரும் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பெற்றுரென விளக்கிக் காட்டப்பெற்றன. அதன்பின் பிரதிநிதியவர்கள் தம்மபிப்பிராயத்தை விளக்கிக்காட்டினர். பின்பு அக்கிராசனரின் பின்னுரையால் சபையோர் ஆனந்தமும் அதிசயமுமடைந்தனர். ஈற்றில் சபைக்காரியதரிசி திருவாளர் சி. செல்வத்துரை அவர்களால் நதிகூறக்கூட்டம் தேவாரபாராயணத்துடன் இனிது நிறைவேறியது முன்போல வரவேற்பு மகாநாட்டார் பிரதிநிதியவர்களை மோட்டார் ரதத்திலும் மேளவாத்திய சகிதத்துடனும் அராலிக்கிராமத்தைச் சுற்றியழைத்துச் சென்று பின்பும் அம்மன்கோவிலையடைந்ததும் சபைப்போஷகரைக்கொண்டு நதிகூறுவித்து தம்மில்லம் ஏகவிடுத்தனர். சுற்றுப்பிரகாரத்தின்போழ்து பல பிரபுக்களால் மாலைகள் சூட்டப்பெற்று உபசரிக்கப்பெற்றுர்.

கடிதம்




# கலாசக்கரம்

நாளும் கிட்டவரவர, தெரிவு நாட்டியமும் தாளகதியில் முதலாம் இரண்டாம் காலத்தைக்கடந்து மூன்றாங் காலத்தில் வந்துவிட்டது. ஆறுதலாய் ஓடிய தேர்கள் சரவேகமுற்றன. நாயோட்டமாக ஓடிய பிடிகாரர் பேயோட்டமாக ஓடுகின்றனர். சில பிடிகாரர் இராப்பகலற்ற இடம்மையில் வந்துவிட்டனர். சிலர் பின்னே தொடருகின்றனர். இவர்களோடு குடிகளும் சேர்ந்துகொண்டன. எங்கேபார்த்தாலும் காக்காய் குஞ்சுகளுக்குக் கலியாணமும் ஆங்காங்கெல்லாம் காவடி ஓட்டமும் தேரோட்டமுமாயின. தை மாசி என்னும் இந்த இரண்டு மாதங்களும் பொதுவாக எல்லாருக்கும் நல்ல வெட்டிவேளாண்மைக் காலந்தான். போக்குவரவு செய்யும் வண்டிகளும் கொடிதூக்கிச் செல்கின்றன. குழை வண்டிகள்மேலும் கொடியாடுகின்றது. மண்ணெண்ணெய் வண்டிகள் மாத்திரம் ஒரே கொள்கையுடையனவாய், கட்சிபேதம் சண்டைசச்சரவு இல்லாமல் சிவப்புக்கொடி தூக்கித்தகரச்சக்கூடிக்கொண்டு திரிகின்றன. விதம்விதமான துண்டுப்பத்திரங்கள், ஓடும் தேர்களிலிருந்து வெளியேபறந்து குதிக்கின்றன. சிலதேர்களில் ஈழத்து நாணயபத்திரங்களும் சாடிப்பறக்கின்றன. ஆனால், அவை வெளியே பறவாது காரின் உள்ளேயே தங்கியிருக்கின்றன.

* * *

தகுதி பணமுடைமையும், தகுதியின்மை பணமில்லாமையு மாயின. தம்பதிகளும் இணைபிரிந்து மாறுகைப்பற்றி ஆடும் மேனாட்டாரின் ஒருவகை நடனத்தைப் (டான்ஸ்) போல ஒரு சமயத்தவர் இன்னொரு சமயப் பிரதிநிதியையும் மற்றொரு சமயத்தவர் வேறொரு சமயப் பிரதிநிதியையும் கையிற் பிடித்துக்கொண்டு தெரிவு நாட்டியமாடுகின்றனர். தேசத்தொண்டின் நிலைமை சமயக் கொள்கையினாற் பாதிக்கப்படமாட்டாவென்பதை இது வலியுறுத்துகின்றது. "முதல் விழைந்தொருவனுட னியைந்தபொருள்பற்றி யின்புறமுயங்கினும், அதிகமென்ற பொருள் ஒருவன் வேறுதரின் அவனேயேயொழிய அறிவரோ" என்னும் பிரமாணத்தை ஆதாரமாகக்கொண்டு அநேகர் இந்தப் புதிய வழியிற் சித்தியடைந்தவராய்க் காணப்படுகின்றனர். சிலர் சோற்றுக்கடனையும், சிலர் நீர்க்கடனையும் வேறு சிலர் பட்டகடனையும் தீர்க்கின்றனர். வீட்டுமர் துரோணர் என்னுமிருவரும், தம்மைநம்பிச் சேனாதிபதியாக்கிய அரசனுக்குத் துரோகஞ்செய்து, எதிரிபக்கத்தாருக்குத் தமது உயிர்நிலை கூறியமைபோல, சிலர் சில இரகசியங்களை எதிரிபக்கத்தாருக்குப் பரகசியப்படுத்தி அவருக்கு வாலையும் இவருக்குத் தலையையுங்காட்டி இக்காலத்துக்கு மாரடிக்கின்றனர். (இக்காலப்-வாடை அதன் பரியாயநாமம்—கூலி)

* * *

மடியிற்பணத்தையும் பறித்துக்கொண்டு பிரிவாற்றுதவன்போல மாலைமாலையாகக் கண்ணீர் வடித்து, கடைவாசல் வரையிலே பின்தொடர்ந்து முதலாம் பேர்வழிகாரனை வழிவிட்டுத் திரும்பும் தாசி ஒருத்தியை, அதிக ஆவலோடு அப்போதானே தேடிவந்த இரண்டாம் பேர்வழிகாரன் கண்டு "கண்ணே! ஏன் அழுகிறாய்" நான் உயிரோடிருக்க உனக்கு வந்த குறையென்ன? என்று அவளுடைய முதுகைத் தடவிக்கொண்டு பரிந்து கேட்டானும்.

"நீர் எப்போ வருவீர் வருவீரென்று தீராக்கவலையுடன் மூன்றுநாளாக இந்தவாசலிலே உந்தப்பக்கத்தைப்பார்த்தபடி இந்தத்தலைவிரி கோலத்தோடேதான் நிற்கிறேன்" என்று அவள் தனது குலசம்பிரதாய முறையாக விடையிறுத்தாளாம். இந்தக்கதை வாயிலாக "போனவனுக்கழுத கண்ணீர் வந்தவனுக்குப்." என்னும் பழமொழி யொன்றுண்டாயது. சென்றவாரம் ஒரு தேரில் ஏறிவந்த பிடிகாரரை, அவர்களின் பார்வை மிருகம்போல்வார் சிலர். எதிர்கொண்டு உபசரித்தார்களாம்; வீடுகள்தோறும் அழைத்துச்சென்று சுபம்வரம் கூறினார்களாம். இரவு பன்னிரண்டுமணிவரையிலும் திக்குவிசயம் செய்தபின் அவர்களைத் தேரிலேற்றி விடைபெற்றுத் திரும்புதலுர், எதிர்க்கட்சியார் வேறொரு தேரில் வந்திறங்கினார்களாம். அவர்கள் அந்தப்பார்வை மிருகங்களைப்பார்த்து "இந்த அகாலவேளையில் ஏன் இங்கே நிற்கிறீர்கள்" என்று கேட்டார்களாம். நின்றவர்கள் "ஐயா! இரண்டு மூன்றுநாளாக நீங்கள் வருவீர்களென்று இராப் பன்னிரண்டுமணி வரையும் நாங்கள் இந்தத் தெருவிலேதான் காத்துநிற்கிறோம். இன்றைக்கு நீங்கள் வந்தது நல்லகாரியம். இன்று பொழுதுபட்டநேரம் தொடக்கமாக நாங்கள் வீடுவீடாய்த்திரிந்து காலும் ஓய்ந்துபோய்ச்சுது. இந்த ஊரிலே ஒரு தம்பியைத்தானும் மற்றப்பக்கத்தார் எடுத்துக்கொள்ளமாட்டார்கள். இப்போதான் வீட்டுக்குத் திரும்புகிறோம். நீங்களும் காத்திராப்பிரகாரம் வந்து சேர்ந்தீர்கள்" என்றார்கள். அந்தப் பிடிகாரரும் அவர்கள் சொன்னதை நம்பி மூன்றுமுறை நமஸ்காரம் செய்து விடைபெற்றுக்கொண்டு அபேட்சகரிடம் போய் "நாங்கள் போன ஊரிலே உங்களுக்காக வேண்டியகருமங்களை யெல்லாம் நிறைவேற்றிவிட்டோம். அந்தப்பகுதியைப் பற்றிய கவலையேனும் சிறிது சந்தேகமேனும் உங்களுக்கு இனிமேல் வேண்டியதில்லை." என்று கூறினார்களாம். அபேட்சகர் ஆனந்தமடைந்து, இந்த நாட்களிலே இந்தவிஷபமாகச் செய்யவேண்டிய சிறப்புக்களையும் பிறவுபசாரங்களையும் அவர்களுக்குச் செய்து விடைகொடுத்தனுப்பினார்களாம். தெரிவு விஷயமான கருமங்களெல்லாம் ஆகாயத்திலே கோடின்றி வட்டாடல் செய்வதுபோலவே நடைபெறுகின்றன.

* *

தத்தனென்று ஒருவன். தனதத்தனென்றும்ஒருவன். இருவரும் ஒருவரை ஒருவர் ஒவ்வாப் பரமலோபிகள். இந்த இரண்டுபேரும் ஒருமுறை அயலூருக்குப் போனார்களாம். உச்சிப்பொழுதாதலும், பணம் கொடுத்துச் சோற்றுக்கடையிலே பசியாற மனங்கொள்ளாதவர்களாய், இருவரும் ஒருபானையை அடுப்பேற்றி உலை வைத்தார்களாம். உலையும் கொதிக்கத்தொடங்கியது. சிறிதுவேளையின்பின் தத்தன் வெளியேசென்று சிறிய கற்களைவாரி அள்ளிக்கொண்டுவந்து தத்தனுக்குத் தெரியாதபிரகாரம் பானையினுள்ளே கொட்டிவிட்டானும். அரிசிச்செலவை வீணாக உண்டாக்காமல் தத்தனுடைய சோற்றில் ஒருபாகத்தைத்தானும் உண்டு பசியாறலாமென்று நினைத்த தனதத்தனும், சிறிய குறுணிக் கற்களை வாரிக்கொண்டுவந்து தத்தனறியாவண்ணம் உலையிற் கொட்டிவிட்டான். ஒருவரை ஒருவர் ஏமாற்றிவிட்டதாக மனதில் மகிழ்ச்சிகொண்ட இருவ்ரும் விறகை அடுப்பில் மாட்டுவதும் எரிப்பதுமாக அதிக நேரம் போக்கினார்கள். நெருப்பை ஊதியும் எரித்தும் பசியினால் அயர்ச்சியடைந்தபின் இருவரும் உலைமூடியைத் திறந்துபார்த்தார்களாம். குறுணிக் கற்கள் பானை விளிம்புவரையிற் குவிந்திருந்தன. ஒருவரையொருவர் ஏமாற்றி இருவரும் ஏமாந்துபோயினர். தத்தனையும தனதத்தனையும் போல்வார் இந்தத் தெரிவுப்போரிலும் கருமம் பார்க்கின்றனர். இவர்களின் முடிவும் அப்படியேயாம்.

* * *

ஒருவருக்கு "ஓம்" சொன்னால் கடைசிவரையும் அந்தவாக்கைக் காப்பாற்றும்நியதி ஒன்று சிலகாலத்துக்குமுன்னே பெரும்பாலாரிடம் காணப்பட்டது. ஓம் என்று ஒருவருக்குச் சொல்லிவிட்டால் இன்னொருவர் எத்துணை ஆற்றலுடையரேனும் "இல்லை" யென்ற பதிலையே பெறுவர். எல்லாரும் "நான்" என்று நிற்கும் இந்நாட்களிலே முந்திய தெரிவுக்காலங்களிற் கற்றுக்கொண்ட சம்பிரதாய முறைபற்றி யார் என்னகேட்டாலும் "இல்லை" யென்பதேயில்லை. அவர்வந்தாலென்ன; இவர் வந்தாலென்ன; வேறெவர் வந்தாலென்ன; வந்தவர் வராதவர் எல்லாருக்கும் 'ஓம் தடையில்லை; உமக்குத்தான்" என்ற ஒரேவாக்கியமே புறப்படும். இந்த நவீனமுறை பலரிடத்திலும் புதிதாகக் காணப்படுகிறது. எவர் வந்தாலும் அவரை எதிர்கொள்வதும் உபசரிப்பதும், பின்னே நெடுந்தூரம்சென்று ஓம்சொல்லி வழிவிடுவதும ஒரு சம்பிரதாயமாய்விட்டது. எல்லாம் வல்ல சித்தராயும இரண்டொருவர் உண்டு. இவர் வெள்ளையைக் கறுப்பாக்குவாராம்; கறுப்பை வெள்ளையாக்குவாராம்; சிவப்பை நீலமாக்குவாராம்; பச்சையை இரத்தநிறமாக்குவாராம். ஒரு நிறத்தை இலங்கைநாணயப் பத்திரத்துடன் சேர்த்து மந்திரசெபம் செய்தபின் ஒருவித ரசம்பூசுவாராம்; அதன்பின் ஒருவிதநீரை ஒருமுறை ஆசமனம் செய்யும்படி கொடுப்பாராம; சிலர் இரண்டுமுறையும் சிலர் மூன்றுமுறையும் ஆசமனம் செய்யவேண்டுமாம். இவர்கள் கைதேர்ந்த சித்தராமென்று பலரும பேசுகிறார்கள். இவருள் சிலர் கண்ணியம்வாய்ந்த உந்நதஸ்தானத்தை வகிப்போராவர். அங்கிருந்து செய்யுந்தொழில் சிறியதேயாயினும் அதன்மீதும அவர்மீதும் எமக்கு அனுதாபமில்லை. அத்துணை உந்நதஸ்தானத்தை இவர் வகிப்பதுபற்றியே நாம் நினைப்பதெல்லாம்.


## மருந்துச் சாக்குகளின் விளம்பரம்

இத்தாற் சகல வைத்தியர்க்கும், மருந்துச்சரக்கு வியாபாரிகட்கும் தெரிவிப்பதாவது:—இப்போது பெரியகடை மார்க்கட்டுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும் சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சரக்குக் கடையிலும், நல்லூர்வடக்குச் சட்டநாதர் கோயிலடியிலிருக்கும் மேற்படியாரின் மருந்துச் சரக்குக் கடையிலும், கஸ்தூரி, கோரோசனை, குங்குமப்பூ, காண்டாமிருகக் கொம்பு, சுத்தமான சிப்பி முத்தும் அடியிற் குறிப்பிட்டிருக்கும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்

| | களஞ்சு ஒன்றுக்கு | தோலா ஒன்றுக்கு |
|---|---|---|
| 1-ம் நம். கஸ்தூரி | 20—00 | 40—00 |
| ,, கோரோசனை | 3—25 | 7—50 |
| ,, குங்குமப்பூ | 50 | 1—20 |
| ,, முத்து | 14—00 | 32—50 |

1-ம் நம். காண்டாமிருகக்கோம்பு களஞ்சு ஒன்றுக்கு சதம் 50.
றாத்தல் ஒன்றுக்கு ரூபா 40.

மேலே சொல்லப்பட்ட சரக்குகள் எல்லாம் முதல்தரமான நல்லசரக்குகளே, எங்களிடம் நேரிலவந்து பார்த்துக்கொள்ளலாம். இன்னும் சுருள் தங்கம், புனுகு, பச்சைக் கற்பூரம் ஜவ்வாது, அரைத்த சந்தணம், சந்தணக்கட்டை, சந்தணவில்லை, சாம்பிறாணிப் பதங்கம், தைலம், முதலியவைகளும், சென்ற், அத்தர் முதலிய வாசனைத் திரவியங்களும், திறமான பன்னீர்வகைகளும், அபிஷேகத்திரவியங்களும், ஓமவாட்டர், சுருட்டுக்கோடாச் சரக்குவகைகளும் பலவிதமான திறம் ஊதிவத்திவகைகளும், மற்றும் மருந்துச் சரக்குவகைகளும் தொகைக்கும் சில்லறைக்கும் சரசமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

தஞ்சாவூர், மு. ஆபிரகாம் பண்டிதர் அவர்களின் சஞ்சீவி மருந்து வகைகளும்; திருச்சி, டக்றர் A. மதுரம் அவர்களின் குரு மருந்து வகைகளும்; யாழ்ப்பாணம், டக்றர் ஜே. வஸ்தியாம்பிள்ளை அவர்களின் மருந்துவகைகளும் இவ்விடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

வீ. பீ. மூலம் பெற விரும்புவோர், நான்கிலொருபாகத்தை முற்பணமாக அனுப்பவேண்டும். தொடுவாய்ப்பகுதிகளுக்கு முழுவதும் முற்பணமே அனுப்பவேண்டும்.

தபால், மணிஆடர் அனுப்பும் விலாசம்:

ஆ. இராசையா,
சே. சிவக்கொழுந்து அவர்களின் மருந்துச்சாக்குக் கடை
பெரியகடைத்தெரு, யாழ்ப்பாணம்.

(59) 29-12-35—12.



## விளம்பரம்

1936-ம்ஆண்டு மாசிமீ 15-ம்உ தொடக்கம் மாதக் கட்டணத்திற்கு குறைந்த வட்டியோடு அங்கத்தவருக்குக் கடன் வழங்கத்தக்க ஓர் ஒழுங்கு செய்திருக்கிறோம். அங்கத்தவராய்ச் சேர்ந்து குறைந்த வட்டிக்குப் பணம் பெற விரும்புவோர் நேர்முகமாயேனும் காகிதமூலமாயேனும் விபரங்களை அறிந்துகொள்ளலாம்.

T. SELLATHAMBY
Manager, The Lanka Benefit Co.
Vannarponnai
13-2-36

## நாகர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி.)

வரம் என மருஇ வழங்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பொழிற்கண் ஆரியச் சக்கிரவர்த்திகள் எனச் சிறப்புப் பெயர்பட்டுச் செங்கோல் செரீஇப் போதந்த மன் மரபினோரும் பல்லவரேயாவர். அதனுன் அம்மணிப்பொழிற்கூற் றம்மணி பல்லவம் எனப் பெயர்த்தாயிற்று. இதனுனும் ஆரியர் பல்லவரேயென்பது துணியப்படும். பல்லவர் வன்னியர் எனப்பட்டு யாழ்ப்பாணப் பொழிற்குணக்கண் இன்றுமுள ராதலுஞ் சான்ருகும். வன்னியென்பதோரூரினைத் தலையாகக்கொண்ட ஓர் பற்றுமுண்டு. பல்லவர், சேரசோழ பாண்டியர்களாகிய தமிழர்களைத் தாம் ஆரியர் என்பதுபற்றி வேறுபாடுகருதி நன்குமதியாதொழுகினமையிற் சாளுக்கிய வேந்தரைத் தழீஇய தமிழ் மன்னர்கள் பல்லவர்களைக் காலம்வாய்த்துழி ஒருங்குதொக்கு அடர்த்துக் கீழாக்கி வேறுபடுக்கப்பட்டமையானும் வேளாண்மை மேற்கொள்ளாது மறத்தொழிலே உழவுத்தொழிலாகக் கோடலான் நல்லொழுக்கம் வழீஇனமையானும் குறுநிலமன்மை (மன்மை—ஆட்சி)யும் படையாண்மையும் இழந்த வழிக்கீழோராகக்கருதி வழங்கப்பட்டமையிற் பல்லவரென்னும் பெயரைக்கீழோர்பொருள் ஒன்ருகத்திரிசொற்செய்து பிங்கலந்தை நிகண்டு கூறிற்றுப்போலுமென்ப. இன்னும் யாண்டும் வன்னியர் இழிந்தாராகக் கருதப்படுகின்றனர். தமிழகத்தே ஓரோவழிவாழும் ஈழுவர் என்பாரும இவர்போல இழிந்தாராகக் கருதப்படுகின்றனர். ஈழுவர் ஈழ்நாட்டினின்றும் போந்தார். (தலையினிழிந்த மயிரனையர், மாந்தர் நிலையி னிழிந்தக்கடை). பல்லவம் என்னும் வடசொற்குத் தளிர் என்பது பொருளாதலின் அப்பொருள்படப் பல்லவர் போத்தரசர் எனத் தமிழானுஞ் செய்யுள் செய்யப்படுவர். போத்து—தளிர் பல்லவர், படையாட்சிகள், வன்னியர், காடவர், பள்ளிகள், நுளம்பர் என்பன ஒரு பொருளனவாம். இவரெல்லாம் மறவரின்பாற்படுவர். எனவே ஆரிய மன்னரென்பார் தமிழகத்து வேளாண் மறவரேயாம்.

பல்லவர் தம் பல்லவி மொழியையும் ஆரிய வழக்க ஒழுக்கங்களையும் கைநெகிழ்த்துப் புக்க புக்கநாட்டு மொழியையும் ஆண்டை யாண்டைவழக்கவொழுக்கங்களையும் தொடர்ந்தமையிற் பல்லவர் நாகநாடேறி நாகரொடு கெழீஇ நாகராயினருமுளர். நாகத்தின்கட் (சாவகம்—Java) கி. பி. யாண்டு நானூற்றைமபதினுண்டாகிய கல்வெட்டும் பல்லவ எழுத்தும் இன்னும் காணப்படுவவெனப. பல்லவர் தொண்டைநாடு புக்கதன்பின்னர் தம்மையும் தொண்டைமான்களெனவும் நாகர் மகன்வழியினர் எனவும் புனைந்து சொல்லிக் கொண்டனர். இதனுற் பல்லவர் ஆட்சியின் முற்பட்டது தொண்டைமான்கள் காலமென்பதூஉம், தொண்டைமான்கள் நாகரென்பதூஉம், மறப்புகழாற் சிறப்புடையரா யிருந்தாரென்பதூஉம், அரசுரிமையிழந்தபின்னர் நன்கு மதிக்கப்படாமையின் அப்பெயரொழிந்து வேறு வேறு பெயர்களான் வழங்கப்பட்டனரெனவும் கருதிக்கொள்க. பல்லவர் ஆட்சிக்காலத்தும் நாகர்களாகிய தொண்டைமான்கள் படைத்தலைவராயும் குறுநில மன்னராயும் பின்னர் சோழராட்சிக்கண்ணும் அங்ஙனமாயும் சிறப்புப் பெற்றுள்ளார். இப்பொழுது இங்கிலண்டுத்திறையர் ஆட்சிக்கீழும் புதுக்கோட்டை மன்னர்கள் தொண்டைமான்கள் சிறப்புப்பெற்று வருகின்றனர். இவர்கள் தொண்டைநாட்டினின்றும் பல்லவரா னடர்ப்புண்டு தென்னுடுபோந்தனர்போலும். கலிங்கநாட்டைச் சீரழித்த கருணுகரத் தொண்டைமான் தொண்டைமான் வழியினனல்லன். பல்லவ மாபினன் இது கருணுகர வன்னியனெனவும் வழங்கப்படலானுணரப்படும். தொன்டைமானென்பது அரசர் தம்பெயராற் கொடுக்கப்பெற்ற சிறப்புப்பெயர். தொண்டைமான், பல்லவராயர், சேதிராயர், சோழகர், நாட்டார், வாண்டையார், பூண்டியார் என்ருற்போலும் அளவிறந்த சிறப்புப்பெயரையுடைய மறக்குடிகள் கள்வர் எனப்படும் மறவர்பாலும் அப்பெயர்களுள் சில பலவற்றையுடைய வேளாண் குடிகள் தொண்டைநாட்டு வேளாளர்பாலும் காணப்படுகின்றன. இவருள் வேளாள தமிழ்வேளாளரும் கள்வர் தமிழ்நாகரும் ஈழநாகருமாகக் கொள்க.

(ஈழ். சாவ—Java)

(தொடரும்)

நாடகப் பகுதி.

# தருமபுத்திரர் அல்லது துரோபதி துகில்

(மானிப்பாய். திரு. தா. சுவாமிநாதன் அவர்கள்.)

[உரிமை ஆக்கியோனுக்கே உரியது.]

அங்கம் 2. காட்சி 5.

இடம் :— காட்டில் ஓர் நச்சுப் பொய்கைக்கரை.

(நகுலன், சகாதேவன், அரிச்சுனன், வீமன் முறையே பொய்கையின் நீரைப்பருகி இறந்துகிடக்கின்றனர், தருமபுத்திரர் வருகின்ருர்.)

தருமர் :— (இறந்தவரைப் பார்த்து) ஆ என் தம்பிமாரே! பாவியேன் விழியாற்காண நீவிர் இங்ஙனம் கிடப்பதென்னே! யார்புரிந்த வஞ்சனையோ இது! தவமுனியின் இன்னலைத்தீர்ப்ப உழைதனைத் தொடர்ந்து சென்ருேமே! நெடுந்தூரம் விரைவிலோடினமையின் நாவறண்டு நீர்வேட்கை உண்டுபட, நீர்தேடிவந்து, இத்தடாகத்தருகில் இறந்து கிடப்பது உமக்கழகாமோ! நீர்க்கரையை எய்தியும் அள்ளிப் பருகுமுன் நும்மிளைப்புத்தான் நும்மைக் கொன்றதோ! என்னைத் தனியேவிட் டேகுவதற்கு யானுமக்குப்புரிந்த குறைதான் யாது! (நால்வர் முகங்களையும் உற்றுப்பார்த்து) என்னே புதுமை! எம்பியர் நால்வரும் இறந்தவர்போற் ருேன்ருது முகக்காந்தி படைத்தவராயிருக்கின்றனர். ஒருபோது யாம் மீண்டும் தம்மொடு அயர்செயச் செல்குவம் எனுமெண்ணம்பற்றி நம் பகைவரே இங்ஙனம் நிகழ வஞ்சனை புரிந்தனரோ! இம்மாயத்தினியல்பைப் பின்னர்ச் சிந்திப்பாம். இப்போ யானடைந்த பெருந் தாகத்தைத் தணிக்க, எனது நாவினை இப்பொய்கையின் நீரில் நனைக்குவன். (பொய்கையிலிறங்கிக் காத்தில் நீர் மொண்டனர்.)

அசரீரி :— இந்நீர் நச்சுநீராகும். அன்றியும் இது என் காவலிலுள்ளது. இதை அருந்துவையேல் உயிர் துறப்பை. நின் தம்பியர் நால்வரும் என்மொழி கேட்டிலர். ஆதலின் இங்ஙன மிறந்தனரென்றறிக.

தருமர் :— (விண்ணைநோக்கி) இங்ஙனம் மறைந்துநின்று வார்த்தையாடுபவன் நீயார்?

(உடனே அசரீரியாய்நின்ற அறக்கடவுள் ஓர் இயக்கனின் வடிவெடுத்துவந்து தருமரைப் பார்த்து)

இயக்கன் :— நானோர் இயக்கனுவன். உன்னை யான் வினவும் வினுக்களுக்கு விடைகூறுவையேல், இந்நீரை அருந்துவதற்கு விடுகுவன்.

தரு :— அங்ஙனமாயின் கடாவுக வினுக்களை.

இய :— பரிதியின் உதயம் யாவராலேற்படும்? அன்னுனுக் கணித்தாயிருப்பவர் யாவர்? அன்னுன் மறைவது மெங்ஙனம்? அன்னுனுக்காதாரம் யாது?

தரு :— உதயம் பிரமத்தாலேற்படும். அணித்தாயிருப்பவர் தேவர். மறையச்செய்வது தருமம். ஆதாரம் உண்மையேயாகும்.

இய :— ஒருவன் வித்தகனுவது எங்ஙனம்? உண்மையான உயர்வைத் தருவது யாது? துணையாயிருப்பது யாது? விவேகியாக்குவது யாது?

தரு :— மறைகளின் உணர்ச்சியே வித்தகனுக்கும். தவமே உயர்வைக் கொடுக்கும். விவேகமே துணையாவது. பெரியோர் சேவையே விவேகியாக்குவது.

இய :— உழவர்க் கின்றியமையாதது யாது? ஆக்கத்துக் கின்றியமையாதது யாது? பேறுகளுட் சிறந்தது யாது?

தரு :— உழவர்க்கின்றியமையாதது மழை. ஆக்கத்துக்கின்றியமையாதது பசு. பேறினுட் சிறந்தது நன்மக்கட்பேறு.

இய : எல்லாப்பேறு முடையவனுயினும் உயிரில்லாதிருப்பவன் யாவன்?

தரு :— இறைவனையும், விருந்தினரையும், சுற்றத்தவரையும், பிதிர்களையும், தன்னையும் திருப்திசெயயாதவன் உயிரோடிருந்தும் பிணத்துக் கொப்பாவன்.

இய :— உலகிற் பெரியது யாது? வானிலுயர்ந்தது யாது? வாயுவிற் கெதியுள்ளது யாது? புல்லின் மிகுத்தது யாது?

தரு :— அன்னையே உலகிற் பெரியள். தந்தையே வானிலுயர்ந்தவன். மனமே வாயுவில் வேகமுடைத்து. எண்ணமே புல்லின் மிகுத்தது.

இய .— கண்மூடா துறங்குவன யாவை? இருதயமற்றது யாது? தன்பெலத்தோடு விரிவது யாது? ஈன்றவற்று ளியங்காதது யாது?

தரு :— கண்மூடா துறங்குவன மீன்கள். இருதயமற்றது கல். தன் பலத்தோடு விரிவது யாறு. ஈன்றவற்றுளியங்காதது அரிட்டம்.

இய :— புறநாட்டுக்கேகியவனுக்குத் துணை யாவன்? இல்லறத்தானுக்குத் துணை யார்? பிணியாளனுக்குத் துணை யார்? இறப்பவனுக்குத் துணை யாது?

தரு :— புறநாட்டுக்கேகியவனுக்குத் துணை அந்நியனே. இல்லறத்தானுக்குத் துணை மனைவியே. பிணியாளனுக்குத் துணை மருத்துவனே. இறப்பவனுக்குத் துணை தருமமே.

இய :— தனியே இருப்பது யாது? மீண்டும் மீண்டும் பிறப்பது யாது? குளிருக்கு மருந்து யாது? வயல்களுட் பெரியது யாது?

தரு :— கதிரவனே துணையின்றி அலைவன். சந்திரனே மீண்டும் மீண்டும் பிறப்பது? தழலே குளிருக்கு மருந்து. பூமியே வயல்களுட் பெரியது.

இய :— சமயத்துக்குறுதி யாது? புகழுக்குறுதி யாது? இன்பத்துக் குறுதி யாது?

தரு :— சமயத்துக்குறுதி இரக்கம். புகழுக்குறுதி கொடை. முத்திக்குறுதி மெய்மை. இன்பத்துக்குறுதி நல்லொழுக்கம்.

இய :— புகழினிற் சிறந்தது யாது? செல்வத்துட்சிறந்தது யாது? ஊதியங்களுட் சிறந்தது யாது? இன்பத்துட் சிறந்தது யாது?

தரு : வித்தகமே சிறந்த புகழ். அறிவே சிறந்த செல்வம். தேகசுகமே சிறந்த ஊதியம். மனத்திருப்தியே சிறந்த இன்பம்.

இய :— தருமங்களுட் சிறந்தது யாது? மதங்களிற் சிறந்தது யாது? துன்பநிவிர்த்திக் குபாயம் யாது? யாரின் நட்பு உறுதியானது?

தரு :— கொல்லாமையே மேலாந் தருமம். வைதிக மதமே மேலாம் சமயம். மனவடக்கமே துன்பநிவிர்த்திக்கு உபாயம். பெரியோர் கேண்மையே உறுதியானது.

இய :— ஒருவன் மாண்பினையடைவதற்காய்த் துறப்பது யாது? எதனைத் துறக்கின் துக்கம் நாடாது? செல்வத்தின்பொருட்டுத் துறப்பது யாது? இன்பத்தின்பொருட்டுத் துறப்பது யாது?

தரு :— மாண்பினையடைய அகந்தையைத் துறக்க. துக்கம் நாடாது வெகுளியைத் துறக்க. செல்வத்துக் கேதுவாய் இச்சையைத்துறக்க. இன்பத்துக்கேதுவாய்ப் பேராவா துறக்க.

இய :— அறிவாவது யாது? சாந்தமாவது யாது? அடக்கமாவது யாது?

தரு :— பதிஞானமே அறிவு. மனச்சாந்தமே சாந்தம். மனவடக்கமே அடக்கம்.

இய :— சொல்லுநூல்களிற் பெரியதேது? இல்லறத்துக்குரியதேது? மல்லன் மாலையின் மணமுளதேது? நல்ல மாதவமேது?

தரு — நூல்களிற் பெரிய தரிய மெய்ச்சுருதி. இல்லறத்துக்குரிய தெண்ணுடை யில்லாள். மாலையின் மணமுளது வண்சாதி. நல்லமாதவம் தங்குலம்புரி நடையே. (தொடரும்)

## மாடு சிறக்க நாடு சிறக்கும்

நாட்டு மாடுகளை நாம் விருத்திசெய்யவேண்டும்!

நாட்டுமக்கள் பாலை அதிகமாக அருந்தவேண்டும்!

உயிரும் எலும்பும் கூரிய குண்டியுமுள்ள ஊர் நாம்பன்களை ஒருபோதும் உபயோகிக்கவேண்டாம்!

நல்ல இனமுள்ள காளைகளை (Stud Bulls) உபயோகியுங்கள்!!

இதற்காக, நீர்வேலிக் கிராமச்சங்கப் பொறுப்பில் ஓர், சீர்மைக் காளைமாடு (Stud Bulls) நிற்கிறது.

கமக்காரருக்கு ஒரு நல்ல தருணம்!

நல்ல அழகான மிருகம்!! நல்ல தேகபுஷ்டியுள்ளது!!!

கன்று { நாம்பனுனல் வடகரை மாடுபோல விலையுளதாகும். நாகானுல் போதும்போதுமென்னப் பால்பொழியும்.

உபயோகக் கட்டணம் ரூபா ஒன்றேயாம்

(84) 9-2-36-4.

## ஊர்உலாவி

M. R.

உவாஷிங்டன் என்னுமிடத்தில் நடந்த ஓர் விவாகத்தில் மணமகன் 6 அடியும் மணமகள் 6 அடியும் தோழன் 6அடி 4 அங்குலமும் தோழி 6 அடியும் உயரமுள்ளவர்களாயிருந்தனராம்.

o o o

கிரேக்க தேசத்தில் இனிமேல் நடக்கவிருக்கும் பொதுத்தேர்தல்களில் வாக்காளர்கள் தங்கள் பெருவிரல் அடையாளங்களை வாக்குச்சீட்டுகளில் பதித்து வாக்குரிமையைச்செலுத்தவேண்டுமாம். இதனால் ஒரு வாக்காளர் பலமுறை வாக்குக்கொடுப்பதை நிறுத்தலாமென எண்ணப்படுகிறது.

o o o

"ஒல்ட்வோக்கிங்" என்னுமிடத்தில் இளைப்பாறிய டேய் என்னும் பொலிஸ்குமஸ்தா 266 ருத்தல் நிறையுள்ளவராயிருந்தும் 12 விநாடியில் 100 யார் தூரம் ஓடுகிறாராம்.

o o o

அல்ஜியேரஸ் என்னுமிடத்தில் ஓர் கழுகு ஒரு சுருட்டுக் கிட்டங்கிக்குள் புகுந்து அங்குள்ள சுருட்டுகள் யாவையும் புதைத்ததாம். 12 மனுஷர்கள் ஒருங்குசேர்ந்து அதனைக்கலைத்தனராம்.

o o o

"சமோவாயா" என்னுமிடத்தில் 130 வயதுள்ள ஒருவர் தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது என்பதற்கியைய இப்பவும் உழுதே உண்கிறாராம் அவர்துபிதா 137 வயதிலும் மாதா 117 வயதிலும் காலகதியடைந்தனராம்.

o o o

குடித்துவிட்டுக் குறும்புத்தலம் செய்த ஓர் குற்றவாளிக்கு நடுப்பகல் தொடக்கம் பிற்பகல் மூன்று மணிவரையும் ஒருவருடனும் பேசாது ஓர் பிரபல முச்சந்தியில் நிற்க வேண்டுமென அமெரிக்க நீதிபதி "டயர்" தீர்ப்புச் செய்தனராம்.

o o o

"டெல்க்கர்" என்னும் 65 வயதுடைய ஒருவர் "மெஸ்னர்" என்னும் 22 வயதுக் கன்னிகையை விவாகஞ் செய்தனராம். இக் கன்னிகையின் பிதா 'மெஸ்னர்' இரண்டாந் தாரமாக "டெலக்கரி"ன் முதல்தாரத்தின் மகளை விவாகஞ் செய்தனராம்.

o o o

ஒருமுறை சவரஞ் செய்து தள்ளுந் தாடி $\frac{1}{64}$ அங்குலமாயிருந்தால் ஒருவர் 20 வயது தொடக்கம் 65 வயதுக்கிடையில் 71 யார் தாடியைச் சவரஞ் செய்து தள்ளுகின்றனராம். ஒரு சவரத்திற்கு 10 நிமிடங்கள் செல்லுமாயின் ஒருவர் 64 இரவையும் பகலையும் சவரஞ் செய்வதிலேயே கழிக்கின்றனராம்.

o o o

### இந்துமதத்தைத்தழுவிய ஆங்கிலமாது

திருவளர் செல்வி மேரி ஓல்ட்பீல்ட் என்னும் ஆங்கிலப் பெண்ணும் திருவளர் செல்வன் கிருஷ்ணு என்னும் வாலிபனும் கென்சிங்டனிலுள்ள ஓவிய காலாசாலையில் 1926-ம் ஆண்டு தொடக்கம் கல்வி பயின்று வந்தனர். இருவரும் 1930-ம் ஆண்டு நடந்த பரீட்சையில் சித்திபெய்தினர்கள் அந்நாட் தொடக்கம் ஒருவரையொருவர் காதலித்தனர். தற்போது அவர்களிருவருக்கும் லாகூரில் விவாகம் நடக்கப் போகின்றது. அப் பெண்மணி இந்துமதி யென்னும் நாமத்துடன் சைவசமயத்தைத் தழுவுகின்றனள். விவாகமும் சைவசமய விதிப்படியே நடக்கும்.

o o o

### காலத்தின் கோலம்

சான்பிரான்சிஸ்கோ என்னுமிடத்தில் மிஸ்கீவிற் என்னும்பெண் தன்

## அளவெட்டி அரசினர் வைத்தியசாலைத் தலைவர் திரு. ச. அ. சேதுநாதரின் பிரியாவிடைக் கொண்டாட்டம்

இந்தமாதம் 5-ம் திகதி பிற்பகல் 4 மணிக்கு அளவெட்டித் தேவாலயத்து அளவைக் கிறீஸ்தசமூகம் ஓர் பிரியாவிடைக் கூட்டம் நடத்தி திருவாளர் சேதுநாதரவர்களை உபசரணை செய்தது. தெய்வஆராதனை குறிப்புரை, பிரார்த்தனை முதலியன நடைபெற்றன. சபையாரும் வைத்திய சமுசாரமும் ஆலயத்தின் பக்கலில் அமரபிரதிமை படம் எடுக்கப்பட்டது. வாழ்த்துகவிகள் பாடப்பட்டன. கூட்டம் 6-மணிக்கு இனிது முடிந்தது.

## சீனாவிற் கஷ்டம்.

ஹோலங் தலைமையில் செம்படையினர் 50000 பேர் தலைநகரை வளைந்துகொள்ளப் புறப்பட்டிருக்கின்றனர். தலைநகரில் எழு பிரெஞ்சு பிஷப்புகளும் கனடாஸ்திரீ பாதிரிகள் பத்துப்பேருமிருக்கின்றனர். அவர்களின்நிலைமையைப்பற்றிக் கஷ்டமேற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அமெரிக்க பாதிரிகள் புறப்பட்டுப் போய்விட்டார்கள். செம்படைகள் குகிலியாங்குக்குப் பதினைந்துமைல் தூரத்திற்குள்ளாகவிருக்கின்றன.

தலைநகர்ப் பாதுகாப்புக்காக யூனானிலிருந்து படைகளும் விமானங்களும் செல்கின்றன.

---

பிதா தனக்கு 20-லட்சம் பவுண் பெறுமதியான சொத்தை முதிசமாயும் தான் பருவமடையும் வரையும் தன் தாய்க்குச் சீவிய உரித்துக் காட்டி மரண சாதனம் எழுதி வைத்துவிட்டு இறந்ததாகவும் தன் பொருளில் அவாவுற்றுத் தன் தாயானவள் தன்னை உலக அநுபவம் தெரியாத விதமாய் தன் வயதுச் சிறுவர் சிறுமியருடன் விளையாட விடாததுமல்லாமல் சில வைத்தியரைக் கொண்டு தான் கர்ப்பந் தரியா வண்ணம் தனக்குச் சத்திர வைத்தியமும் செய்வித்ததாகவும் ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு கோரி ஓர் வழக்குத் தொடர்ந்திருக்கிறாள். கோட்டார் தாய்க்கும் டக்டர்மாருக்கும் விருந்து பிறப்பித்திருக்கிறார்கள்.

## சுகாதாரவார 4-வது வருடக் கொண்டாட்டம்.

யாழ்ப்பாணம் 11.

இன்று யாழ்ப்பாண சுகாதார சங்கத்தின் நாலாவது சுகாதாரவாரக் கொண்டாட்டமும், கொண்டாட்டத்தைச்சேர்ந்த பொதுக்காட்சியும் செண்ட் சாள்ஸ் பள்ளிக்கூடத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொதுக் காட்சியை நீதிபதி திரு. M. T. அக்பார் அவர்கள் திறந்துவைத்தார்.


காலை சுமார் 9.30 மணிக்கு டாக்டர் டி. ஐசாக் தம்பையா உள்பட பல பிரமுகர்கள் திரு. அக்பார் அவர்களை வரவேற்றார்கள். பின்னர் நீதிபதி திரு. அக்பார் அவர்களை மத்தியில் கொண்டதான ஒரு குறூப் போட்டோ பிடிக்கப்பட்டது.

காட்சியைத் திறந்து வைத்த திரு. அக்பார் அவர்கள் எழுந்து பேசியதாவது:—

'இக்காட்சியைத் திறந்துவைக்கும் கௌரவத்தை இச்சங்கம் எனக்களித்ததற்காக நன்றி கூறுகிறேன். இச்சங்கம் உத்தியோகத் தொடர்பற்றதாயினும் இது யாழ்ப்பாணத்தில் புரிந்திருக்கும் நன்மை அதிசயிக்கத்தக்கது. இச்சங்கம் ஸ்ரீமதி ஸ்டப்ஸ் கொழும்பில் தொடங்கியிருக்கும் செஞ்சிலுவை இயக்கத்தைப்போன்றதாகும். இவ்விரண்டு இயக்கங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புகொண்டு ஒத்துழைக்குமென நான் எதிர்பார்க்கிறேன்."

பின்னர் இச்சங்கத்தின் போஷகரும் ஊர்காவற்றுறைக்குப் போட்டியன்னியில் அரசாங்கசபைக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டவருமான திரு. W. துரைசுவாமி, நீதிபதி திரு. அக்பாரைப் பாராட்டியும், சென்ற 5 வருடகாலத்தில் இச்சங்கம் பொதுஜன சுகாதார விருத்திக்காகச்செய்த பேருதவியைப்பற்றியும் எடுத்துக்கூறிப் பிரசங்கித்தார். ந—நி.


## ஓர் அரிய நற்செய்தி!




ஹூட்ஸ்ரொக் தமிழ் அச்சுப்பொறிகள்

### தமிழ்த்தாயை வளர்ப்பதற்கு மேலும் ஒரு சிறந்த வசதி!

தமிழிலுள்ள எழுத்துக்களையுமல்லாமல் 1234567890 / ? % —, . முதலிய இலக்கங்கள் குறிகளையும் ஸ்ரீ ஜ ஸ க்ஷ ஷ ஹ முதலிய சம்ஸ்கிருத எழுத்துக்களையும் இத் தமிழ் அச்சுப்பொறிகளினால் பொறிக்கலாம்.

கையினால் எழுதிப் படும் கஷ்டமும், கண்ணாடிகள் கொண்டு வாசிக்கும் சிரமமும் நீங்கின. கடிதங்கள், உறுதிகள் முதலியனவெல்லாம் திருத்தமாக 4அல்லது 5 பிரதிகளுடன் பொறித்துப் பாவிக்கலாம். உங்களுடைய சிரமமான எழுத்து வேலைகளெல்லாம் சந்தோஷமாகச் செய்யலாம். ஆங்கில ரைப் ரைட்டரில் உள்ள சௌகரியங்களெல்லாம் இதில் தவறாமல் உண்டு.

பரிசோதனை, பாவிக்கும் முறை, விலை விபரங்களுக்கு எழுதவும்.

தலைமைப் பிரதிநிதி:— இ. கே. நாதன்,
உவைமன்தெரு, யாழ்ப்பாணம்.

(77) 2-2-36—4


## வேளாண் கன்னி மரமேறிக்குப் பெற்றபிள்ளை

## பிறந்தவுடன் கொலை செய்யப்பட்டதாம்

### பொன்னுக்குட்டிக்கு விருந்து

யாழ்ப்பாணம் 11

சண்டிக்குளியைச் சேர்ந்த ஈச்சமட்டை என்னும் இடத்தில் வசிக்கும் செல்லம்மா என்னும் "கன்னிப்பெண்" ஓர் ஆண் குழந்தையைப் பிரசவித்து அதனை மறைவாகக் கொலை செய்தாளென யாழ்ப்பாணம் பொலிஸ் நீதிஸ்தலத்தில் குற்றம்சாட்டப்பட்ட வழக்கு மீண்டும் இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அவ்வமயம் மேற்படி செல்லம்மா என்னும் கன்னிப் பெண் கூறியதாவது:—

"நான் சிசுவைப் பிரசவித்தது உண்மையே. பொன்னுக்குட்டி என்னும் மரமேறிக்கே கர்ப்பவதியாய்ச் சிசுவைப் பிரசவித்தேன். என் அறியாமையின் காரணமாக இச் சிசுவைப் பெற்றேன், ஆதலால் என்னை மன்னிக்கவும். நான் பிரசவிக்கும் போது பொன்னுக்குட்டி மட்டுமே அருகே நின்றான். தூரத்திலும் ஓர் ஆள் நிற்கக் கண்டேன். அந்த ஆள் யாரென்று நான் பொன்னுக்குட்டியைக்கேட்டபோது 'அது ஆச்சிக்குட்டியின் மகன்' எனச் சொன்னான். கொலை செய்யப்பட்ட சிசு 2 மணியளவில் ஜெனித்தது. அது ஓர் ஆண் குழந்தை அது உயிருடனேயே ஜெனனமாயது. ஜெனனமான சிறிது நேரத்தின் பின் நான் அயர்ந்து நித்திரை போய்விட்டேன். அதன்பின் நிகழ்ந்தவை யாதும் அறியேன்." என்பதாகும்.

நீதிபதி வழக்கைத் தவணையிட்டுப் பொன்னுக்குட்டிக்கு வாரன்ட் பிறப்பித்துள்ளார்.

—நமது நிருபர்

## 69 பேர்கள் ஹிந்துக்களானார்கள்

சென்றவாரம் திருச்செங்கோடு தாலுக்கா எடப்பா கிராமத்தில் பல ஹரிசனங்கள் கிறிஸ்துமதத்தைவிட்டு இந்துமதத்தில் சேர்ந்துகொண்டார்கள். சேலம் வக்கீல் ஸ்ரீ கே. வி. சுப்பராவ் பி. ஏ., பி. எல். ஹரிசன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். பி. ஆதிகேசவலுசெட்டியாருடன் சுத்தியை நடத்தினர். ஹரிசனங்கள் குலகுரு சேசாருசெட்டியாருடனும் யூனியன போர்டு தலைவர் ஸ்ரீ சின்னண்டிப்பத்தருடனும் மேளவாத்தியத்துடன் ஊர்வலம்வந்து அழகாக அலங்கரிக்கப்பெற்ற சாவடியில், சடங்குகள் ஹோமம்வளர்த்தி நடத்தப்பட்டன.


## விளம்பரம்

கதிரமலைபி லுறைகின்ற கதிர்வேலே! நினது திருவடி அடையவருகின்ற பக்தகோடிகளுக்குத்தொண்டுபுரிவதற்காக விடையளித்தாய். 1927-ம்ஆண்டு மாணிக்ககங்கையிலிருந்து கதிரமலை சிகரம்வரை ரோட்டைத்திறக்க கதிர்வேலை! நீ நல்லோர்மனதில் நடனம் புரிந்து பணம்கொடுப்பித்த கருணையால் முற்றுப்பெற நெருங்கிவிட்டது. அன்றுட்தொடக்கம் நின்னைப்பின்பற்றி வரும் பக்தகோடிகள் தாகசாந்தி செய்தற்பொருட்டு கதிரமலைச்சிகரத்தே தண்ணீர்ப்பந்தலை அமைப்பித்தாய். பின்பு ஆங்கோர் திருக்குளமமைக்கும்பொருட்டும் விடைதந்தாய். அத்திருக்குளத் திருப்பணியை நடப்பிக்க யாழ்ப்பாண வாசிகளிற் சிலர் ஊக்கத்தைத் தருவித்து கார்த்திகை மாசம் துவக்கம் இதுவரையில் வேலை நடப்பித்து, பணவசதிக்குறைவினாலும் ஒருவரும் பணந்தாராதபடியாலும் வேலையை நிறுத்த உத்தேசித்திருக்கிறேன். பொருட்பாக்கிய முள்ள தனவந்தர்களாலும் கதிர்வேலை ஈகின்றாரில்லை. ஈந்தால் இவ்வருஷ முடிவிற்குள் நிறைவேற்றத் திடமுண்டு.

இதற்குப் பணமனுப்பும் விலாசம்:

ரமணசங்குசாது,
திசைமாறு போஸ்ட்.

(81) 9-2-36—12-4-36

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 6 } Chunnakam, Jaffna, 16th February 1936, Sunday. { No. 31

அகில இலங்கை

## ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

THE LANKA BENEFIT CO.,

GRAND BAZAAR, VANNARPONNAI, JAFFNA.

தலைமைக் காரியாலயம் :

பெரியகடைத்தெரு, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

கிளைக் காரியாலயங்கள்:

சங்கானை, காங்கேசன்துறை, சுன்னாகம்

பின்வரும் வகுப்புகள் இப்போ அமைக்கப்படுகின்றன

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | 5-ம் | வகு. | 1000/- ரூபா | 40/- | ரூபா | வீதம் | 25 | மாதத்திற்கு |
| B | 8-ம் | ,, | 500/- ,, | 20/- | ,, | ,, | 25 | ,, |
| C | 14-ம் | ,, | 250/- ,, | 10/- | ,, | ,, | 25 | ,, |
| D | 7-ம் | ,, | 125/- ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| BMC | 2-ம் | ,, | 250/- ,, | 10/- | ,, | ,, | 12½ | ,, |
| WC | 3-ம் | ,, | 250/- ,, | 5/- | ,, | ,, | 50 | கிழமைகட்கு |
| WD | 4 | ,, | 125/- ,, | 5/- | ,, | ,, | 25 | ,, |
| தினசரி | 6&7ம் | ,, | 100/- ,, | 1/- | ,, | ,, | | |

வேண்டிய விபரங்கட்குக் கீழ்க்காணும்விலாசத்திற்கு எழுதி அறிக.

மனேஜர், அகில இலங்கை ஆதாய எலச்சீட்டுக் கம்பனி

வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(175) 5-8-34

## திருநெல்வேலி ஒற்றுமைநிதி

(வரைவுளது)

அதிகாரம்பெற்ற மூலதனம் ரூ. 5,00,000

ஒரு பங்கு 25 சதமாக எண்பது மாதங்கள் செலுத்தி

ரூ. 25ம் ஆதாயமும் பெறலாம்.

தனிகத்தொழிலும் உணவுப்பொருள் வியாபாரமும்

திருநெல்வேலியில் இலாபகரமாய் நடக்கின்றது.

வேண்டிய இடங்களில்

கிளை ஸ்தாபனங்கள் திறக்கப்பெறும்.

தேசீயகருமங்களை வளர்ப்பதால்மாத்திரம் சுயேச்சை பெறமுடியும்

ஆதலால்

முதலைவளர்த்து, வேலையளித்து, கைத்தொழிலை உயிர்ப்பிக்கும்

நோக்கமுடைய இந்நிதியை ஆதரியுங்கள்.

இலகுவானமுறையில் இறுக்கக்கூடிய கடன்கள்கொடுக்கிறோம்

உயர்ந்த வட்டிவிகிதத்தில், தவணைக்கும் நிபந்தமாயும்

சம்பாத்தியத்திலும், நடைக்கணக்கிலும்

பணம் ஏற்றுக்கொள்ளுவோம்.

பங்குகளுக்கு முந்துங்கள்

கைராட்டினத்தில் நூற்ற நூலும், கைத்தொழில் பொருட்களும்

சந்தாவுக்கு ஏற்றுக்கொள்ளப்படும்.

வ.சோமசுந்தரம், காரியாதிகாரி

(30) 18-11-34—11-35.

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை

தெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும்,

கயிற்றுவகைகளும், நூல், வாளியும்

பலவிதமான சாய்ப்புச்சாமான்களும்

விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம்

நம்பர் நூல் தொகையாகவும் சில்லறையாகவும்

யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கம்

தொகையாகவும் சில்லறையாகவும்

பெற்றுக்கொள்ளலாம்.


மு. குமாரசாமிப்பிள்ளை,

பெரியகடை, யாழ்ப்பாணம்.

(2?) 19-2-34

## பவுண்மார்க் ஓடுகள்

இப்பொழுதும் விசேடமாக மதிக்கப்படுவதும் பவுண்மார்க் ஓடுகள் இவைகளே



இலங்கை இந்தியா முதலிய கீழைத்தேசங்களில் அனலுக்கும் குளிருக்கும் நலனுக்கும் பெலனுக்கும் பாவனைக்கும் மாதிரிக்கும் ஏற்புடைத்தாய், அழகும் அழுத்தமும் படிவும் மலிவும் மிருதுவும் மேன்மையுமுள்ளதெனப் பரீட்சித்த பலர் கண்ட சிறப்பும் தீர்க்கமுமுள்ள ஓடுகள் இவைகளே.

பவுண்மார்க் ஓடுகளெனச் சொல்லி மற்றைய ஓடுகளைக் காட்டும் போதும் சில பவுண்மார்க் ஓடுகளை இடையிடையே குறிப்பாக வைத்திருந்து எடுத்துக் காட்டித் தமது ஓடுகளை விற்பவரிடமும் கவனமாயிருங்கள். பவுண்மார்க் ஓடுகளின் ஏசண்டுகள் நாங்களே.

இங்ஙனம்

சி. வீரகத்திப்பிள்ளை அன்டு சன்ஸ்

(இவை விற்குமிடங்கள்)

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் { பெரியகடை | | சி. வீரகத்திப்பிள்ளை அன் சன்ஸ் |
| பறங்கித்தெரு | | |
| பருத்தித்துறை | .... | |
| வல்வெட்டித்துறை | | |
| காங்கேயன்துறை | | |
| காரைநகர் | .... | .... சி. க. ஆறுமுகம்பிள்ளை |
| ஊர்காவற்றுறை | | .... பி. ம. தம்பிஐயா அன் சன்ஸ் |

(103) 23-9-34.

## SRI LANKA BOOK DEPOT

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் – வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில் பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும், வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனா முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை,

வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்–மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1936-ம் வருஷம் பிப்ரவரிமீ 16-ந் உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.